
கல்கி
KALKI
2.6.1968
40
காசு



தரத்தை மதிப்பீராயின், தரும் விலைக்குத் தக்க மதிப்பைத் தருவது ரெக்ஸ்!

எங்கள் ஸ்க்வாஷ்கள், நேர்த்தியிலும் நேர்த்தியானவையாகப் பார்த்துப் பார்த்துப் பறித்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்டவை. பிறகு, தெள்ளிய தூய சீனிப் பாகும் வேறு பல விசேஷச் சரக்குகளும் சேர்க்கப்பட்டவை. எனவே, களைத்தறியாப் புத்துணர்ச்சி தரும் பானமாக உங்களை அடைகிறது ரெக்ஸ்.



கார்ன் பிராடக்ட்ஸ் கம்பெனி (இந்தியா) பிரைவேட் லிமிடெட், பம்பாய்-1.

Bensons 1966A-TM


கருத்தைக்
கவரும்
கோயா
விந்தைப்
படைப்பு
இது நாள் வரை நீங்கள்
கனவிலே கண்டு
நெஞ்சத்தைப்
பறிகொடுத்து வந்த
நறுமணப் பவுடரை
நனவாக்குகிறது,
புதுமுறையில் அமைந்த
கோயா, பனித்துளிக்கு
நிகரான இந்த பவுடர்
இந்த நாள் வரை
கண்டிராதபடி மைய
அரைக்கப்பட்டதும்
மிருதுவானதும் ஆகும்.
அது மட்டுமா? கோயா
நிபுணர்கள் இதில் புகுத்தி
யுள்ள பரிமளம் நாள் முழு
தும் நிலைத்து, புத்தம்புதிய
சுகந்தத்தைப் பரப்பிக்
கொண்டே இருக்கும்.
புதுமை மணம்
பொருந்திய 'பிளாக்
ரோஸ்' பூத்த புது
மலரின் வாசனை
வீசும் 'கார்டீனியா',
உள்ளத்தை அள்ளும்
'பாஸ்போர்ட்'—
நீங்கள் தேர்ந்தெடுக்க
இத்தனை நல்ல வாசனை
ரகங்களில் கோயா
கிடைக்கிறது. நெடு
நாள் நீடிக்கும் உயர
மான புதிய டின்னில்
மூன்றுமே வருகின்றன
என்பதை மறவாதீர்.
புதிய முறையில்
அமைந்த உயரமான
புதிய டின்னில் கிடைக்கும்
அருமையான பவுடர்
இந்த நறுமண
பவுடரைத்
தயாரிப்போர்
கோயா
பாரிஸ்
லண்டன்
நியூயார்க்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்)
லிமிடெட்
(இங்கிலாந்தில்
இணைக்கப்பட்டது)
AGC-5 TH

கல்கி


பொருளடக்கம்

இலக வைகாசி 20 :: ஜூன் 2

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



← படவிளக்கம் 16-ம் பக்கம் பார்க்க


சரி, இவை பெரிதானதும்
நான் சுட்டு விடுகிறேன்!
'சேன'க்கள்
PK



தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 27 □ இதழ் 44

இணைப்பு மொழி – ஒரே வழி

மத்திய அரசாங்கமோ அதன் மந்திரிகளோ ஹிந்தி ஆதரவாளரைத் திருப்திப்படுத்த என்ன செய்தாலும் அதை வெளிப்படையாகச் செய்யட்டும். பகிரங்கமாகத் தெரிவிக்காமல் சர்க்கார் இலாக்காக்களுக்கு உத்தரவுகள் அனுப்புவது சுற்றி வளைத்தோ ரகசியமாகவோ ஹிந்தியைத் திணிக்கப் போகிறார்கள் என்ற சந்தேகத்தைக் கிளப்பிவிடும்.

இந்தியாவில் உள்ள இளம் உள்ளங்களெல்லாம் இணைப்பு மொழி குறித்து மிகவும் சஞ்சலமடைந்துள்ளன. இந்த எதிர்காலத் தலைமுறையினர் இந்தியாவைச் சூழ்ந்து நாளுக்கு நாள் வளர்ந்து வரும் பொருளாதார நெருக்கடியை இன்னும் உணராமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் இணைப்பு மொழி பற்றிச் சிந்தியாமல் இருக்க முடியாது. ஏனெனில் அவர்கள் மனமெல்லாம் தங்களுக்குள்ள வேலை வாய்ப்புக்களைப் பற்றிய யோசனைகளில்தான் லயித்திருக்கும்.

ஒருவரது வாழ்க்கை என்பது என்ன என்று அலசிப் பார்த்தால், சர்க்கார் உத்தியோகம் அல்லது தனியார் துறையில் உள்ள தொழிலகங்களில் உத்தியோகம் அல்லது விவசாயம் இவற்றில் ஏதேனும் ஒன்றுதான். விவசாயத்தைப் பொறுத்தவரை அகில இந்திய ரீதியில் தொடர்புகொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் மற்ற இருவித உத்தியோகங்களும் அப்படியல்ல.

வாலிப வயதினரான ஆண் பெண்களின் உள்ளங்கள் இன்று சோர்வுற்று இருண்டு கிடக்கின்றன. தங்களுக்குத் தெரியாத ஒரு மொழி, ஆங்கிலத்தின் இடத்தைப் பறித்துப் பற்றிக்கொள்வதாகப் பயமுறுத்துவதே காரணம்.

இன்று பத்திரிகைகள், வர்த்தகம், பல்கலைக் கழகங்கள், நிர்வாகம் அனைத்திலும் ஆங்கிலமே ஆட்சி செலுத்தி வருகிறது. சரித்திரம், சம்பிரதாயம், கல்வி, அரசினரின் கொள்கைகள் அனைத்தும் சர்க்கார் உத்தியோகமே மற்ற எல்லா உத்தியோகங்களையும் விடச் சிறந்தது என்று நினைக்கக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கின்றன. நாடு வெகுவாக முன்னேற்றம் அடைந்து மக்களின் வாழ்க்கை முறைகள் மாறும் வரை இந்நிலைமையேதான் நீடிக்கும்.

நாட்டின் ஒரு பகுதிக்குரிய மொழி மற்றப் பகுதிகளின் மீது ஆதிக்கம் செலுத்தி வெற்றி பெற முயலுமேயானால் அதை மற்றப் பகுதியினர் வாளாவிருந்து பொறுத்துக் கொள்ள மாட்டார்கள். நாடு சுதந்திரம் பெற்றதன் பின் விளைவாகவோ அல்லது தேசபக்தி காரணமாகவோ அல்லது ஒழுக்கம் கருதியோ இம்மொழி ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயற்கைக்கு விரோதமாகும். பல ராஜ்ய மக்களுக்கு ஹிந்தி ஓர் அந்நிய மொழியாக விளங்குகிறது. இந்த ராஜ்யங்களின் மக்கள் சிறு சிறு கூட்டத்தினர் அல்ல. ஐரோப்பாவில் உள்ள பல சுதந்திர நாடுகளின் மக்கட்தொகையை விட இந்த ராஜ்யங்களில் உள்ள ஜனத்தொகை அதிகம். இத்தகைய பெரிய ஜன சமுதாயங்கள் யுத்தத்தில் தோல்வி அடைந்து அதன் காரணமாகத் தாழ்ந்த நிலையை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏதுமில்லாதபோது மொழி ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்வது இயற்கையே. ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மற்ற பிரதேசத்தவரை விடத் தாங்கள் எந்த விதத்திலேனும் உயர்ந்தவர்கள் என்று நிரூபிக்காதபோது எதிர்ப்புமேலும் இயற்கையானதாகிறது.

இயற்கை மட்டுமின்றி, சரித்திரமும் ஆங்கிலமே இணைப்பு மொழியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. எத்தனையோ பல ஆண்டுகளாக எந்தெந்தத் துறைகளிலெல்லாம் இணைப்பு மொழி அவசியமோ அந்தத் துறைகளிலெல்லாம் ஆங்கிலம் நமக்குத் திறமையான பணி புரிந்திருக்கிறது. சரித்திரத்தையோ, மனித இயல்பையோ நாம் மாற்ற முடியாது. பலவந்தமாக மாற்றினால் தேசிய ஒருமைப்பாட்டைக் குலைக்க முற்பட்டவர்களாவோம்.

இயற்கையும் சரித்திரமும் மட்டுமல்லாது இன்றைய சர்வதேச நிலைமையும்

விவகாரங்களும் ஆங்கிலத்தை நன்கு அறிந்து கொள்ள வேண்டியதை அவசியமாக்குகின்றன.

பகுத்தறிவுக்குப் பொருத்தமானதும் மனித இயல்புக்கு ஒத்து வருவதுமான முடிவு ஒன்றுதான். சரித்திர ரீதியாக ஆராய்ந்தாலும் சர்வதேச நோக்குடன் பார்த்தாலும் முடிவு ஒரேவிதமாகத்தான் இருக்க முடியும். அகில இந்திய இணைப்பு மொழியாக ஆங்கிலம் நீடிக்க வேண்டும். ராஜ்யங்கள் அந்தந்தப் பிரதேச மொழிகளில் காரியங்களைச் செய்துகொண்டு போக வேண்டும்.

இந்நிலையை மாற்றி ஆங்கிலத்துக்குப் பதில் வேறு ஒரு மொழியைக் கொண்டு வருவது அலெக்ஸாந்திரியாவில் இருந்த மாபெரும் நூலகத்தை அறிவற்ற ரோமானிய வீரர்கள் நெருப்பு வைத்துக் கொளுத்திய சோகமான நிகழ்ச்சிக்கு ஒப்பாகும். அறிவு ஒளியை இருட்டடிப்புச் செய்து நம்மை நாமே கஷ்டத்துக்கு உள்ளாக்கிக் கொள்ளாதிருப்போம்.

வேலை நிறுத்தமும் தொழிலாளர்களும்

தொழிற் சங்கங்கள் வேலைநிறுத்தத்தில் இறங்குவதற்கு முன் ரகசிய வோட்டெடுப்பின் மூலம் தொழிலாளர்களின் விருப்பத்தைக் கண்டறிந்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த இலங்கை அரசாங்கம் ஒரு மசோதா கொண்டுவர இருக்கிறது.

பெருவாரியான தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை விரும்புவதில்லை. தலைவர்களின் கட்டளைக்குப் பயந்து வேலைநிறுத்தத்தில் இறங்குகிறார்கள். இதனால் கஷ்டமும் நஷ்டமும் அடைபவர்கள் தொழிலாளர்களே. பல சந்தர்ப்பங்களில் வேலைநிறுத்தத்துக்குத் தலைவர்கள் சொல்லும் காரணங்கள் மிகமிக அற்பமாக இருப்பதாகத் தொழிலாளர்களே உணர்கிறார்கள். இருந்தும் தங்களுக்கும் நாட்டுக்கும் நஷ்டம் விளைவிக்கும் வேலை நிறுத்தத்தில் அவர்கள் இறங்க வேண்டியிருக்கிறது. இத்தகைய சூழ்நிலை நிலவுவதற்குக் காரணம் என்ன?

சமீபத்தில், சர்க்கார் துறையில் எஃகுத் தொழிற்கூடங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தங்களைப்பற்றி ஆராய்ந்து வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கை கவனத்துக்குரியது.

பல தொழிற் சங்கங்கள் அரசியல் சார்புடையனவாக இருத்தலால், ராஜ்ய சட்டசபைகளிலும் டில்லி மக்கள் சபையிலும் நிலவும் அரசியல் காரணங்களுக்காக— அங்கு தங்கள் செல்வாக்கைக் காட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் — வேலைநிறுத்தங்கள் தொழிற்சங்கத் தலைவர்களால் நடத்தப்படுகின்றன என்று அந்த அறிக்கை கூறுகிறது.

தொழிற் சங்கங்கள் பெரும்பாலும் கம்யூனிஸ்ட் கட்சி சார்புடையனவாகவோ, காங்கிரஸ் கட்சி சார்புடையனவாகவோ இருக்கின்றன. சட்டசபைகளில் இந்தக் கட்சிகள் தங்கள் பலத்தைக் காட்டிக் கொள்ள, போட்டி போட்டிக் கொண்டு, தொழிலகங்களில் உள்ள தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு வேலைநிறுத்தத்தில் ஈடுபடச் செய்கின்றன. கெரோக்களில் இறங்கச் செய்கின்றன.

மத்தியப் பிரதேச அரசாங்கம் தொழிலாளர் சார்பில் பேச ஒரே ஒரு தொழிற் சங்கத்துக்குத்தான் அங்கீகாரம் அளித்துள்ளது. அதன் காரணமாக அங்கு பிலாயிலுள்ள தொழிற்சாலையில் வேலைநிறுத்தங்களும் தகராறுகளும் குறைவாக இருக்கின்றன. வங்கத்தில் அப்படியில்லை.

துர்க்காபூரில் சென்ற ஆண்டு மார்ச்சு முதல் செப்டம்பருக்குள் 95 கெரோக்கள் நிகழ்ந்துள்ளன. கெரோக்கள் என்றால் என்னவென்று விளக்க வேண்டியதில்லை — தொழிற்கூட அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்டு கொடுமைப்படுத்துதல்! தொழிலாளர்களின் அத்துமீறிய போக்கின் காரணமாக 1967 மார்ச்சு முதல் ஜூலை வரையில் உள்ள இடைப்பட்ட காலத்தில் தொழிற்கூட யந்திரங்களுக்கு விளைந்த சேதம் 12.70 கோடி ரூபாயாம்!

சர்க்கார் துறை நிறுவனங்களுக்கு விளைவிக்கும் நஷ்டம் யாரோ தனி முதலாளிக்கு விளைவிக்கும் நஷ்டமல்ல. மக்கள் வரிப் பணத்தைக் கொண்டும் எதிர்கால மக்களைப் பணயம் வைத்து வாங்கப்படும் அந்நியக் கடனுதவி கொண்டும் நிறுவப்படும் தொழிற்கூடங்களுக்கு ஏற்படுத்தும் நஷ்டமாகும். அவைகளுக்கு விளைவிக்கும் நஷ்டம் மக்கள் தங்களுக்குத் தாங்களே நஷ்டம் விளைவித்துக் கொள்வதாகும்.

இதையெல்லாம் நமது தொழிலாளர்கள் அறியாதவர்கள் அல்ல. ஆனால் அவர்கள் அரசியலில் சம்பந்தப்பட்டவர்களைத் தலைவர்களாகக் கொண்டு இயங்குவதால் கண்ணை மூடிக்கொண்டு நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படி அரசியல் கட்சியுடன் தொடர்பு கொண்டவர்களாக இன்றையத் தொழிலாளர்கள் நடந்து கொள்வதால் நாட்டில் பெருவாரியான பொதுமக்களின் அன்பையும் அனுதாபத்தையும் இழந்து விட்டார்கள்.

சமீபத்தில் பம்பாய் பஸ் தொழிலாளர்கள் அரசியல் கட்சித் தலைவர்களின் கட்டளையை ஏற்று வேலைநிறுத்தம் செய்தபோது, பொது மக்கள் எவ்வளவோ அவதிப்பட்டாலும், தொழிலாளர்களுக்குப் பணிய வேண்டாம் என்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டார்கள். மக்களின் மனப் போக்கை எடை போட இந்நிகழ்ச்சி ஒன்று போதும்.

ஆகவே, ஒவ்வொரு தொழிற்கூடத்திலுமுள்ள தொழிலாளர்கள் தங்கள் சங்கத்துக்குத் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரைத் தங்களுக்கிடையிலிருந்தே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். வெளியாட்களை அறவே ஒதுக்க வேண்டும்.

இப்படி இயங்கும் தொழிற்சங்கங்களின் மதிப்பும் பலமும் செல்வாக்கும் முன்னை விட அதிகமாக இருக்கும்.

ராஜாஜியின் கருத்துக்கள்

காங்கிரஸ் தோல்வி அடைந்தால் அது பெரிய பரபரப்பூட்டும் செய்தியாக இருந்தது ஒரு காலத்தில். ஆனால் இன்று காங்கிரஸ் வெற்றி பெறுவது என்பது ஏதோ ஓர் அற்புத நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. காங்கிரஸுக்கு சஸ்திர சிகிச்சை மூலம் மாற்று இருதயம் அளிக்கப்பட்டது போன்ற நிலையை ஹரியானா தேர்தல் ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியப் பத்திரிகைகள் அனைத்திலும் இச் செய்தி கண்ணைக் கவரும் விதத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. ''வெற்றி பெற்ற காங்கிரஸுக்குச் சுலபமான, சுமுகமான எதிர்காலம் இருக்கும் என்று தோன்றவில்லை'' என்று ''இந்தியன் எக்ஸ்பிரஸ்'' தனது தலையங்கத்தின் முடிவில் கூறுகிறது. எத்தனை ஓட்டுக்கள் வித்தியாசத்தில் காங்கிரஸ் அபேட்சகர்கள் ஜெயித்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கும் போது எக்ஸ்பிரஸ் இவ்வாறு கருதுவதற்குத் தகுந்த காரணம் இருப்பதை அறிகிறோம்.

பெருவாரியான ஸ்தானங்களை காங்கிரஸ் கைப்பற்றியுள்ள போதிலும் ஓட்டுக்களின் எண்ணிக்கையை அலசிப் பார்க்கும்போது, செல்லுபடியாகும் மொத்த வோட்டுக்கள் 25,40,513 என்பதையும் இவற்றில் காங்கிரஸ் பெற்றது 11,14,074 என்பதையும் காண்போம். இது 43.8 சதவீதமாகும். எதிர்க் கட்சிகளுக்குக் கிடைத்த மொத்த ஓட்டுக்கள் 14,26,439. இது 56.1 சதவீதமாகும். எதிர்க் கட்சிகள் பெற்ற ஓட்டுக்கள் காங்கிரஸ் பெற்றதை விட மிகவும் அதிகம்.

ஹரியானா தேர்தல் முடிவுகளில் திருப்திப்படுவதற்குரிய விஷயம் என்னவெனில் மக்களை உணர்ச்சி வசப்படுத்தக் கூடிய விதத்தில் பாகிஸ்தானுக்கு எதிராகவும் முஸ்லிம்களுக்கு எதிராகவும் ஜனசங்கம் கோஷங்களை எழுப்பி, பிரசாரம் செய்தபோதிலும் அந்தக் கட்சி அதன் நிர்வாகிகள் வெகு நம்பிக்கையுடன் எதிர்பார்த்த அளவுக்கு மக்களின் ஆதரவைப் பெற முடியவில்லை என்பதே. இது அரசியல் ரீதியில் நன்னம்பிக்கையை வளர்க்கிறது. ஆனாலும் பொருளாதார ரீதியில் புதை சேற்றுக் குழிகள் அப்படியேதான் இருக்கின்றன. ஹரியானா புதுதில்லி என்ற வீட்டின் வராந்தா போல. மத்திய மந்திரிகள் அனைவரும் இந்த வராந்தாவில் உலவி வந்து மந்திரிகள் என்ற ஹோதாவில் முழு செல்வாக்குடன் தேர்தல் பிரசாரத்தில் பங்கு கொண்டார்கள்.

ஒரு விஷயம் தெளிவாகத் தெரிகிறது. பாகிஸ்தானை நிதானிக்கச் செய்வதில் கோஸிஜின் திறமை மிக்கவராக இருக்கிறார் என்பது தான் அது. டாஷ்கெண்டில் அவர் இவ் விஷயத்தில் வெற்றி பெற்றார்.

டாஷ்கெண்டிலிருந்து ஸ்ரீ லால் பகாதூர் திரும்பி வந்து தாம் தொடங்கிய நற்பணியைத் தொடராமல் அங்கேயே இறந்து போனது பாகிஸ்தான், இந்தியா இரு நாடுகளுக்குமே ரொம்பவும் துரதிர்ஷ்டம்தான். ஆனால் தேசிய லட்சியங்களை மரணம் வெற்றி கொள்ள நாம் விடக்கூடாது.

ஸ்ரீமதி இந்திரா காந்தி தமது தனிச் சிறப்புக்களாலும், ஜவாஹர்லால் நேருவின் மகள் என்பதாலும் பாகிஸ்தான் சர்க்காருடையவும் மக்களுடையவும் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமாகியிருக்கிறார். இதே போல் இந்திய மக்களின் மரியாதைக்கும் பாத்திரமாகியிருக்கிறார்.


லால்பகாதூர் டாஷ்கெண்டில் தொடங்கி வைத்த நற்பணியை அவர் தொடர்ந்து, நல்ல முடிவுக்கு வருவதைத் தமது லட்சியமாகக் கொள்ளலாம்.

ஃஃஃ

பிரதம மந்திரி அயல் நாடுகளுக்குச் சென்றுள்ளார். தைரியமாகவும் நன்றாகவும் பேசி வருகிறார். தன்னைத் தானே சார்ந்து நிற்பதும், அண்டை நாட்டவருடன் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் வளர்த்துக்கொள்வதும் மிகவும் நல்லது. ஆனால் ஆஸ்திரேலியா, நியூஜிலாந்தை விட இன்னும் அருகில் இருப்பவரிடம் இம்முயற்சியில் தொடக்கத்தைக் காண வேண்டும் நாம். அண்டை ராஜ்யம் என்னும்போது பாகிஸ்தானே முதலிடம் பெறுகிறது. இடையூறுகள் எவ்வளவாயினும் சோர்வு அடையாமல் நட்புக்கும் நன்னம்பிக்கைக்கும் பாடுபடவேண்டும்.

தூரத்தை மட்டும் வைத்துக் கணக்கிடாமல் பார்த்தால் சரித்திரம் பிரிட்டனையும் அமெரிக்காவையும் நமது சிறந்த அண்டை நாடுகளாக்கியிருக்கிறது. அவர்களை அலட்சியப்படுத்துவது தவறு என்றால் அதைவிட பெரிய குற்றம் அவர்களால் நமக்குக் கிடைக்கும் ஆதாயங்களுக்குப் பதிலாக நன்றி கெட்ட தன்மை, நம்பிக்கையின்மை இவற்றை வெளிப்படுத்துவது.

காமகோடியின்...



...கருணைமொழி

இந்தக் காலத்தில் 'டின்னர்' நடத்துகிறார்கள். 'டோஸ்ட் ப்ரபோஸ்' பண்ணுகிறார்கள். 'உன்னுடைய சுகத்துக்காக நான் சாப்பிடுகிறேன்' என்று சொல்லிக் கொண்டு ஒருவன் உண்கிறான். 'சாப்பிடுகிறவன் இவன். அது இவனுக்குத் தானே புஷ்டி தரும்? இவன் இன்னொருவனுடைய சுகத்துக்காகச் சாப்பிடுவதாகச் சொல்லி விட்டால், அந்த இன்னொருவனுக்கு எப்படிப் புஷ்டி கிடைக்கும்?' என்று கேட்கலாமா ?

இதெல்லாம் ஒரு வகை மனோபாவம். இந்த மனோபாவமே ஒருவனுக்குப் புஷ்டி கொடுக்கிறது.

இப்படியே யாகங்களில் நாம் அக்னியில் போடுகிற ஆஹுதிகள், அவிசுகள் யாவும் தேவதைகளுக்குச் சக்தி கொடுக்கின்றன. இவ்வாறு பாவித்து நாம் யக்ஞம் செய்தால் தேவர்களும் அப்படியே பாவித்து நமக்கு அநுக்கிரகம் செய்வார்கள்.

ஆயிரமாயிரம் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட

பொன்னியின் செல்வன்

அமரர் **கல்கி**யின்

மகோன்னதப் படைப்பு

ஆகஸ்ட் 4உ **கல்கி** இதழில்

ஆரம்பமாகிறது





''போர்ட்டோரிக்கோவின் வளர்ச்சியை நம் நாட்டுடன் ஒப்பிட்டு நோக்குவதற்கில்லை. அது அமெரிக்காவின் ஒரு பகுதியே. அமெரிக்காவின் செல்வச் செழிப்பு அதன் துரிதமான முன்னேற்றத்துக்கு வழிவகுத்துக் கொண்டிருக்கிறது'' என்றார் முதல்வரின் காரியதரிசி திரு சொக்கலிங்கம்.

''யேல் பல்கலைக் கழகம் தவிர கான்ஸாஸ் ஸ்டேட் சர்வகலாசாலைக்கும் சென்றிருந்தீர்கள் அல்லவா?''

''கான்ஸாஸ் ஸ்டேட் சர்வ கலாசாலையில் சுமார் ஒரு மணி நேரத்துக்கு அண்ணா ஒரு ஆங்கிலச் சொற்பொழிவாற்றினார்.''

''கேட்கக் கொடுத்து வைத்தவர்கள் அன்று அசந்து போயிருப்பார்கள். தமிழை எத்தனை காவை நாம் சினிமாவில் பார்க்கிறோமல்லவா? அதேபோல்தான். ஆனால் இங்கு கண்ணுக்கு மெய்யாக அந்தச் சரித்திர காலத்தில் நாமும் வாழ்கிறோம். 'இருநூறு ஆண்டு சரித்திரத்தைப் பாதுகாக்க இத்தனை பாடுபடுகிறார்களே அமெரிக்கர்கள்! நமது இரண்டாயிரம் ஆண்டுச் சரித்திரத்தை, உன்னதமான கலைகள் வளர்ந்த கதையை எடுத்துச் சொல்ல இதுபோன்ற எத்தனை சரித்திர உலகங்களைப் படைக்க வேண்டும் நாம்!' என்று அண்ணா ஏங்கவே ஆரம்பித்து விட்டார்!''

''பின்னர் ஸான்பிரான்ஸிஸ்கோ சென்றீர்கள் இல்லையா?''

சொக்கலிங்கம் தம் கைக்கடிகாரத்தை ஒரு முறை பார்த்துக்கொண்டார். நாலு மணிக்கு

கண்டார், வெற்றி கொண்டார்!

(சென்ற வாரத் தொடர்ச்சி)

திறம்படக் கையாள்கிறாரோ அதற்கு இம்மியும் குறைவில்லாமல் அதே அளவுக்கு வேகமும் அழுத்தமும் இனிமையும் குழைவும் நளினமும் நகைச்சுவையும் சேர்த்து அழகுறப் பேசுபவராயிற்றே அண்ணா. சரி, டிஸ்னிலாண்டில் அண்ணாவுக்கு மிகவும் பிடித்தமான விஷயம்?''

'' டிஸ்னிலாண்டை விடக் கொஞ்சம் அதிகமாகவே அண்ணாவுக்குப் பிடித்திருந்தது, இன்னொரு விஷயம். பழங்காலத்திய அமெரிக்கா எப்படிக் காட்சி அளித்ததோ அந்தச் சரித்திர கால உலகை இன்று மீண்டும் சிருஷ்டித்து வைத்திருக்கிறார்கள். அங்கு சிறகுகளாலான தலைப்பாகை அணிந்து, வில்லும் அம்பும் ஏந்திச் சிவப்பிந்தியர்கள் வளைய வருகிறார்கள். 'கௌ பாய்' எனப்படுவோர் குதிரைகளில் விரைகிறார்கள். பழங்காலத்திய அமெரிக் அண்ணாவின் இல்லத்துக்கு வருவதாகச் சொல்லியிருந்தார் அவர். ஸான் பிரான்ஸிஸ்கோவை விட்டு விட்டு ஹானலூலுவுக்குத் தாவினார்.

''ஹவாய் பல்கலைக் கழகத்தை யொட்டி ஈஸ்ட் — வெஸ்ட் ஸெண்டரும் உள்ளது. கிழக்கும் மேற்கும் சந்திக்கும் இடம் என்று ஹவாய்த் தீவுகள் கருதப்படுகின்றன. அதனால் இந்த நிறுவனத்துக்கு இப்பெயர் இட்டிருக்கிறார்கள். கிழக்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் அறிஞர்கள் இங்கு வந்து பல துறைகளில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். தமிழகத்தில் ஆழ்வார்குறிச்சியில் ஹவாய்



சென்னை விமான நிலையத்தில் அமெரிக்காவுக்குப் புறப்படுவதற்கு முன்னால் அமெரிக்க கான்சல் ஜெனரல் ஆல்பிரட் பிராங்க்ளினோடு உரையாடுகிறார்.

பல்கலைக் கழகத்தின் ஒத்துழைப்புடன் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.''

''சேலம் எஃகு ஆலை எப்போது என்ற பிரச்னைக்கு விடை காண ஜப்பானில் அண்ணா முயன்றார் போலிருக்கிறதே?''

''மத்திய அரசினர் கொஞ்சம் மனம் வைத்து விட்டுக் கொடுத்தால் ஆலை உருவாவதில் தடையே இல்லை. ஜப்பானுக்கு இங்குள்ள கனிப் பொருள்களை ஏற்றுமதி செய்து, அதிலிருந்து கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஜப்பானியரின் ஒத்துழைப்புடனேயே இங்கு எஃகு ஆலையை நிறுவிவிடலாம். ஆனால் புது தில்லி சர்க்கார் அந்நியச் செலாவணியெல்லாம் தங்களுக்கே வந்து சேர வேண்டும் என்ற கொள்கை வகுத்திருக்கிறார்கள். நாம் நேரடியாக ஜப்பானியருடன் இது விஷயத்தில் வர்த்தக — தொழில் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கில்லை. இது தான் தடை.''

''சேலம் எஃகு அப்படியொன்றும் தரத்தில் உயர்ந்ததில்லை என்கிறார்களே?''

''உண்மை. ஆனால் அதில் பிரச்னை இல்லை. அந்தக் கனிப்பொருளை இறக்குமதி செய்யத் தயாராக இருக்கும் ஜப்பானியர் 25 சத விகிதமே இரும்பு உள்ள கனிப் பொருளை மேலும் வளமாக்க இங்கே ஓர் ஆலையை நிறுவவும் சித்தமாக இருக்கிறார்கள். அப்படித் தரத்தின் உயர்ந்ததாக்கிய பிறகே அதனைக் கப்பலில் ஏற்றிச் செல்வார்கள்.''

''அப்படி அவர்களுக்குக் கனிப்பொருளை ஏற்றுமதி செய்து, பிறகு அதில் கிடைக்கும் அந்நியச் செலாவணியுடன் இங்கு ஆலை அமைத்து, அந்த ஆலையை நீண்ட காலத்துக்கு நடத்தத் தேவையான அத்தனை கனிப் பொருள் இருக்கிறதா சேலத்தில் ?''

''இருநூறு ஆண்டுகளுக்குக் கவலை இல்லை. அத்தனை கனிப்பொருள் இருக்கிறது. அதைப் பயன்படுத்தத்தான் தடங்கல்கள், சிக்கல்கள்.''

திரு சொக்கலிங்கம் கைக் கடிகாரத்தை மீண்டும் ஒரு முறை பார்த்தார்.

''இன்னும் ஒரே ஒரு கேள்வி. இப்போது இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள எஃகு ஆலைகளே சோம்பிக் கிடக்கின்றனவே, நஷ்டத்தில் இயங்குகின்றனவே. எஃகு உள்நாட்டிலும் தேவைப்படாமல் வெளிநாட்டுக்கும் ஏற்றுமதி செய்ய முடியாமல் தேங்கிக் கிடக்கிறதே. இந்நிலையில் சேலத்தில் இன்னொரு எஃகு ஆலை அவசியம்தானா ?''

''இதில்தான் நாம் ஜாக்கிரதையாகவும் தீர்க்கதரிசனத்துடனும் செயலாற்ற வேண்டும். எஃகு என்றால் ஒரே ரகமல்ல. அதில் எத்தனையோ விதங்கள்; தரங்கள். எந்த ரகத்துக்கு, எந்தத் தரத்துக்கு உலக மார்க்கெட்டில் தேவை இருக்கிறது. எதிர்காலத்தில் என்னென்ன ரகங்கள் தேவைப்படும் என்பதைக் கவனித்து எச்சரிக்கையுடன் செயலாற்றினால் நிச்சயம் நஷ்டம் உண்டாகாது!''

திரு சொக்கலிங்கத்துக்கு நன்றிகூறி விடைபெற்றோம். திரும்பும் போது நுங்கம்பாக்கத்தில் முதல்வரின் வீட்டை ஒரு முறை வலம் வந்தோம். உலகம் சுற்றிய முதல்வரை ஒரு முறை சுற்றி வந்ததில் ஏதோ நாமே உலகைச் சுற்றிப் பார்த்து வந்துவிட்டது போன்ற ஒரு மகிழ்ச்சி.

இதே போன்ற குதூகலத்தைத் தமிழகத்தில் லட்சோப லட்சம் மக்கள் இன்று அடைந்திருக்கிறார்கள் அல்லவா ? ●



அமெரிக்காவில் சென்னை முதன்மந்திரி திரு அண்ணாதுரை ஃபோர்ட் தியேட்டரில் லிங்கன் தேசிய கண்காட்சி சாலைக்கு விஜயம் செய்தார். லிங்கனின் வாழ்க்கையில் நிகழ்ந்த ருசிகரமான சம்பவங்களை நினைவுகூருகிறார் அறிஞர் அண்ணா.



இலங்கை காட்சிகள்-7

ஆனந்த சுதந்திரம் அடைந்தோம்

முந்நூறு ஆண்டுகள் அந்நியர் பிடியிலிருந்த பிறகு இலங்கை பரிபூரண சுதந்திரம் அடைநததின் ஞாபகார்த்தச் சின்னம்தான் இந்தச் சுதந்திர சதுக்கம்.

இன்னொரு முக்கியத்துவமும் இம்மண்டபத்துக்கு உண்டு. தேச பிதா என வர்ணிக்கப்படுகிறவரும், நாடு சுதந்திரமடையக் காரணமாக இருந்தவரும், சுதந்திர இலங்கையின் முதல் பிரதம மந்திரியுமான திரு டோன் ஸ்டீபன் சேனநாயகா (தற்போதைய பிரதமர் திரு டட்லி சேனநாயகாவின் தந்தை) அவர்களின் புனித உடல் இந்த இடத்தில் தான் தகனம் செய்யப்பட்டது.

சுதந்திரம் பெறக் காரணமாக இருந்த நல்லவரைத் தன்னுள் அடக்கிக் கொண்டு, சிங்களச் சிற்ப வேலைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக அழகுடன் விளங்குகிறது இந்த மண்டபம். - **கே. வி. எஸ். மோகன்**

என் மனைவி சரசுவை வெகு கோபமாகக் கூப்பிட்டேன். வாசல் வராந்தாவைக் கூட்டிக் கொண்டிருந்த சரசு (ஏனெனில் இன்று வேலைக்காரி வரவில்லை), விளக்குமாறும், கையுமாக என்னை நோக்கி ஓடி வந்தாள்.

''அம்மா, தாயே! முதலில் அந்த விளக்கு மாற்றை அங்கு மூலையில் வைத்துவிட்டு இங்கு வா'' என்றேன்.

சரசு அப்படியே செய்தாள்.





''ஆமாம், எனக்குச் சம்பாதிக்க யோக் கியதை இல்லையென்று என்னை அடிக்கடி இடித்துக் காண்பிக்கிறாயே, நான் போன வருடம் எதற்கு நிற்க வேண்டும் என்று சொன்னேன்?''

''எதற்கா? நான் குழந்தை கலியாணத் துக்காகக் கஷ்டப்பட்டுச் சேமித்து வைத் திருக்கும் அத்தனை பணத்தையும் தேர்த லுக்கு நின்று தொலைக்கிறேன் என்றீர்கள்! என் சொற்படி கேட்காமல் நீங்கள் தேர்த லுக்கு நின்றிருந்தால் உங்கள் டெபாசிட் தொகையைக் கூட இழந்திருப்பீர்கள்.''

''இருக்கட்டுமே! அதனால் என்ன கெட்டு விட்டது? திரு சுப்பிரமணியத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''யார்? தேர்தலில் நின்று தோற்ற அந்தக் காங்கிரஸ்காரரா?''

''அவரே தான். திரு அளகேசனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''அவரும் தேர்தலுக்கு நின்று தோற்ற காங்கிரஸ்காரர் போலத்தான் தோன்று கிறது!''

''ஆமாம். திரு ஆர். வெங்கடராமனைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா?''

''என்ன இது! எதற்காகத் தேர்தலில் நின்று தோற்ற காங்கிரஸ்காரர்களின் ஜாபி தாவை ஒப்பிக்கிறீர்கள்?''

''அந்த ஜாபிதாவில் என் பெயரும் சேர்ந் திருக்குமே! அதைக் கெடுத்து விட்டாயே!''

''தோற்றவர்கள் ஜாபிதாவில் உங்கள் பெயர் வருவதில் என்ன லாபம்?''

''என்ன லாபமா? இந்தா, இந்தச் செய்தி யைப் படித்துப் பார்.''

செய்தியைப் படித்துப் பார்த்ததும் சரசு துள்ளிக் குதித்தாள். ''ஐயோ! உங்களை ஏண்டா தேர்தலில் நிற்க வேண்டாமென்று தடுத்தேன் என்றிருக்கிறதே!'' என்றாள் ரொம்ப வருத்தத்தோடு. ஆனைப்பட்ட சரசுவையே வருத்தப்பட வைத்துவிட்ட அந் தச் செய்தி என்னவென்று தெரிந்து கொள்ள நீங்கள் துடிக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். இதோ சொல்லிவிடுகிறேன்.

சமீபத்தில் டில்லி மேல் சபையில் ஒரிஸ்ஸா வின் சுதந்திரக் கட்சி அங்கத்தினரான திரு லோகநாத் மிஸ்ரா அவர்கள், பெரும் பதவிகள் அளிக்கப்பட்டுள்ள தோற்ற காங் கிரஸ்காரர்களின் நீண்ட ஜாபிதா ஒன்றை வாசித்தார். ஆஸ்திரேலியாவின் ஹைகமிஷ

தோற்றவர்கள்







னராக நியமிக்கப்பட்டுள்ள திரு ஏ. எம். தாமஸ், நேப்பாளத்தின் ராஜதூதராக உள்ள திரு ராஜ் பகதூர், எதியோப்பியாவின் ராஜதூதராகச் செல்லப் போகும் திரு ஓ. வி. அளகேசன், நியூஜிலாந்தின் ராஜ தூதராகச் செல்லும் திரு பி. நங்கார், விமான ஆராய்ச்சிக் கமிட்டியின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள திரு ஸி. சுப்பிரமணியம், கனரக என்ஜினியரிங் கார்ப்பரேஷனின் தலைவரான திரு கே. டி. மாளவியா, பர்மா, இலங்கை அகதிகளைக் கவனிக்கும் போர்டின் தலைவரான திரு மனுபாய் ஷா, எல். ஐ. ஸி. செலவுகளைக் கவனிக்கும் கமிட்டியின் தலைவரான திரு ஆர். ஆர். மொரார்கா, ஐந்தாவது நிதிக் கமிஷனின் தலைவரான திரு மகாவீர் தியாகி ஆகிய இவர்கள் எல்லாரும் தேர்தலில் தோற்ற காங்கிரஸ்காரர்களே!

ஜனசங்க அங்கத்தினரான திரு நிரஞ்சன் வர்மா, இந்த ஜாபிதாவில், போப்பாலில் உள்ள கனரக மின்சாரக் கம்பெனியின் டைரக்டரான ஸ்ரீமதி மரூனா கல்டானா அவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டியது தான் என்று சொன்னார்.

இந்த ஜாபிதாவில் பட்டுக்கோட்டைத் தொகுதியில் தோற்ற 'முன்னாள்' அமைச்சர் திரு ஆர். வெங்கடராமன் அவர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டியதுதான் என்று நான் கூறுகிறேன். அவர் இப்பொழுது திட்டக் கமிஷனின் அங்கத்தினராக இருக்கிறார்.

''தேர்தலில் தோற்ற காங்கிரஸ்காரர்களுக்காக, ஜந்தர் மந்தர் ரோடு, 7-ம் நம்பரில் ஒரு பெரிய வேலை தேடித் தரும் ஸ்தாபனம், அதாவது, எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சே நடக்கிறது'' என்று கூறுகிறார் திரு லோகனாத் மிஸ்ரா.

இதைப் படித்ததும் கூடிய சீக்கிரமே இப்படி ஒரு விளம்பரம் பத்திரிகைகளில் வெளியானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லையென்று எனக்குத் தோன்றியது: ''சமீபத்தில் நடந்த பொதுத் தேர்தலில் தோற்ற காங்கிரஸ்காரர்கள் தேவை. குறைந்த சம்பளம் ரூ. 2000. இதைத் தவிர, வீட்டுப் படி, தோட்டப் படி, மின்சாரப் படி, தண்ணீர்ப் படி, மோட்டார் படி, வேலைக்காரர்கள் படி, பிரயாணப் படி, சிகரெட்படி, விருந்துப் படி, சினிமாப் படி, கேளிக்கைப்படி முதலிய பல படிகள் உண்டு. உடனே, '7 ஜந்தர் மந்தர் ரோடு, புதுதில்லி' என்கிற விலாசத்துக்கு மனுச் செய்து கொள்ளவும். தோற்ற வோட்டு வித்தியாசத்தை மறக்காமல் மனுவில் குறிப்பிடவும். அதிகப்படி வோட்டு வித்தியாசத்தில் தோற்றவர்களுக்கு அதிகப் படி சம்பளம் கொடுக்கப்படும்.''

சென்ற முப்பது வருடங்களாகக் காங்கிரஸ்காரனாக இருந்தும் எனக்குத் தேர்தலில் நின்று தோற்கத் தெரியாமல் போய்விட்டதே என்கிற வருத்தம் என்னை ஆட்கொண்டது.

இப்படித் தோற்றவர்களுக்கு வேலை கொடுப்பது காங்கிரஸ்காரர்கள் அல்லாதவர்களுக்குத் தவறாகப்படலாம். ஆனால் தினம் பகவத்கீதை பாராயணம் செய்யும் எனக்கு, பகவத்கீதையின் கொள்கைகளைவிட ஒரு படி மேலே போய் காங்கிரஸ் சிறப்பாகத் தொண்டாற்றுவதாகத் தோன்றுகிறது.

கீதையில், ''வெற்றி, தோல்வி நிகரெனக் கொண்டு போரில் ஈடுபடு'' என்றுதான் கிருஷ்ணன் திரும்பத் திரும்ப அர்ஜுனனுக்கு உபதேசம் செய்கிறார். ஆனால் இந்த விஷயத்திலோ வெற்றியும் தோல்வியும் நிகர் அல்ல. தோல்வி, வெற்றியைவிட எத்தனையோ மடங்கு உயர்ந்தது !

தேர்தலில் வெற்றியடைந்தால் நிச்சயமாக மந்திரி பதவி கிடைக்கும் என்று சொல்ல முடியாது. மந்திரி பதவிகளை அளவுக்கு மீறி அதிகரித்துக் கொண்டு போனால் மக்கள் சண்டைக்கு வந்துவிடுவார்கள். ஆனால் இப்படி உத்தியோகங்கள் பெறுவதிலோ கணக்கே இல்லை. எத்தனை பேர் உத்தியோகம் வேண்டும் என்கிறார்களோ, அத்தனை உத்தியோகங்களை எளிதில் தயாரிக்கலாம்.

எப்பொழுது தோற்றால் பதவிகள் கிடைக்கும் என்கிற நிலை ஏற்பட்டு விட்டதோ, இனி அடுத்த தேர்தல் வெகு வேடிக்கையாகத் தான் இருக்கும். அபேட்சகர்கள் யாரும் வெற்றியை விரும்பமாட்டார்கள். எல்லாரும் தோற்கத்தான் விரும்புவார்கள். எல்லாரும், ''தயவுசெய்து எனக்கு வோட்டுப் போடாதீர்கள் !'' என்று சுவரொட்டிகள் ஒட்ட ஆரம்பித்து விடுவார்கள்; தேர்தல் பிரசங்கங்களில் கெஞ்சிக் கேட்டுக் கொள்ள ஆரம்பித்து விடுவார்கள். ஆகவே, அவர்களுடைய தேர்தல் பிரசங்கம் புது மாதிரியாக இருக்கும்:

''என் அருமை வாக்காளர்களே! அநேக நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் நான்

தேவை

-நாடோடி-



உற்ற நண்பர் ஒருவர் வளர்க்கும் குரங்குகளுக்கும் நாய்களுக்கும் இடையே நிலவும் விசித்திர அன்பைக் கண்டு வியந்து ''கல்கி'' பொருளடக்கப் பகுதியில் வெளியிடப் படம் எடுத்து அனுப்பியவர் :

வி. நாகசுந்தரம்

இந்தத் தேர்தலுக்கு நிற்கிறேனே ஒழிய, தேர்தலில் ஜெயிக்க வேண்டும், உங்கள் பிரதிநிதியாக விளங்க வேண்டும் என்கிற எண்ணம் எனக்குத் துளிக்கூடக் கிடையாது. ஆகவே, எனக்கு வோட்டுப் போடாதீர்கள் என்றுதான் உங்களை நான் மிக்க பணிவுடனும், தாழ்மையுடனும் கேட்டுக் கொள்கிறேன். நான் உங்கள் பிரதிநிதியாக இருப்பதற்குத் துளிக்கூட லாயக்கற்றவன். சென்னையில் குடிசைகள் பற்றி எரிந்து கொண்டிருந்த சமயம், நான் என்னுடைய குளுகுளு அறையில் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தவன். மாணவர்களும், பஸ் ஊழியர்களும் மோதிக் கொண்டபோது, நான் அதில் தலையிட்டு, என் மண்டையை உடைத்துக் கொள்ளாமல், இதுதான் சாக்கு என்று வெளியூர் சென்று விட்டவன். மக்கள் எல்லாரும் சர்க்கரை கிடைக்காமல் தவித்துக் கொண்டிருந்த காலத்தில், நான் சர்க்கரையை மூட்டை மூட்டையாகப் பதுக்கி வைத்தவன்'' என்று இந்த ரீதியில் இருக்கும் அபேட்சகர்களின் தேர்தல் பிரசங்கங்கள்.

தங்கள் தகுதியின்மையைப் பற்றி இத்தனை சொல்லியும், போட்டி அபேட்சகரைவிட இவர் எவ்வளவோ தேவலை என்று வாக்காளர்கள் வோட்டுப் போட்டுத் தங்களைக் ஜெயிக்க வைத்து விட்டால் என்ன பண்ணுவது என்கிற பயம் சிலருக்கு இருக்கும். ஆகவே, அவர்கள் தங்களைக் குறைத்துக் கொண்டால் மட்டும் போதாது என்று தங்கள் தேர்தல் பிரசங்கங்களிலும், துண்டுப் பிரசுரங்களிலும் சுவரொட்டிகளிலும் எதிரி அபேட்சகரை உயர்த்திச் சொல்லவும் ஆரம்பித்து விடுவார்கள்.

இன்னும் காசு கொடுத்து வோட்டுப் பெறும் அபேட்சகர்களோ, இனி வாக்காளர்கள் தங்களுக்கு வோட்டுப் போடாமல் இருப்பதற்காகக் காசு கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். ''எதிரி அபேட்சகருக்கு வோட்டுப் போடுங்கள்'' என்று சொல்லிக் கொண்டு காசு கொடுக்க ஆரம்பிப்பார்கள்.

உலகில் தர்மம் தழைத்தோங்கப் போகிறது என்று காட்ட இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? தேர்தலில் அபேட்சகர்கள் சுயநலம் இன்றி, ''எனக்கு வேண்டாம் வோட்டு, அவருக்குப் போடுங்கள்'' என்று இன்னொருவரைச் சுட்டிக் காட்டுவது, ''எனக்கு வேண்டும், எனக்கு வேண்டும்'' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் எல்லாம், ''எனக்கு வேண்டாம்'', 'எனக்கு வேண்டாம்'' என்று சொல்லுவது, இந்தக் காட்சிகளை மனக் கண்ணில் நினைத்துப் பார்த்தால் ராமராஜ்யம்தான் ஞாபகத்துக்கு வருகிறது. இப்படி ஓர் அற்புதத்தை ஆரம்பித்து வைக்கப் போகும் காங்கிரஸ் மேலிடத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஆகவே, அடுத்த தேர்தலில் (என் மனைவியின் சம்மதத்தை இப்பொழுதே பெற்றுவிட்டதால்) நான் சென்னை சட்டசபைக்குக் காங்கிரஸ் அபேட்சகராக நிற்கப் போகிறேன். தயவுசெய்து எனக்கு உங்கள் வோட்டுக்களை அளித்து என்னை ஜெயிக்கச் செய்து விடாதீர்கள்! ஆனால் பார்லிமெண்டுக்கு நிற்கும் காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு (அவர்கள் தோற்பதற்காக என்ன முயற்சி செய்தாலும் அதைப் பொருட்படுத்தாமல்), உங்கள் வாக்குகளை அளித்து, காங்கிரஸை மீண்டும் மத்திய அரசாங்கத்தைக் கைப்பற்ற உதவி செய்யுங்கள். அப்போதுதான் நான் குறைந்தபட்சம் ஓர் அயல்நாட்டுத் தூதராகவாவது விளங்க முடியும்!

என்ன பட்டம் வாங்கலாம்? எப்படிப் படிக்கலாம்?

பட்டம் பெற்றவர்களும் பெற விரும்புவோரும் என்ன உயர்கல்வி பயிலலாம், பாரதத்திலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் எந்த எந்தத் துறைகளில் கல்வி வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன என்பன போன்ற தகவல்களை ஒரு நிறுவனம் மாணவர்களுக்கு அளிக்கக் காத்திருக்கிறது. கல்வி வாய்ப்புகளையும், வழிகாட்டி நூல்களையும் ஒரு கண்காட்சியாகவே அமைத்திருக்கிறார்கள், சென்னை பல்கலைக் கழகத்தில். விஞ்ஞானப் பட்டதாரிகள் பலருக்குக் காகிதத் தயாரிப்புக் கலை நுட்பம் சஹரான்பூரிலுள்ள (உத்தரப்பிரதேசம்) இன்ஸ்டிடியூட்டில் போதிக்கப்படுகிறது என்ற விவரமே தெரிந்திருக்காது. ஜனத்தொகைப் பெருக்கம் பற்றிய கல்வி பயின்றுள்ளவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புக்கள் உள்ளனவாம். (அமைச்சர் டாக்டர் சந்திரசேகர் வாழ்க!) பாரத கலாசாரம், பண்பாடு என்பதை முக்கிய பாடமாக எடுத்துக் கொண்டு படித்துப் பட்டம் பெற, தஞ்சை புஷ்பம் கல்லூரியிலும், பழநியில் உள்ள பழநி ஆண்டவர் கல்லூரியிலும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது என்ற விவரம் எவ்வளவு பேருக்குத் தெரியும்? இந்தப் பட்டதாரிகளுக்கு மேலை நாடுகள் செல்லவும் வாய்ப்பு உண்டாம். மேலை நாட்டவர் நமது கலாசாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள ஆர்வம் கொண்டிருக்கின்றனர்.

''பையன் பி. யூ. சி. பாஸ் செய்துவிட்டான். மேற்கொண்டு என்ன படிக்கச் சொல்லலாம் என்பதுதானே பிரச்னை? திரு தர்மராஜனிடம் போய்க் கேளுங்கள்! உங்கள் பிரச்னை எளிதில் தீர்ந்து விடும்!''

''திரு தர்மராஜனா.....? யார் அது?''

சென்னை பல்கலைக் கழக வேலை வாய்ப்பு, செய்தி, வழிகாட்டி நிறுவனத்தின் தலைவர், திரு ஜி. ஏ. தர்மராஜன் அவர்கள்தாம். மாணவர்கள், பெற்றோர்கள் இரு சாராருக்குமே பொதுவான இதுபோன்ற பிரச்னைகளில் வழிகாட்டுகிறார்.

- பாணன்

உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டுமே!

Prestige பிரஸ்டிஜ் ப்ரேஷ்ஷர் குக்கர்

மட்டுமே இந்த விசேஷ அம்சங்களைக் கொண்டுள்ளது

■ ஆயுட்காலமளவும் உழைப்பதற்கான உத்தரவாதமளிக்கக்கூடிய அமைப்பு ■ எந்தக் குடும்பத்திற்கும் ஏற்றதொரு மாடல் ■ மிக அதிகமான பாதுகாப்பு சாதனங்கள் ■ தரமான அலுமினிய அல்லாயில் செய்யப்பட்டது ■ அரிப்பை எதிர்க்கிறது, விரைவில் சூடு பரவுவதை உறுதி செய்கிறது, எரி பொருளை மிச்சப்படுத்துகிறது ■ இந்தியாவெங்கும் சர்வீஸ் கேந்திரங்கள் உள்ளன ■ அசல் ஸ்பேர் பார்ட்டுகள் சுலபமாகக் கிடைக்கின்றன ■ இமாலய உயரங்களிலும் நம்பத்தகுந்தது.

எனவேதான் 5 லட்சத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இதை உபயோகிக்கின்றன

பிரஸ்டிஜ்
ஆயுட்காலமளவும்
உழைக்கிறது



TTP-510.TAM

இன்றே ஒன்று வாங்குங்கள்

தயாரிப்பாளர்கள்: டிடி.(ப்ரைவேட்) லிமிடெட், பெங்களூர்-16.



முஸ்தாபா கமால்பாட்சா

நான் ஒரு ஹாஜியானேன்!

"நான் பன்னிரண்டு லட்சத்தில் ஒருவன்" என்றார் நண்பர் முஸ்தாபா கமால் பாட்சா திடீரென்று.

"அதென்ன விஷயம்?" என்று கேட்டேன்.

"இந்த ஆண்டு புனித 'ஹாஜ்' யாத்திரையை மேற்கொண்டவர்கள் பன்னிரண்டு லட்சம் பேர். அவர்களில் நானும் ஒருவன்" என்றார் நண்பர்.

"அப்படியா விஷயம்? அதுதான் சில நாட்களாக நீர் என் கண்களில் தட்டுப்படவில்லை!.... வாருங்கள். அப்படி உட்கார்ந்து சாவகாசமாக உங்கள் யாத்திரையைப் பற்றிச் சொல்லுங்கள்!" என்றேன். புனித யாத்திரையின் இன்ப நினைவுகளை மீண்டும் நினைவுத் திரைக்குக் கொண்டு வர ஆரம்பித்தார் நண்பர்.

ஃ ஃ ஃ

"மெக்காவுக்குக் கிளம்புகிறவர்கள், மீண்டும் திரும்புவோம் என்ற மனப்பான்மையைக் கழற்றி வைத்துவிட்டு ஒருவித முடிவான விடைபெறுதலைக் கூறிவிட்டுத்தான் உற்றார் உறவினரிடமிருந்து பிரிவது சம்பிரதாயம். இந்த முறையில்தான், நான், என் தாயார், என் சகோதரி மூவரும் விடைபெற்றுக் கொண்டு சென்னையிலிருந்து பம்பாய்க்கு ரயிலில் புறப்பட்டோம்.

பம்பாயில் செயலாற்றி வரும் 'ஹாஜ்' கமிட்டி ஏற்கனவே எங்கள் விண்ணப்பங்களைப் பரிசீலித்து, பிரயாணம் பாஸ்போர்ட், விஸா முதலியவற்றுக்கு ஏற்பாடுகள் செய்திருந்தது. நாங்கள் விமானப் பிரயாணத்தை மேற்கொள்வதாகத் திட்டமிட்டிருந்தோம். விமானத்தையோ கப்பலையோ பயணத்துக்காகத் தேர்ந்தெடுக்கும் யாத்திரிகர்கள், குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு மேலாக இருந்தால் பெயர்ச் சீட்டுகள் போட்டுக் குலுக்கி எடுக்கிறார்கள். அதிருஷ்டவசமாக எங்கள் பெயர்ச் சீட்டுக்கள் எடுக்கப்பட்டு, எங்களுக்கு இடமும் ஒதுக்கப்பட்டு விட்டது.

யாத்திரை மேற்கொள்பவர்களுக்குத் தலா பதினெண்றேகால் கிலோ அரிசியும் நாலு கிலோ சர்க்கரையும், மெக்காவுக்குப் போனவுடன் வழங்க இந்தக் கமிட்டியே ஏற்பாடு செய்கிறது. பருப்பு வகைகளும் கிடைக்கும். ஆனால் அந்த விகிதம் அரிசியில் குறையும். விமானத்தில் பிரயாணம் செய்பவர்களுக்கான இந்த உணவு 'கோட்டா' முன்பாகவே கப்பலில் அனுப்பி வைக்கப்படும்.

பிப்ரவரி மாதம் இருபதாம் தேதி அதிகாலை ஐந்து மணி சுமாருக்கு எங்களைத் தாங்கிச் சென்ற விசேஷ போயிங் விமானம் நூற்றி எண்பத்தி ஆறு பயணிகளுடன் — சௌதி அரேபியா நாட்டில் உள்ள ஜெட்டா (JIDDAH) நகரை நோக்கி பம்பாய் சான்டாகுரூஸ் விமான தளத்திலிருந்து கிளம்பியது. பயணிகள் அத்தனை பேருமே 'ஹாஜ் யாத்திரிகர்கள். ஆகையால் 'எஹ்ராம்' என்று குறிப்பிடப்படும் சம்பிரதாயமான வெள்ளை ஆடையை அணிந்தவாறே நாங்கள் எல்லோரும் விமானத்தில் ஏறினோம். தலா இரண்டாயிரத்து அறுநூறு ரூபாய் கட்டணம்.

ஜெட்டாவிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலுள்ள மெக்காவுக்கு டாக்ஸியில் போக வேண்டும். ஒவ்வொரு 'ஹாஜ்' யாத்திரிகருக்கும் சர்க்கார் அனுமதிக்கும் அதிகபட்ச ரூபாய்கள் ஆயிரத்து ஐந்நூற்றி எழுபத்தி ஐந்து. சௌதி அரேபிய நாணய விகிதத்தில் இந்தத் தொகை கிட்டத்தட்ட தொள்ளாயிரத்து முப்பது 'ரியால்'கள். ஜெட்டாவிலேயே, யாத்திரை வரியாக 'தவாஃப்' என்ற பெயரில், மெக்காவுக்குப் போவதற்குத் தொண்ணூற்றி ஐந்து ரியால்கள் கட்டியாக வேண்டும். டாக்ஸிக் கட்டணம் தலா பத்து ரியால்கள் வரை ஆகும். 'வான்'கள், பஸ்கள் எல்லாமே ஓடுகின்றன.

புனித மெக்காவை அடைந்ததும் நேராக நாங்கள் காபாவுக்குச் சென்றோம். காபா என்பது புனித கறுப்புப் பளிங்குக் கல்லைக் குறிக்கிறது. இதை ஏழு தடவை தொழுது கொண்டே வலம் வந்து இதற்குச் சற்றுத் தூரத்தில் உள்ள சபாஃமர்வாஃ என்ற இடத்தையும் வலம் வந்து அங்குள்ள நீரூற்றிலிருந்து தண்ணீர் எடுத்துத் தலையில் தெளித்துக் கொண்டு பிறகு 'எஹ்ராம்' ஆடையைக் களையவேண்டும் என்பது விதி. சபாஃமர்வாஃ அருகிலிருக்கும் நீரூற்றிலிருந்து வரும் 'ஜம் ஜம்' நீர் புனிதமானது. லட்சக்கணக்கான யாத்ரீகர்கள் அதை உபயோகித்த போதிலும் அந்த நீர் ஊற்று இதுவரை வற்றியதே கிடையாது. எங்கள் யாத்திரை சம்பிரதாயமாக ஆரம்பிக்கும் கட்டம் இதுதான். பிறகுதான் நாங்கள் தங்கும் இடங்களுக்குப் போனோம். அவரவர்கள் சௌகரியத்துக்குத்

கருத்தாற்போல் சத்திரங்கள், ஹோட்டல்கள், கூடாரங்கள் கிடைக்கும். ஹோட்டல்களில் உணவு வகைகள் மேல்நாட்டுப் பாணியில்தான் இருக்கின்றன.

நாங்கள் மெக்காவை அடைந்த தினத்தன்றுதான், 'ஹாஜ் நாட்கள்' நிர்ணயிக்கப்பட்டன. மார்ச் எட்டாம் தேதியிலிருந்து பதினோராம் தேதி வரை என்று இஸ்லாமியப் பெரியவர்களால் அவைகள் அங்கீகரிக்கப்பட்டன. வெள்ளிக்கிழமை 'ஹாஜ் – தினம் வருவது மிகவும் விசேஷம். மிகவும் அபூர்வம். எழுபது ஆண்டுகளுக்குப் பிறகு இந்தத் தடவைதான் வந்ததாம். யாத்திரிகர்களுக்கெல்லாம் ஒரே மகிழ்ச்சி.

இந்த 'ஹாஜ்' நாட்களுக்குள், மதினா போய்த் திரும்ப வேண்டும். மெக்காவிலிருந்து மதினாவுக்குச் சுமார் நானூற்றி ஐம்பது மைல்கள். முதல்தரமான ரஸ்தா. ரஸ்தாவில் பெரும் பகுதி செங்கடல்கரையை ஒட்டியே போகிறது. கப்பல் போன்ற அமெரிக்க நாட்டுக் கார்கள் இந்தப் பாதையில் டாக்ஸிகளாக ஓடுகின்றன. எட்டு மணி அவகாசத்தில் கொண்டு போய்ச் சேர்த்து விடுகிறார்கள். தலா முப்பது ரியால்கள் வரை கட்டணமாக ஆகிறது.

புனித மதினாவில்தான் ஆண்டவனின் தூதராகிய நபிகள்நாயகம் அடக்கமானார். மதினா போகவும் தலா தொண்ணூறு ரியால்கள் யாத்திரை வரி செலுத்த வேண்டும்.


ஹாஜ் யாத்திரிகர்கள் மதினாவில் எட்டு தினங்கள் தங்கி நாற்பது தடவைகள் தொழுகை நடத்தியாக வேண்டும். நாங்கள் மதீனா சென்றபோது அந்த நகரமே யாத்திரிகர்களால் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. இட நெருக்கடியின் காரணமாக, தொழுகை நேரங்களில் மக்கள் எங்கெங்கே நின்று கொண்டிருந்தார்களோ, அங்கங்கேயே தங்கள் தொழுகையைத் தொடங்கிவிட்டனர். அந்தக் காட்சி மயிர்க்கூச்செடுக்க வைக்கும் காட்சி. இந்த ஆண்டு அங்கே பகல் வெய்யிலும் கடுமை. இரவுக் குளிரும் தாங்க முடியாமல் இருந்தது. ஆனால் யாத்திரிகர்கள் இதையெல்லாம் பொருட்படுத்தாமல் தெருக்களிலேயே வசித்தார்கள்.


எட்டு நாட்கள் மதினாவில் தங்கிவிட்டு மீண்டும் மெக்காவுக்குத் திரும்பினோம்.

மெக்காவுக்குச் சமீபத்திலுள்ள மீனா, முஸ்தலீஃபா, அர்பாத் ஆகிய மூன்று இடங்கள்தான் ஹாஜ் யாத்திரையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள். மெக்காவிலிருந்து மீனா போய், அங்கிருந்து முஸ்தலீபா வழியாக அர்ஃபாத் போக வேண்டும். ஏறத்தாழ ஒவ்வொரு ஊரும் ஏழு மைல்கள் இடைவெளியில்தான் இருக்கின்றன.

ஹாஜ் தினமான வெள்ளிக்கிழமையன்று, பகல் 'பன்னிரண்டு மணியிலிருந்து மாலை ஆறு மணிவரை 'ஹாஜ்' நேரமாகக் கருதப்படுகிறது. யாத்திரிகர்கள் அனைவரும் நடுப்

புனித காபா —
அந்திமயங்கும் வேளையில்







"சண்டைக் காட்சியில் நான் தத்ரூபமா சண்டை போட்டதைப் பார்த்துச் சபையில் இருந்த போலீஸ்காரர் என்னைக் கைது செய்துவிட்டார்!"

"அட போய்யா, அது நடிப்பா? நான் இறந்து போற சீனில் தத்ரூபமா இறந்து போறதைப் பார்த்த சபையிலிருந்த இன்ஷூரன்ஸ் அதிகாரி ஓடிப்போய் என் மனைவியிடம் என் பாலிஸிப் பணத்தைக் கொடுத்து விட்டுப் போய் விட்டாரய்யா!"

பகலுக்கு முன்னதாக அர்ஃபாத்தில் கூடி விடுகிறார்கள். அர்ஃபாத்தில் உள்ள குன்றில் தான் ஆண்டவனின் முதல் சிருஷ்டிகளான ஆதமும் ஹவ்வாவும் சந்தித்ததாக ஐதிகம். யாத்திரீகர்கள் இந்தக் குன்றின் அடிவாரத்தில் நின்று தங்கள் தொழுகையை நடத்துகிறார்கள்.

அர்ஃபாத்தில் யாரும் மாலை ஆறு மணிக்கு மேல் தங்கக் கூடாது என்று நியதி. ஆகவே, லட்சக்கணக்கான யாத்திரீகர்களும் சாரி சாரியாக முஸ்தலிஃபாவுக்குத் திரும்புகிறார்கள். பெரும்பாலானவர்கள் நடந்துதான் வருவார்கள். கார்களையும் உபயோகிக்கலாம். இந்தக் குறுகிய தூரத்தை நடந்து கடக்கப் பல மணி நேரங்கள் ஆகும். காரணம் ஜனசமுத்திரம்தான்.

அன்றைய இரவுப் பொழுதை முஸ்தலிஃபாவில் உள்ள திறந்தவெளிகளில் தங்கிக் கழித்தாக வேண்டும். ஆண்டவனின் தூதராகிய நபிகள்நாயகம் இங்குதான் சைத்தான்களை விரட்டக் கற்களைப் பொறுக்கினார் என்று வரலாறு கூறுகிறது. ஒவ்வொரு யாத்திரீகரும் கைகளில் லாந்தர்களுடன் அந்த இரவில் சிறுசிறு கற்களாக எழுபது கற்கள் பொறுக்க வேண்டும்.

அதிகாலை ஐந்து மணிக்கு முஸ்தலிஃபாவில் ஒரு குண்டு வெடிக்கிறார்கள். யாத்திரீகர்கள் அனைவரும் உடனடியாக முஸ்தலிஃபாவிலிருந்து மீனாவுக்குத் திரும்ப வேண்டும் என்பது இந்தக் குண்டு வெடிப்பின் அடையாளமாகும்.

மீனாவை அடைந்ததும், அங்கே சைத்தான்களைப் பிரதிபலிக்கும் தூண்களின் மீது யாத்திரீகர்கள் ஒவ்வொருவரும் ஏழு கற்களை வீச வேண்டும். ஆனால் இத்தருணத்தில் பெரிய சைத்தானைக் குறிக்கும் ஒரு தூண் மீதுதான் வீசலாம். இதை முடித்துக் கொண்டு குருபானி என்ற இடத்துக்குப் போய் ஓர் ஆட்டை விலைக்கு வாங்கிப் பலி கொடுக்க வேண்டும். ஓர் ஆட்டின் விலை கிட்டத்தட்ட நூற்றி ஐம்பது ரியால்களாகின்றன. செல்வந்தர்கள் ஒட்டகங்களையே வாங்கிப் பலி கொடுக்கின்றனர்.

மெக்காவிலிருந்து அர்ஃபாத் போகும் போது அணிந்து கொள்ளும் 'எஹ்ராம்' உடைகளை இந்தப் பலி முடிந்தவுடன் கழற்றிவிட வேண்டும். இந்த நேரத்தில் தான் 'ஹாஜ்' யாத்திரை முடிந்ததாகக் கருதப்படும். அன்று மீனாவிலேயே தங்க வேண்டும்.

மறுநாட் காலையில் எஞ்சியுள்ள கற்களைச் சிறிய சைத்தான்களைக் குறிக்கும் மூன்று தூண்களில் வீசிவிட்டு இரவில் மெக்காவுக்குத் திரும்பினோம். இங்கே காபாவையும் சபாமர்வாக்களையும் மீண்டும் வலம் வந்து தொழுகை நடத்திவிட்டு ஜம் ஜம் நீரைத் தெளித்துக் கொண்டோம். அன்று இரவு மெக்காவில் தங்கக் கூடாது. ஆகவே, மீண்டும் மீனாவுக்குத் திரும்பினோம்.


ஹாஜ் நான்காம் நாள் மாலை மெக்காவுக்குத் திரும்பினோம். எதிர்பாராத வகையில் நான்காம் நாள் இரவு மீனாவில் தங்க நேரிட்டால் இரண்டாம் தடவையாக ஓர் ஆடு வாங்கிப் பலியிட வேண்டும் என்பது சம்பிரதாயம். மெக்கா திரும்பிய பிறகுதான் நாங்கள் ஹாஜ் யாத்திரையைப் பூர்ணமாக்கினவர்களாகக் கருதப்படுவோம்.

இந்த ஊர்களிலெல்லாம் பழங்கள் நிறையக் கிடைக்கின்றன. கத்திரிக்காய் ஒன்று பூசணிக்காய் போலக் காய்க்கிறது. தண்ணீர் தட்டுப்பாடு பரவலாக இருக்கிறது.

ஹாஜ் தினங்கள் அனைத்துமே சர்க்கார் விடுமுறை நாட்கள். மதீனாவில் உள்ள பேரீச்சம் பழங்களும், மெக்காவில் உள்ள ஜம் ஜம் நீரும், முஸ்லிம்களுக்குப் புனிதமானவை. நண்பர்களுக்காகவும் உறவினர்களுக்காகவும் அவைகளைச் சேகரித்துக் கொண்டோம். பாரதத்திலிருந்து யாத்திரை வந்தவர்கள் பதினையாயிரம் பேர்கள். துருக்கியிலிருந்துதான் அதிகமாக ஐம்பதினாயிரம் பேர்கள் வரை வந்திருந்தார்கள். உலகின் பல பாகங்களிலிருந்தும் முஸ்லிம்கள் இங்கே குழுமியிருந்த காட்சி மறக்க முடியாத காட்சி.

ஆண்டவனின் அருளால், இவ்வளவு கூட்டத்திலும், போக்குவரத்திலும் எந்த வித விபத்துக்களும் நேராதாம்! விமானத்தில் ஏறி இந்தியா திரும்பிய போது சாதாரண முஸ்தாபா கமால் பாட்சா 'ஹாஜி' முஸ்தாபா கமால் பாட்சாவாக மாறி இருந்தேன்."

—பட்டினத்தார்





இருவர்கள் சேர்ந்தால்...

வாத்திய கோஷ்டிகள் மூன்றுலேயே நின்று பழகிய திரு டி. எம். சௌந்திர ராஜனும் திருமதி பி. சுசீலாவும் வாக்காளர்கள் முன்னால் நின்றால்......... சௌந்திரராஜன் பேசிப் பாடும்போது சுசீலாவும் இப்படி இடை வெட்டு வெட்டலாமே!

வாக்காளப் பெருமக்களே, பெரியோர்களே, தாய்மார்களே!

வணக்கம்.

கண் படைத்தான் உமைக் காண்பதற்கு-இரு
கை படைத்தான் உமை அழைப்பதற்கு

சுசிலா :

செவி படைத்தான் நீங்கள் கேட்பதற்கு-இந்தப்
புவியினில் சிங்காரம் ஒரு சிலர் என்று.

இந்த நூற்றி ஐம்பத்தி ஓராவது வட்டத்தைச் சேர்ந்த வாக்காளப் பெருமக்களாகிய உங்களைச் சந்திக்க எனக்கும் திருமதி சுசீலாவுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த நல்வாழ்வுக் கட்சி நண்பர்களுக்கும் அதன் தலைவர் மதிப்புக்குரிய சிங்காரம் அவர்களுக்கும் எங்கள் இருவர் சார்பிலும் எங்கள் நன்றியை முதற்கண் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பார்ட்டிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஓர்விதம்
பாலிசிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஓர்விதம்

உண்மைதான்! ஆனால் இந்த நல்வாழ்வுக் கட்சி பலரகங்களிலே ஒன்றில்லை. ஓர் அபூர்வமான தனி ரகம். கட்சியின் நல்வாழ்வுக்காக் அது பாடுபடவில்லை. அந்தக் கட்சியின் சேவைக்குப் பாத்திரமாகும் பொதுமக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் கட்சி. அதன் ஒரே பாலிசியும் அதுதான்.

கண்ணில் கண்டதெல்லாம் காட்சியா? உம்
கருத்தே உண்மை சொல்லும் சாட்சியாம்.

சுசிலா :

காவியத்தின் தலைவன் ராமனடி -'தோழி'
கற்பனைக் கெட்டாத அழகனடி - இந்தக்
கட்சிக்குத் தலைவர் ஒருவரடி - அந்தக்
கனவான் பேர்தான் சிங்காரமடி.

இந்த நகரத்திலேயே இந்தப் பேட்டைவாசிகள் அறிவுத் திறனுக்கும் நேர்மைத் திறனுக்கும் நல்லவை கெட்டவையைப் பாகுபாடு செய்யும் ஆற்றலுக்கும் பெயர் போனவர்கள் என்பது பகிரங்க ரகசியமாகும். இல்லாதபோனால் அவர்கள் சென்ற தேர்தலில் சமூக நல ஊழியரும், மக்கள் தொண்டரும் அனைவர் அன்புக்கும் பாத்திரமானவருமான திருவாளர் சிங்காரத்தைத் தங்கள் வட்டத்தின் கௌன்சிலராக நகராட்சி சபைக்குத் தேர்ந்தெடுத்திருப்பார்களா? நண்பர் சிங்காரத்துக்குத் தொண்டு செய்யும் வாய்ப்பினை நல்கியிருப்பார்களா? வீதி வீதியாக, வீடு வீடாக அவரை நடக்க விட்டு மக்கள் குறைகளையும் குறைகளையும் கேட்டறிந்து நிவர்த்திக்க வழி செய்து கொடுத்திருப்பார்களா'

கண்ணெதிரே தோன்றினார்
கனிமுகத்தைக் காட்டினார்
நேர்வழியில் நடந்திட்டார்
நேரமெல்லாம் உழைத்திட்டார்

ஆமாம்! நண்பர் சிங்காரம் காருடையவர் நல்லவர்! காதுடையவர்! கருணையுடையவர்! காரும் பங்களாவும் 'வரும்' வாய்ப்பைத் தரும் வழிகளில் நடக்க நினைக்காதவர். ஏழை எளியார் உள்ளங்களிலேயே, சஞ்சரிக்கப் பழகியவர். அவருக்கு வேஷம் போடத் தெரியாது. போலிப் புன்னகை காட்டத் தெரியாது.

சுசிலா நடு சிரிக்கும் நேரம்
உள்ளம் சிரிக்குமா?

உருவம் போடும் வேஷம்
உண்மையாகுமா?
இதய வீணை இசைக்கும்போது
இரட்டை வேடம் தேவையா

சென்ற தேர்தலில் அவரை வெற்றி அடையாமலிருக்கப் பல வெத்து வேட்டுகள் சதி செய்தன. நோட்டு நோட்டாக வாரி விட்டன. ஆனால் மேட்டுக்குடி மக்களும் உழைப்பாளத் தோழர்களும் ஒன்றாக நின்று நீதி வழங்கினார்கள்.

மனத் தோட்டம் போடுவென்று
மாயவனார் கொடுத்த உடல்
பணத்தோட்டம் போட்டதேடி முத்தம்மா
பணத்தோட்டம் போட்டதேடி

பணத் தோட்டம் பாழாய்ப் போச்சு. மக்களோட மனத் தோட்டத்தில் சிங்காரம் ஒருவர்தான் மலர்ந்தார். இந்தப் பேட்டையின் கௌரவத்தை உயர்த்தினார். அது மாத்திரமா? தெருக்களில் எத்தனையோ கம்பங்களில் மின் விளக்கையும் உயர்த்தினார். இருளை ஒழித்தார். அத்துடன் இருளும் மாற்றுக் கட்சி அன்பர்களின் உள்ளங்களிலே அடைக்கலம் புகுந்தது.'

தொண்டு, உழைப்பு, சேவை என்று தேடி அலைபவர் சிங்காரம்.

கவிஞர் :

எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு
அதைத்தானே கொண்டுவந்தேன் நான்
என் கருத்தோடு (என்னோடு

என்று சேவையை உபாசனை செய்பவர் அவர். சேவைக்கு ஒரு சிங்காரம் என்ற புகழ் மொழியைக் கேட்டு அவர் தலை கனத்துவிடவில்லை. அதற்குப் பதிலாக இந்த வட்டத்திலுள்ள ரோடுகளெல்லாம் இரண்டங்குல உயரத் தூக்கு; கனத்தன.

இந்தப் பேட்டை மக்களுக்கு இன்னும் எத்தனையோ வசதிகளைச் செய்து கொடுக்கத் துடிக்கும் நண்பர் சிங்காரம் தம்மிடம் பல திட்டங்களை வைத்திருக்கிறார். அது பற்றி எனக்குப் பின்னால் பேசவிருக்கும் பல அன்பர்கள் விரிவாக எடுத்துரைப்பார்கள். அந்தத் திட்டங்கள் நிறைவேறி உங்கள் மனம் நிறைவு காண வேண்டுமானால் அவருக்கு இந்தத் தடவையும் வரும் நகர சபைத் தேர்தலில் வெற்றி தேடித்தர நீங்கள் முன் வரவேண்டும். உங்கள் வாக்குகள் அனைத்தும் சிங்காரம் அவர்களின் அடையாளமான மின்விசிறிக்கே கிடைக்க வேண்டும். விசிறி போல் சுழன்று சுழன்று வேலை செய்யும் ஊழியர் அவர். அவருக்குத் தேவை உங்கள் வோட்டு. உங்களுக்குத் தேவை அவர் சேவை.

வோட் எங்கே போகிறது ?

கவிஞர் : வேட்பாளர் சிங்காரம் தேடி

நாம் எங்கே போகின்றோம் ?

கவிஞர் : நல்வாழ்வைத் தேடி.

உங்கள் மனத்தைக் கவரவும் கலைக்கவும் மாற்றுக் கட்சித் தோழர்கள் பல உத்திகளைக் கையாளுவார்கள். நீங்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம்.

கவிஞர் கண்ணே கண்ணே உறங்காதே
காரில் வருவார் கலங்காதே
அண்ணே அண்ணே மயங்காதே
ஆயிரம் சொல்லுவார் நம்பாதே

நண்பர் சிங்காரம் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதவர். இரண்டும் ஒன்று தான் என்ற மனப் பக்குவத்தில் இருப்பவர். எந்த நிலையிலும் மக்கள் தொண்டுக்குத்தான் முக்கியத்துவம் கொடுப்பார்.

போனால் போகட்டும் போடா - இந்தத்
தேர்தலில் நிலையாய் ஜெயித்தவன் யாரடா ?

என்று அவர் கவலைப்படாமல் இருக்கக் கூடிய அறிஞர்தான். ஆகையால் அவருக்கு வெற்றியைத் தேடித் தருவது அவரது நண்பர்களது தலையாய பொறுப்பு.

வோட்டு வாங்கப் போனோம்
வெற்றி வாங்கி வந்தோம்

என்று அவர்கள் முழங்கி அந்த ஆரவாரத்தில் இந்தப் பேட்டை மக்களின் செவிகள் செவிடாக வேண்டும். காரணம்:

நாம் பெற்ற செல்வம் நலமான செல்வம்
தேடி உழைக்கும் சிங்காரச் செல்வம்
கேட்டால் இனிக்கும் இக்காது
சுவைத்தால் இனிக்கும் தேன்பாகு

அடேடே அதோ நண்பர் சிங்காரமே வந்து விட்டார். அவர் பேச்சைக் கேட்க நீங்கள் ஆவலுடன் இருக்கிறீர்கள் என்பதை நான் உணருகிறேன்.

அஞ்சா நெஞ்சரே வருக
ஆண்மை உருவே வருக

கவிஞர் : கொஞ்சும் தமிழே வருக
கொட்டு முழக்கம் பெருக!

நம் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான பொதுநல ஊழியர் சிங்காரம் அவர்களுக்கே, வரும் நகராட்சி உறுப்பினர் தேர்தலில் உங்கள் பெருவாரியான வாக்குகளைக் கொடுத்து வெற்றி பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறோம்.

என்ன பொருத்தம் நமக்குள்
என்ன பொருத்தம்
தேர்தல் என்னும் நாடகத்தில்.....
வெற்றி.........ஜயமே.

—கோமதி சுவாமிநாதன்



கால்கேட்டின் மூலம் நாள் முழுவதும் வாய் துர்நாற்றத்தை அகற்றி பற்கள் சொத்தையாவதையும் தடுங்கள்!




ஏனெனில் ஒரே தேய்ப்பில் கால்கேட் கிரீம், துர்நாற்றத்தையும், சொத்தையையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒழித்துவிடுகிறது.

கால்கேட், 10ல் 7 சந்தர்ப்பங்களில் உடனடியாக வாய் துர்நாற்றத்தை அகற்றுகிறது என்பதையும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட்டினுல் பற்களைத் துலக்கும் முறையால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பெருமளவில் ஏராளமானவர்களுக்குச் சொத்தை தடுக்கப்படுகிறது என்பதையும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. இந்த சாதனை கால்கேட் ஒன்றுக்குத்தான் உண்டு!

கால்கேட்டின் நீடித்திருக்கும் நூதன நறுமணத்திற்காக, குழந்தைகள் அதனுலேயே பல் துலக்க விரும்புகிறார்கள்!

நீங்கள் பற்பொடியை விரும்பினால் இந்தப் பலன்கள் அனைத்தையும் கால்கேட் டூத் பவுடர் மூலம் அடையலாம். ஒரு டப்பி பல மாதங்களுக்கு வரும்.



பசிகத்தத்தீர்க்கும், வாயில் நறுமணம் கமழவும், வெண்மையான பற்களைப் பெறவும் வழக்கமாக கால்கேட்டினுல் பல்துலக்குங்கள்

...உலகிலேயே பெரும்பாலானவர்கள் மற்றெல்லாப் பற்பசைகளையும் விட, கால்கேட் டெண்டல் கிரீமையே வாங்குகிறார்கள்.

★ ● ★ இம்மூன்று அருமையான திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு எத்தனை பேருக்குக்கிட்டுமோ, தெரியாது. படத்தைப் பார்க்க முடியாது போனாலும் அவற்றைப் பற்றித்தெரிந்து கொள்ள வாவது செய்யலாமே! ★ ● ★

தயவுசெய்து காதலிக்க வேண்டாம்!

"அழகான பொருள் என்றென்றும் இன்பம் தருவதாகும்" என்ற கவிஞர் வாக்கு முற்றிலும் உண்மை என்பது மீண்டும் நிருபிக்கப்பட்டு விட்டது.

சமீபத்தில் சென்னை சினிமா விசிறிகள் சங்கத்தார் ஹங்கேரி நாட்டுத் திரைப் படங்கள் மூன்றைக் காண்பித்தார்கள். மூன்றும் ஒவ்வொரு விதத்தில் சிறப்பாக அமைந்திருந்தன. அவற்றில் இரண்டு பத்து ஆண்டுகளுக்கு முன்பு எடுத்த படங்கள்தான். ஆயினும் இன்றைக்கும் பார்க்க மகிழ்ச்சி யூட்டுபவையாக இருக்கின்றன. அழகும் கலையும் பின்னிப் பிணைந்து என்றென்றும் புதுமையாக மிளிரும்படி செய்துவிட்டன.

மூன்று படங்களும் தரமான படங்கள் என்றாலும், அவற்றில் எது சிறந்தது, முதல் பரிசு பெறத் தக்கது என்றால் "கிட்" என்ற படத்தைத்தான் தேர்ந்தெடுக்கத் தோன்றும்.

கிட் ஓர் அனாதைப் பெண். அத்துடன் பொல்லாத விஷமம். துருதுருவென்று ஏதாகிலும் செய்து பெரிய குழப்பத்தை உண்டாக்கிவிடுவாள். அவளை எங்கு வேலைக்கு வைத்தாலும் அங்கு ஏதாகிலும் ஒரு யந்திரத்தை யாரும் எதிர்பாராதபோது முடுக்கி விட்டுவிடுவாள். பெரிய கலாட்டாவாகி விடும். அதனால் அவளைக் கண்டாலே எந்தத் தொழிற்கூட மானேஜருக்கும் பயம்தான்.

இப்படிப்பட்டவள் பார்க்கவாவது கவர்ச்சியுடன் இருக்கிறாளா — இல்லை. அவளை எந்த இளைஞனும் ஏறெடுத்துக் காதல் நோக்குடன் பார்ப்பதில்லை. இது வேறு ஒரு தாபம். கடைசியில் ஒருவிதமாகக் காதலிக்கும் சந்தர்ப்பம் வரும்பொழுது அதை வெளியிடத் தெரியாத கஷ்டம். இப்படிப்பட்ட குணம் கொண்ட ஒரு பாத்திரத்தைக் கொண்டு மெல்லிய நகைச்சுவை இழையோட ஓர் அருமையான காதல் கதையை சிருஷ்டித்திருக்கிறார்கள்.

"கிட்" என்ற பாத்திரத்தின் குண சித்திரத்தைக் கடைசிக்காட்சி வரையில் பிசிறுமல் ஒரு சீராகப் புனைந்திருப்பது உயர்தரமான கலைப் பண்பைக் காட்டுகிறது. ★

"தயவுசெய்து காதல் வேண்டாமே" என்பது மற்றொரு அருமையான திரையோவியம். தொழிலாளரின் வாழ்க்கையைப் புறப் படமாகக் கொண்டு அமைக்கப்பட்ட படமாகும் இது. நான்கு தொழிலாளர்களில் தலைவனாக விளங்குபவன் — காதலைக் கட்டோடு வெறுப்பவன். "காதலுக்கு இடம் கொடாதீர்கள். அது கவலையைச் சுற்றச் செய்யும். தூக்கத்தைக் கெடுத்துக் கண் விழிக்கச் செய்யும். பெருமூச்சு விட்டு, தவிக்க வைக்கும். இந்தக் காதலே வேண்டாம்" என்று தன் நண்பர்களுக்கு உபதேசிக்கிறான். அதுமட்டுமல்ல. தன் நண்பர்களைக் காதல் வலையில் விழாமல் தடுத்துக் காப்பாற்றவே செய்கிறான். ஆயினும் என்ன? அவனே அந்தக் காதல் வலையில் சிக்கிக் கல்யாணம் செய்து கொள்ளும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அப்போது அவன் கூறும் மொழிகள் உள்ளத்தைத் தொடுகின்றன.

"காதல் பொல்லாதது என்று சொல்லி விட்டு நானே அந்த வலையில் விழுந்துவிட்டேன். அதற்காக வேண்டி நீங்கள் என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ளுகிறேன்" என்கிறான்.

தன் காதலுக்காக உதைகளையும் திட்டுக்களையும்கூடத் தாங்கத் தயாராகிவிடும் அவனை அவன் நண்பர்கள் திட்டப் போகிறார்களோ, உதைக்கப் போகிறார்களோ என்று எதிர்பார்க்கிறோம். ஆனால் அவர்களோ அவனை விட்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடுகிறார்கள்.

"எங்கே ஓடுகிறீர்கள்?" என்று கேட்கிறான் பக்கத்திலிருந்த நடுத்தர வயதினன். "கல்யாணம் செய்துகொள்ளத்தான்" என்ற பதில் கிடைக்கிறது.

இப்படி முடிகிறது படம். இடையில் சர்க்கஸ் பெண்களிடம் இத்தொழிலாளர் மயங்குவதும், ஒரு நடுத்தர வயதுள்ளவர்— கல்யாணமாகாதவர் — சர்க்கஸ் பெண்களிடம் மயங்கித் தானும் தன் உடலைப் பேண நினைத்து ரகசியமாகக் குளிக்கும் அறையில் 'டம்பள்ஸ்' எடுத்துப் பயிற்சி செய்வதும், மனைவி வந்ததும், அதை மறைத்து வைக்க முயன்று தோல்வியுறுவதும் போன்ற ஹாஸ்யக் கட்டங்களும் கதையோடு ஒட்டிச் செல்கின்றன. ★

மற்றொரு படம்: நாஜி ஜெர்மானியர்கள் ஹங்கேரி மக்களை வென்று விடுகிறார்கள். சிறைப் படுத்தப்பட்ட கைதிகளில் கால் பந்தாட்டத்தில் தேர்ந்தவர்களைக் கொண்டு ஜெர்மன் சோல்ஜர்களுடன் ஆட ஒரு கால் பந்தாட்டப் போட்டி ஏற்பாடு செய்கிறார்கள். கைதிகள் வெற்றியடைவதைக் கண்டு, கோபமுற்று, "அது விளையாட்டு" என்றுகூடக் கருதாமல் அவர்களை நாஜிகள் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிடுகிறார்கள்.

முழுக்க முழுக்க யுத்தக் கைதிகளின் மூகாமையே வைத்து எடுக்கப்பட்ட படம். காதல் கீதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஜெர்மன் அதிகாரி தமது மனைவியுடன் கால் பந்தாட்டப் போட்டியைக் காண வருகிறார், சிறிது நேரம். அந்தப் பெண்ணைத் தவிர, வேறு பெண் வாசனையே இந்தப் படத்தில் கிடையாது. இருப்பினும் சுவையாக இருக்கிறது.

மொத்தத்தில் கம்யூனிஸ்ட் நாட்டிலிருந்து வந்துள்ள இப்படங்கள், கலையும், கருத்தும், சுவையும் கொண்ட படங்களாக இருந்தன. இனக் கவர்ச்சி, கேளிக்கை என்ற பெயரில் கேலிக் கூத்து ஒன்றும் கிடையாது. சுத்தமான படங்கள், உயர்தரமான படங்கள்!

— எஸ். வி. எஸ்.

மகாபாரதம்

ராஜாஜி

கிருஷ்ணன் இவ்வாறு சொன்னதைக் கேட்டு, யுதிஷ்டிரன் மகிழ்ச்சி அடைந்தான். "மாதவன்★ சரியாகச் சொல்கிறான். சத்தியமே காக்கத் தக்கது. ராஜ்யமன்று. கோவிந்தன் ஒருவனே என்னை உள்ளபடி அறிந்தவன். யுத்தம் செய்ய வேண்டும் என்று கேசவன் நமக்குச் சொல்லும் காலத்தில் யுத்தம் செய்வோம். இப்போது, விருஷ்ணி குல வீரர்கள் திரும்பிப் போகக் கடவர். தருமம் தவறாமல் இருங்கள். பிறகு ஒரு காலத்தில் கூடுவோம்" என்று யுதிஷ்டிரன் அவர்களுக்குச் சமாதானம் சொல்லி அனுப்பினான்.

அஸ்திரங்கள் பெறுவதற்காகப் போன அருச்சுனன் வெகு காலம் திரும்பி வரவில்லை. பீமனுடைய துக்கமும் கோபமும் முன்னைவிட அதிகமாயிற்று. யுதிஷ்டிரனைப் பார்த்து அவன் சொல்லலானான் :

"மகாராஜாவே! நம்முடைய உயிரெல்லாம் அருச்சுனனிடத்தில் இருப்பது உமக்குத் தெரியும். உம்முடைய உத்தரவின் பேரில் போனவன் என்ன ஆனானோ தெரியவில்லை. அவனுக்கு ஏதேனும் ஆபத்து நேரிட்டு அவன் இறந்தால் நம் கதி என்ன? அருச்சுனன் இல்லாவிடில் பாஞ்சாலனும், சாத்யகியும், கிருஷ்ணனுங்கூட நம்மைக் காப்பாற்ற முடியாது. அருச்சுனன் இறந்தானானால் அந்தத் துக்கத்தை என்னால் தாங்க முடியாது. உம்முடைய விளையாட்டால் நாம் இந்தத் துன்பங்களையெல்லாம் அடைந்தோம். அற்பர்களாகிய நம்முடைய பகைவர்கள் பலமுள்ளவர்களானார்கள். வனவாசம் செய்வது க்ஷத்திரியனுடைய தருமம் அல்ல. அரசு புரிவதே க்ஷத்திரியனின் கடமையாகும். ஏன் நமக்கு உரிய தருமத்தை விட்டுவிட்டு இவ்வாறு பிடிவாதம் செய்கிறீர்? அருச்சுனனை வனத்திலிருந்து திருப்பி அழைத்து, கோவிந்தனையும் வரவழைத்து உடனே திருதராஷ்டிரன் மக்கள் மேல் போர் புரிவோம். அந்தத் துராத்மா சகுனியையும், கர்ணனையும், துரியோதனனையும் வதம் செய்து நான் திருப்தி அடைவேன். பிறகு நீர் வேண்டுமானால் காட்டுக்குப் போய்த் தவம் செய்யலாம். உடனே செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் தாமதம் செய்வது பெரும் குற்றமாகும். மோசம் செய்தவனை மோசத்தால் கொல்லுவது பாபம் அல்ல. ஒரு பகலும், இரவும் சேர்ந்து ஒரு வருஷத்துக்குச் சமானமாகிய சில விரதங்களைச் செய்து முடிக்கலாம் என்பது தரும சாஸ்திரம். இன்றிலிருந்து பதின்மூன்று நாட்கள் விரதமிருந்து முடித்தோமானால் பிரதிக்ஞை முடிந்து போகும். எனக்கு விடை கொடும். நியானது புதரை எரிக்க ஆசைப்படுவது போல் நான் துரியோதனனைக் கொல்ல ஆசைப்படுகிறேன்."

பீமன் இவ்வாறு சொன்னதைக் கேட்டு, தருமபுத்திரர் தம்பியைக் கட்டி அணைத்துக் கொண்டு, "அன்புக்குரியவனே! பதின்மூன்று வருஷங்கள் முடிந்ததும் காண்டீபம் ஏந்திய வீரனான அருச்சுனனும் நீயும் யுத்தம் செய்து துரியோதனனைக் கொல்லுவீர்கள். சந்தேகமில்லை. சரியான காலம் வரும்வரையில் பொறுத்துக் கொள்வாய். பாவத்தில் மூழ்கிய துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் தப்பமாட்டார்கள்; சந்தேகமில்லை" என்று சமாதானப்படுத்தினார்.



★ மாதவன், கேசவன், கோவிந்தன், வாசுதேவன் இவை கிருஷ்ணனின் பெயர்கள்.

இவ்வாறு சோகத்தால் பீடிக்கப்பட்டுச் சகோதரர்கள் வாதாடிக் கொண்டிருக்கும்போது, பிருகதசுவ மகரிஷி பாண்டவர்களுடைய ஆசிரமத்துக்கு வந்து சேர்ந்தார். அவருக்குச் செய்ய வேண்டிய பூஜையைச் செய்து களைப்புத் தீர்த்துக் கொள்ளச் செய்தபின், யுதிஷ்டிரன் அவரருகில் உட்கார்ந்து சொன்னான்:

''பகவானே! வஞ்சகர்கள் எம்மைச் சூதாட்டத்துக்கு அழைத்து மோசம் செய்து எம்முடைய தனத்தையும் ராஜ்யத்தையும் பறித்துக் கொண்டார்கள். அதன் பயனாக நானும் ஒப்பற்ற வீரர்களான என்னுடைய சகோதரர்களும், பாஞ்சாலியும் வனவாசம் செய்கிறோம். தம்பி அருச்சுனன் அஸ்திரங்கள் பெறப்போனவன் வெகு காலமாகியும் திரும்பவில்லை. அவன் இல்லாமல் நாங்கள் உயிர் இழந்தவர்கள் போல் இருக்கிறோம். அருச்சுனன் அஸ்திரங்களைப் பெற்றுத் திரும்பி வருவானா? அவனை நாங்கள் எப்போது பார்ப்போம்? தீராத துக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறோம். என்னைப் போலத் துக்கம் அனுபவித்த மனிதன் இவ்வுலகில் வேறு ஒருவனும் இருந்ததில்லை'' என்றான்.

''துக்கத்தில் மனத்தைச் செலுத்தாதே! அஸ்திரங்களும் வரங்களும் பெற்றுக் கொண்டு அருச்சுனன் வந்து விடுவான். பகைவர்களையும் ஜெயிப்பீர்கள். உன்னைப் போல் துர்ப்பாக்கியவான் உலகத்தில் இருந்ததில்லை என்கிறாய்! அது சரியல்ல. உன்னைக் காட்டிலும் மிக்க துயரத்துக்கு ஆளான நளன்





சரித்திரம் உனக்குத் தெரியவில்லை போலிருக்கிறது. நிஷத தேசத்து அரசனைப் பற்றி நீ கேட்டதில்லையா? பந்தய ஆட்டத்தில் இறங்கிப் புஷ்கரனால் வஞ்சிக்கப்பட்டு, நாடும் செல்வமும் எல்லாம் இழந்து, காட்டுக்குத் துரத்தப்பட்டான். வனவாச காலத்தில் அவனுடன் சகோதரர்களாவது பிராமணர்களாவது இருக்கவில்லை. கலி புருஷன் அவனைப் பிடித்துக் கொண்டதன் பயனாக நளன் தன் விவேகத்தையும் குணத்தையும் இழந்து புத்தி தடுமாறி, தன் கூட வந்த மனைவியையும் ஏமாற்றிக் காட்டில்

அவனைத் தனியாக விட்டுவிட்டு ஓடிப் போனான். நீயோ தேவர்களுக்கு ஒப்பான வீர சகோதரர்களால் சூழப்பட்டு வனவாசம் செய்கிறாய். ஒப்பற்ற பாஞ்சாலியும் கூட இருக்கிறாள். உன்னுடைய மதியும் களங்கமற்று நல்ல நிலையில் இருக்கிறது. நீ துயரப்படலாகாது. நீ பாக்கியவான்'' என்று கூறினார் மகரிஷி.

பிறகு ரிஷி நளனுடைய சரித்திரத்தை யுதிஷ்டிரனுக்கு விஸ்தாரமாகச் சொன்னார்.

நளன் கதை பாரதத்தில் இருபத்தெட்டு அத்தியாயங்களாகும். அதன் முடிவில் ரிஷி சொல்கிறார்:

''பாண்டவனே! நளன் மிகவும் பயங்கரமான துக்கத்தை அடைந்து முடிவில் க்ஷேமத்தை அடைந்தான். நீ அவனைப் போல் கலியால் பீடிக்கப்படாமலும் தனியாக இல்லாமலும் சகோதரர்களுடனும் திரௌபதியுடனும் இருந்து கொண்டும், தருமத்தைச் சிந்தித்துக் கொண்டும், வேத வேதாந்தங்களை ஓதிய பிராமணர்களால் எப்போதும் சூழப்பட்டும், புண்ணிய கதைகளைக் கேட்டுக் கொண்டும் இருக்கிறாய். துயரப்பட வேண்டாம். மனித வாழ்க்கையில் சோதனைகள் நேருவது புதிதல்ல.''

இவ்வாறு பிருகதசுவ மகரிஷி நளன் கதையைச் சொல்லி யுதிஷ்டிரனுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறினார்.

31. அகஸ்தியர்

இந்திரப்பிரஸ்தத்தில் யுதிஷ்டிரனைப் பூஜித்து வந்த பிராமணர்களின் கூட்டம், வனவாசத்திலும் கூடவே இருந்து கொண்டு வந்தது. பரிவாரத்தைச் சமாளித்துக் கொண்டு காலம் கழிப்பது கஷ்டமாகவே இருந்தது. அருச்சுனனைத் தவம் செய்ய அனுப்பிவிட்ட பிறகு, ஒரு நாள் லோமசர் என்கிற பிரம்மரிஷி பாண்டவர்களைக் காண வந்தார். ''இந்தப் பரிவாரத்தைக் குறைத்துக் கொண்டு தீர்த்த யாத்திரை செய்யுங்கள். லகு பரிவாரமானால்தான் இஷ்டப்படி பிரயாணம் செய்ய முடியும்'' என்று லோமச முனிவர் சொன்ன யோசனையை ஒப்புக் கொண்டு யுதிஷ்டிரன் அனைவருக்கும் தெரியப்படுத்திவிட்டான்.

''ஆயாசம் தாங்க மாட்டாதவர்களும், நல்ல போஜனம் விரும்பிச் சமையற்காரனை அண்டி நிற்பவர்களும் ராஜபக்தியை மட்டும் முன்னிட்டு என்னிடம் வந்திருப்பவர்களும் எல்லாரும் திருதராஷ்டிர மகாராஜாவைப் போய் அடையலாம். அவர் ஆதரிக்காவிட்டால் பாஞ்சால ராஜன் துருபதனிடம் போகலாம்'' என்று சமாதானப்படுத்தித் தன் பரிவாரத்தைச் சுருக்கிக் கொண்டான்.

பிறகு பாண்டவர்கள் புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை போனார்கள். அங்கங்கே அவர்கள் கண்ட இடங்களில் பூர்வ கதைகளைக் கேட்டுக் கொண்டே சென்றார்கள். இவ்வாறு சொல்லப்பட்ட கதைகளில் அகஸ்தியர் கதை ஒன்று.

அகஸ்தியர் ஒரு சமயத்தில் சில பித்ருக்கள் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு துன்ப நிலையில் இருப்பதைக் கண்டார். ''நீங்கள் யார்? ஏன் இந்தக் கடுமையான தவம் புரிகிறீர்கள்?'' என்று அவர் கேட்டதற்கு அந்த ஜீவன்கள், ''மகனே! நாங்கள் உன்னுடைய முன்னோர்களாவோம். நீ விவாகமில்லாமல் இருப்பதால் உனக்குப் பின் எங்களுக்குப் பிண்டம் தருபவர்கள் இல்லாமல் போவார்கள். அதற்காக இந்தத் தவம் செய்கிறோம். நீ புத்திர சந்தானம் பெறுவதற்கு வழி தேடினாயானால் நாங்கள் இந்த நிலையிலிருந்து தப்புவோம்'' என்றார்கள்.

இதைக் கேட்ட அகஸ்தியர் விவாகம் செய்து கொள்ளத் தீர்மானித்தார்.

விதர்ப்ப தேசத்து அரசன் தனக்குக் குழந்தை உண்டாகவில்லை என்று துயரப்பட்டுக் கொண்டிருந்தான். அதற்காக அவன் அகஸ்தியரை வணங்கி முனிவருடைய ஆசியைக் கேட்டான்.

''உனக்குக் குழந்தை உண்டாகும். ஓர் அழகிய மகளைப் பெறுவாய். அவளை எனக்கு மனைவியாகத் தருவாயாக'' என்று அகஸ்தியர் அந்த அரசனுக்கு வரம் தந்தார்.

உலகத்திலுள்ள ஸ்திரீ லக்ஷணங்களையெல்லாம் சேர்த்து மிக்க சௌந்தரிய ரூபத்தை மனத்தில் நிருமாணித்துக் கொண்டு அரசனுக்கு அகஸ்தியர் இந்த வரம் தந்தார். அரசனுடைய பாரியையும் கருப்பம் தரித்துப் பெண் குழந்தையைப் பெற்றாள்; குழந்தையின் பெயர் லோபாமுத்திரை. லோபாமுத்திரை அகஸ்தியர் மனத்தில் கற்பனை செய்து கொண்ட லக்ஷணங்களுடன் நிகரற்ற அழகு வாய்ந்தவளாக வளர்ந்து விவாகத்துக்குத் தகுந்த பருவம் அடைந்தாள்.

விதர்ப்ப ராஜனுடைய மகளின் ரூபலாவண்ணியம் க்ஷத்திரிய உலகத்தில் பிரசித்தியாக இருந்தாலும், அகஸ்தியருக்குப் பயந்து எந்த ராஜகுமாரனும் அவளை வரிக்க முன்வரவில்லை.

பிறகு ஒரு நாள் அகஸ்திய முனிவர் விதர்ப்ப தேசம் வந்து அரசனைக் கண்டு, "என்னுடைய பித்ருக்களுக்குத் திருப்தி செய்யப் புத்திரனை விரும்புகிறேன். வாக்குத் தந்தபடி உன் மகளை எனக்குத் தருவாயாக" என்று கேட்டார்.

நூற்றுக் கணக்கான கன்னிகைகளால் சூழப்பட்டுத் தாதிமார் பணிவிடையைப் பெற்று வளர்ந்த தன் அருமை மகளை, வனவாசம் செய்யும் முனிவருக்குக் கொடுத்துவிட அரசனுக்கு மனம் வரவில்லை. ஆனால் முன் செய்த வாக்குத்தத்தத்தை நினைத்து ரிஷியின் கோபத்துக்குப் பயந்தான்.

ராஜாவும் தாயாரும் துயரத்தில் மூழ்கி வருந்துவதை லோபாமுத்திரை பார்த்தாள். "ஏன் வருந்துகிறீர்கள்? என் நிமித்தம் நீங்கள் சாபம் அடையலாகாது. என்னை முனிவருக்கே கொடுத்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். துயரம் வேண்டாம். இதுவே என் பிரியமும்" என்றாள்.

லோபாமுத்திரையின் சொல்லைக் கேட்டு அரசன் சமாதானம் அடைந்தான். முறைப்படி அவளை அகஸ்தியருக்குக் கொடுத்து விவாகமும் முடிந்தது.

முனிவருடன் போக ராஜகுமாரி புறப்பட்டாள். "இந்த உயர்ந்த ஆடைகளையும் ஆபரணங்களையும் கழற்றிவிடு" என்றார் அகஸ்தியர்.

உடனே லோபாமுத்திரை தன் அழகிய ஆபரணங்களையும் வஸ்திரங்களையும் கழற்றி அவற்றைத் தன் தாதிகளுக்கும், கன்னிகளுக்கும் கொடுத்துவிட்டு, மரவுரியும் தோலும் கட்டிக் கொண்டு முனிவருடன் சந்தோஷமாக வனம் சென்றாள்.

கங்கா துவாரத்தில் லோபாமுத்திரை அகஸ்தியருடன் அநேக நாட்கள் விரதம் காத்துப் பணிவிடை செய்து முனிவருடைய அன்பைப் பூரணமாகச் சம்பாதித்தாள்.

ஒரு நாள் பிரியம் மேலிட்டு முனிவர் மனைவியைக் கருப்பம் வகிக்க அழைத்தார். லோபாமுத்திரை ஸ்திரீகளுக்கு இயற்கையான வெட்கம் மேலிட்டுத் தலைவணங்கிக் கைகூப்பி, "ஸ்வாமி! நான் கடமைப்பட்டிருக்கிறேன். அயினும் என்னுடைய பிரியத்தை நீங்கள் செய்ய வேண்டும்" என்றாள்.

அவளுடைய ரூப சௌந்தர்யத்தினாலும், சீலத்தினாலும் முற்றிலும் மனம் கவரப்பட்ட முனிவர். "அப்படியே!" என்றார்.

"பிதாவினுடைய வீட்டில் இருந்த காலத்தில் நான் படுத்த படுக்கையும் அணிந்த வஸ்திராபரணங்களையும் போன்று இவ்விடத்தில் உம்மால் நான் அடைந்து, நீங்களும் திவ்யாலங்காரங்களை அணிந்து, சந்தோஷமாக என்னைச் சேர வேண்டுமென்பதே என் விருப்பம்" என்றாள்.

"நீ சொல்லியபடி செய்ய எனக்குச் செல்வம் ஏது? சௌகரியமேது? நீயும் நானும் வனத்தில் வசிக்கும் தரித்திரர்கள் அன்றோ?" என்றார் அகஸ்தியர்.

"ஸ்வாமி! நீர் தவப் பெருமையால் எல்லாம் படைக்கவல்லவர்! ஒரு நிமிஷத்தில் உலகத்தில் உள்ள செல்வம் அனைத்தும் நீர் சம்பாதிக்க முடியும்" என்றாள்.

"அவ்வாறு நான் சம்பாதித்தால் அது தவத்தின் பயனை அழித்துவிடும். இது உனக்கு விருப்பமா?" என்றார்.

"அதை நான் விரும்பவில்லை. தவத்தைச் செலவழிக்காமல் போதிய தனம் எங்கேயாவது சம்பாதித்துக் கொண்டு வரவேண்டும் என்கிறேன்" என்றாள்.

"பாக்கியவதியே! அப்படியே செய்கிறேன்" என்று அகஸ்தியர் மனைவிக்குச் சொல்லிவிட்டு, சாதாரணப் பிராமணனைப் போல் அரசர்களை யாசிக்கப் புறப்பட்டார்.

மிக்க செல்வம் படைத்தவன் என்று பிரசித்தி பெற்ற ஓர் அரசனிடம் அகஸ்தியர் சென்றார்.

"தனம் வேண்டி வந்தேன். பிறருக்குக் குறைவாவது, துன்பமாவது ஏற்படாமல் எனக்குத் தானம் தர வேண்டும்" என்றார். (தொடரும்)

காணாத பாதம்

பெ. தூரன்





என்னென்ன ஆட்டங்கள் அம்மா! — அவன்
இவ்வுலகில் செய்கின்ற வேடிக்கை ஒன்றோ?
— என்னென்ன

பித்தனைப் போலவே வருவான் - நொடியில்
பேரெழில் கண்ணனெனக் குழலூதி நிற்பான்
எத்தனை வேடம் புனைந்தே — எம்மை
ஏமாற்றும் மாயங்கள் யார்கூற வல்லார்?
— என்னென்ன



வேல்கொண்டு குத்துவேன் என்பான் - அந்த
விளையாட்டி லேசல்ல பலனென்று மகிழ்வான்
கோல்கொண்டு ஆண்டியாய்ச் செல்வான் -
மண்ணில்
குன்றுகள் செய்தங்கு நின்றாடல் புரிவான்
— என்னென்ன





தேனென்று தமிழ்கூறி வருவான் - அந்தத்
தித்திக்கும் சொல்லுக்கோர் இணையேதும் உண்டோ ?
ஓமென்று என்னவோ சொல்வான் — அதன்
உண்மையை மறைவாகத் தந்தைக் குரைப்பான்
— என்னென்ன

கொஞ்சிடும் குமரன்நான் என்பான் - நல்ல
கோழிக்கும் மயிலுக்கும் தோழனாய் விடுவான்
அஞ்சிடும் எளியார்கள் வந்தால் - கையில்
ஆறுதல் காட்டியே புன்முறுவல் செய்வான்
— என்னென்ன

கலியென்னும் இருள்நீக்கும் ஒளியாம் - என்றன்
கண்ணுக்குள் மணியான சின்னக் குழந்தை
நிலவென்னும் அமுதச் சிரிப்பால் - இங்கென்
நெஞ்சங் கவர்ந்துசெய் விந்தையென் சொல்வேன்
— என்னென்ன

மணலுக்குள் பாதம் மறைப்பான் - உடனே
வந்துபார் பாதத்தைக் காணோமே என்பான்
கணமொன் றப்பாதத்தைக் கண்டால் - அதுவே
கரையில்லாப் பேரின்பம் யாவர்க்கும் அன்றோ?
— என்னென்ன



வசீகரத்தையும், பெருமிதத்தையும் கொடுக்கும் நறுமணம் உங்களுக்கு பாமாலிவ் லவண்டர் டால்க் *உபயோகிப்பதால்.*

உங்களுக்கு மிகவும் பிடித்தமான ஸெண்டுகள்—உங்களுக்காகவே மீண்டும் உருவாக்கப்பட்டிருக்கின்றன!

ஒரு காலத்தில் உலக அழகுக் கேந்திரங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவையும், உங்களுக்கு மிகவும் பிடித்தமானவையுமான ஸெண்டுகளின்றி இனி நீங்கள் தவிக்கவேண்டாம்... இன்று பாமாலிவ் லவண்டர் டால்க் மட்டுமே அளிக்கும் வசீகர நறுமணத்தினாலும், பெருமிதத்தினாலும் உங்கள் உடலைச் சொகுசாகப் பராமரிக்க முடியும். பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பு முழுவதும் தூவிக் கொண்டு, சூழ்ந்து நிற்கும் அதன் இனிய வசீகர நறுமணத்தினால் களிப்படையுங்கள்.

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும் நறுமணம் சூழ்ந்த அழகுடனுமிருக்க பாமாலிவ் லவண்டர் டால்க்.







மற்றும் பாமாலிவ் டால்க் டிலக்ஸ் —
மயக்கும் 17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை

PT.G.8 TAM.

இனிக்கும் நினைவுகள்



கோமகள்

9. "எனக்குப் புதிய வாழ்வா?"

"அந்தப் பழிக்கு நான் மட்டும் காரணமா?'' — துளசியின் இந்தக் கேள்விக்கு விஸ்வியால் சட்டென்று பதில் கூற முடியவில்லை. சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள். பிறகு, ''பழிக்கு நீங்கள் மட்டும் காரணமில்லை என்பதை உணர்கிறேன், சகோதரி! ஆனால் அவரை மட்டும் பழிக்குக் காரணகர்த்தாவாக்கி விடாதீர்கள். உங்கள்மீது அவர் கொண்ட அன்பையும், சந்தர்ப்ப வசத்தால் என்னை மணக்க நேர்ந்த விதியையும் உங்களைவிட நானே நன்கு அறிவேன். எனவே அந்தப் பழிக்கு நானும் ஒரு காரணம் என்பதை வருத்தத்தோடு உணர்கிறேன். இதற்காக உங்களிடம் நான் மன்னிப்பு வேண்டப் போவதில்லை. வேண்டினாலும் அது எனக்குக் கிடைக்காது என்பது தெரியும். அவரை மன்னிக்கவே உங்கள் இதயத்தில் கனிவு சுரக்காதபோது என்னைப் பற்றிப் பேச முடியுமா? எனவே இறுதியாக நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். நான்... நான் விவாகரத்து ஏற்றுப் பிரியக் காத்திருக்கிறேன்... உங்களுக்கு நான் செய்துவிட்டதாகக் கருதும் துரோகத்துக்கு இது தவிர வேறு பிராயச்சித்தமே இல்லை...''

''விஸ்வி!''-ராகவன் பதறியவாறே எழுந்து அவள் அருகில் வந்தார். ''ஏன் இப்படி உளறுகிறாய்?''

''பார்த்தீர்களா விஸ்வி! ஒரே தொட்டிலில் இரு குழந்தைகளைப் போட முடியாது என்றுதானே நீங்கள் விலகிவிடுவதாகக் கூறினீர்கள்? ஆனால் ஒரு குழந்தையை எடுத்தாலும் இரவலாகிவிட்ட தொட்டிலில் எனக்குச் சபலம் இல்லை. வாழ்வின் கற்பனைகளை விண்ணளாவ வளர்த்துவிட்டுப் பறிகொடுத்த வேதனையில் என்னையே நான் இழந்துவிட்டேன். இனி எனக்கு இதுபோன்ற அப்பாற்பட்ட சுகங்களும், இச்சைகளும் தோன்றப் போவதில்லை. நான் வாய்விட்டு முன்பெல்லாம் வேண்டிக்கொள்ளாவிட்டாலும் நீங்கள் வந்த புதிதில் விலகிச் சென்றிருந்தால் ஒருகால் பருவக் கனவுகளின் கோலாகலக் கற்பனையில் மூழ்கி அதை நான் வரவேற்றிருப்பேன். இப்போது விழுதூன்றிய ஆலமரமாகி விட்ட உங்களுக்குத்தான் இந்தக் குடும்பத்தின் மீது முழு உரிமையும் உண்டு. இதை நான் மறந்துவிட்டு உங்கள் ஈகையால் கிடைக்கப் போகும் இல்வாழ்வைப் பறித்துக் கொள்ளுவேன் என்று மட்டும் எண்ணி விடாதீர்கள். சீலியாவுக்குத் திருமணம் செய்யும் வயதில் எதற்கு என்னைப் பற்றிய இந்தப் பிரச்னை...?''

''சீலியாவுக்குத் திருமணம்!'' விஸ்வி விரக்தியாக நகைத்தாள். ''அது நடக்கப் போவதில்லை. நான் ஒருத்தியின் வாழ்வைப் பறித்துக் கணவனுடன் வாழாமல் அவளைக் கன்னியாகச் செய்தேன். அந்தப் பாபத்துக்குப் பிராயச்சித்தமாக என் மகள் கன்னியாகவே வாழ்ந்து மடிந்து முடியட்டும்!''

''விஸ்வி!'' என்றார் ராகவன்.

''இதென்ன பேச்சு?'' என்று கடிந்தாள் துளசி.


''மம்மி!'' என்று அலறி வெடித்த குரலோடு ஓடி வந்து அன்னையின் மார்பில் முகம் புதைத்து விம்மிய சீலியா, காற்றல் தென்றலில் அசைந்து கிடந்த ரோஜா மலர் கருகி விழுந்தாற்போல் சுருண்டு கிடந்தாள்.

விஸ்வி வேதனையுடன் முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டாள். சீலியா எழுந்து துளசியிடம் ஓடி மண்டியிட்டு அவள் மடியில் முகம் பதித்து விம்மினாள்: ''பெரியம்மா! சரி என்று சொல்லுங்கள், பெரியம்மா!''

உலகமே இருண்டு தன்னை விழுங்க வருவது போல் தவித்தாள் துளசி. சீலியாவுக்கு அவள் எவ்வித உறுதிமொழியும் அளிக்க முடியவில்லை. மாறாக அவள் விஸ்வியை நோக்கிக் கருணை மனுச் செய்து கொண்டாள். ''இதோ பாருங்கள், விஸ்வி! என்மேல் உள்ள வன்மத்தையும் ஆத்திரத்தையும் இந்தக் குழந்தை

மேல் காட்டலாமா? இந்தச் செழுங்கன்றின் வாழ்வைப் பணயம் வைப்பதன் மூலமா இந்த முதியவனை வாழ வைத்து விடமுடியும்? வளரும் கொடி அவள்; மலரும் மொட்டு அவள். உங்கள் வார்த்தைகளைக் கேட்டுக் குழந்தை என்னமாகத் துடிக்கிறாள் பாருங்கள்! அவள் மனம் குளிர நீங்கள் இப்படியெல்லாம் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.''

லிஸ்ஸி முரட்டுத்தனமாகப் படுத்திருந்தான். சொன்ன சொல்லில் இம்மியும் மாறாத உறுதியும் தெரிந்தது. சீலியாவின் விசிப்பும் அடங்கவில்லை. ராகவனின் தவிப்பும் ஓயவில்லை. இந்தப் பிரச்னையை 'உண்டு, இல்லை' என்று தீர்த்து முடிவு காணக்கூடிய இரண்டே பெண்களான



லிஸ்ஸியும் துளசியும் வாய் திறவா மௌனிகளாகி விட்டார்கள்.

காற்றோட்டமில்லாத புழுக்கம் சூழ்ந்த தவிப்பும், யார் எதைக் கூறி விடுவார்களோ என்ற அச்சமும் கணத்துக்குக் கணம் வியாபித்துச் சூழ்ந்தன. லிஸ்ஸி தன் முடிவை மாற்றப்போவதில்லை என்று சொல்லி விடுவாளோ என்ற நடுக்கத்தால் தன் உயிரின் உயிரான சீலியாவைக் கண்டு துடித்தார் ராகவன்.

நிமிடங்கள் கரையக் கரையச் சீலியாவின் விம்மல் மங்க மங்கத் துளசி மெல்ல எழுவது போலிருந்தது.

''துளசி!'' என்று கதறிவிட்டார் ராகவன். இப்படி அவள் பெயரை அவர் அன்பாகவோ, அருமையாகவோ அருகிருந்தோ, தூரமாக இருந்தோ விளிக்காதபோதும் நெஞ்சம் பூட்டுக் கழன்று மடை திறந்தாற்போல் சிந்திவிட்டது.

'துளசி!' — விநோதப் பூரிப்போடு மணந்தவரைப் பார்க்கிறாள் துளசி.

'துளசி, துளசி' என்று ஆயிரமாயிரம் குரல்கள் அதே குரல் பாவத்தில், அதே அன்பு ஜாடையில் ஒலிப்பதாகப் பிரமை தட்டியது. இதுவரை கேட்டே இராத இந்த நேருக்கு நேரான அழைப்பில், தன் வைராக்கியங்கள் எல்லாம் பொடியாகிவிட அவள் பூரித்து நின்றாள். விநோதப் புல்லரிப்பில், விசித்திரமான புளகத்தில் தான் கரைந்து, தன் சகலமும் அழிந்து ஐக்கியத்துள் ஐக்கியமாகி விட்ட பெருநிம்மதியில் முகம் ஒளி பூத்தது. முகமலரில் படபடத்த கண்கள் தாரை தாரையாக நீர் பெருக்கி நின்றன. மகத்தான, புனிதமான அன்



பின் பந்தத்தில் அப்போதே லயித்து அப்போதே புது மலர்ச்சி பூத்தாற்போல் தன் கணவனை முதன் முதல் அன்பு தந்து, அன்புக்கேங்கும் பார்வையால் தொழுதாள். அந்தக் கண நேரமான ஸ்பரிசத்தில் அவள் மூளை ரீங்கரித்தது. சுற்றிலுமிருந்த பொருள்கள்



அனைத்தும் சுழல்வது போலிருந்தது. மற்ற மூவரின் குரலும் அவளை 'என்ன? என்ன?' என்று வினவ, அந்தக் குரல் ஒலி மங்கிக் கொண்டே போயிற்று. ராகவன் ஓடி வந்து சட்டென அவளைத் தம் மீது சாய்த்துக் கொண்டார்.

சீலியா கையோடு ஸ்டெதாஸ்கோப் எடுத்து வராவிட்டாலும் முதன் முதலில் வாங்கிய பழைய ஸ்டெதாஸ்கோப்பை அவசரத்துக்குப் பயன்படுத்தினாள். விஸ்ஸியின் விருப்பப்படி துளசியை ராகவனது அறையிலிருந்த கட்டிலில் படுக்க வைத்தனர். சீலியா நாடியைப் பரிசோதித்து விட்டு, ''வெறும் அதிர்ச்சி மயக்கம். ஒன்றுமில்லை. அப்பா!'' என்று தந்தைக்குச் சமாதானம் கூறினாள். இதைக் கூறும்போது சீலியாவின் விழிகளும் கலங்கித்தான் கிடந்தன.

அன்னையிடம் விவரம் கூறி வருமாறு வேலைக்காரியை அனுப்பினார் ராகவன். அப்போது மீனாட்சிசுந்தரம் அலுவலகத்துக்கும், குழலி தோழி வீட்டுக்கும் போய்விட்டிருந்தனர். சரஸ்வதி பரபரப்போடும், படபடப்போடும் எதிர் வீட்டிலிருந்து ஓடிவந்தாள். பல வருடங்களுக்குப்பின் தன்னை வளர்த்து ஆளாக்கிய அன்னையை நேர்முகமாகச் சந்தித்த ராகவன், பெற்ற அன்னை



யைக் கண்ட களிவோடு வரவேற்ருர். ''ஒன்றுமில்லே அண்ணி. மயக்கம்தான். அறையில் படுத்திருக்கிருன்'' என்ருர்.

''அவளே ஏன் வரவழைத்து இப்படிச் சித்திரவதை பண்ணுகிருய், அப்பா? அவன் தெய்வமே என்று கிடக்கிருன்'' என்று நொந்தவாறே முன்னேறினுள் அவள்.

''என்னே இன்னும் மன்னிக்காமல் இப்படியெல்லாம் பேசுகிறீர்களே அண்ணி!''

''என் தங்கை தினசரி போராடித் தோற்றுத் தோற்று வாழ்ந்துவிட்டாள். இப்போது ஏன் அவளே ஆள் மேல் ஆள் விட்டு அழைத்து, அதிர்ச்சி தருகிறீர்கள்?''

''அண்ணி! அவளே அந்நியமாக நான் என்றுமே கருதியதில்லே...''

''ஆஹா ஹா! நன்ருகத்தான் பேசக் கற்றுக்கொண்டாய் போ. எங்கே அவள்? அவளுக்கு மயக்கம் தெளிந்திருந்தால் நான் அழைத்துப் போய்விடுகிறேன்.''

''ஏன்? அவள் இங்கிருப்பதால் நாங்கள் அவளே என்ன செய்துவிடப் போகிறேம்? அப்படி அவள் வரக் கூடாத இடத்துக்கு வந்துவிடவில் லேயே! அவள் என் மனேவிதானே?'' ராகவன் இத்தனே தைரியத்தோடு அண்ணியிடம் பேசுவது கண்டு லிஸ்லி யும் சீலியாவும் வியந்தனர்.

''ஓ! உனக்கு மனேவி அவள் ஒருத்தி தானே?'' என்று ஏளனமாகக் கூறிய படியே துளசியை நெருங்கிய சரஸ்வதி, அவளே உலுக்கினுள். ''அடி துளசி! எழுந்திரடி. போகலாம்'' என்ருள்.

''அண்ணி!''

என்னதான் அவள் வளர்த்த பிள்ளே யானுலும் ராகவன் ஆண்பிள்ளேயல் லவா? அந்தக் குரலில் சரஸ்வதி அம்மாள் நடுங்கி விட்டாள்.

''அவளே ஏன் உலுக்குகிறீர்கள்? அவள் இனி இங்கேயேதான் இருக்கப் போகிருள்!''

சரஸ்வதி அம்மாள் விக்கித்து நின் ருள். கூடவே உள்ளத்தில் பரவசம் பெருகியது. இப்படி ராகவன் சில வரு டங்களுக்கு முன்பே இந்தப் பிடிவாதக் காரி துளசியை அழைத்து வந்திருந் தால், அவளும் இன்று குழந்தை குட்டி யோடு இருக்க மாட்டாளா? கடவுளே! துளசியின் வாழ்வில் கருணே மழை பொழியும்! ஆனுலும் சரஸ்வதி வெளிப் புற வீம்பைத் தளர்த்த விரும்பவில்லே.

''பேஷாக வைத்துக் கொள் அப்பா! உன் மனேவியாச்சு, நீயாச்சு. கடைசி யில் நீங்களெல்லாம் ஒன்னு. நான் தான் வேறு. விடிந்ததிலிருந்து பொழுது அமரும் வரை அவளேப் பார்த்துப் பார்த்து நான் அழுததாவது மீதி யாகட்டும்.''

''அக்கா!'' என்று ஈனஸ்வரத்தில் புலம்பினுள், சத்தம் கேட்டுத் தெளிந்த துளசி.

அதைச் செவி மடுத்தும் பாராதவ ளாக சரஸ்வதி ஓட்டமும், நடையுமாக வீட்டுக்கு வந்தாள். பூஜை அலமாரி யைத் திறந்து, திருப்பதி வேங்கடா சலபதி படத்தை நோக்கிக் கரம் கூப்பினுள். ''கடவுளே! துளசி வாழட் டும். எனது பாராமுகமாவது இங்கே அவளே ஓடிவர விடாமல் அங்கேயே நிறுத்தி வைக்கட்டும். அவள் வாழ்வு மலரட்டும்.''

மயக்கம் தெளிந்த துளசி யருகே வந்து ராகவன் அமர்ந்தபோது, சீலியா மறுபடியும் நாடித் துடிப்பைச் சோதித் தாள். பிறகு பெரியம்மாளைப் பார்த்து மனம் விட்டு மலர்ந்த சிரிப்பொன்றைச் சிந்திவிட்டு விலகினுள்.

''துளசி!''

தம்மை நோக்கி விரியும் விழிகளே ராகவன் பார்த்தார். துயரம் மண்டிக் கிடக்கும் சிவப்பு விழிகளில் விவரம் புரியா அச்சம்!

''இப்போது எப்படி இருக்கிறது, துளசி?'' என்று கேட்டார் ராகவன்.

துளசி அதற்குப் பதில் கூறவில்லே.

''அக்கா கோபமாகப் போகிருளே!'' என்று மனம் பொங்கத் தனக்குத்தானே கூறிக் கொண்டாள்.

கொஞ்ச நேரம் பொறுத்து ராக வன், ''உனக்கு இங்கிருக்கப் பிடிக்க வில்லேயா துளசி?'' என்று கேட்டார்.

கணவரின் விளிப்பில் தனது நெஞ் சக் கமலம் விரிந்து மணம் வீசுவதாக அவள் உணர்ந்தாள். அதைக் கண் மூடி ரசிக்கவும் செய்தாள். கூடவே இத்தனே நாட்களும் எப்படி எப்படி யெல்லாமோ அனுபவித்திருக்க வேண் டிய அவரது அன்பையெல்லாம் இழந்து நிற்கும் ஏக்கமும் கவிந்தது.

''நீ இனி இங்கேயேதான் இருக்கப் போகிருய் என்று அண்ணியிடம் கூறி விட்டதற்கு நீ வருந்துகிருயா, துளசி? அத்தனே நிர்ப்பந்தத்தோடு நான் உன்னே இங்கே இருத்திக் கொள்ள மாட்டேன். உன் விருப்பத்தை ஒட் டியே எதையும் செய்வேன். நீ விரும்ப வில்லேயானுல், அண்ணியிடம் சென்று மன்னிப்புக் கேட்டுவிட்டு, உன்னே அங்கேயே விட்டு விட்டு வந்துவிடு கிறேன்...''

துளசி துயரத்தோடு அவரைப் பார்த்தாள்.

''ஆனுலும் துளசி, கடைசியாக வெற்றியடைவோம் என்ற நம்பிக்கை

சிந்தால் சோப் விசேஷச் சலுகை!



15 பைசா மிச்சப்படுத்துங்கள்.

உங்கள் மனத்திற்குகந்த சிந்தால் சோப்பை நீங்கள் இப்போது 15 பைசா குறைந்த விலையில் பெற முடியும். நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்: புள்ளிக் கோடு வழியே இக் கூப்பனைக் கத்தரித்து, உங்கள் கடைக்காரரிடம் கொடுங்கள். மறவாமல் அடுத்துவரும் சிந்தால் விளம்பரங்களிலும் இக் கூப்பன் வருவதைக் கவனித்து உபயோகியுங்கள்.

ஜி-11 (ஹெக்ஸாக்ளோரபீன்) சேர்ந்த சிந்தால் சோப் கிருமிநாசினி மட்டுமல்ல; உடம்பிலுள்ள துர்நாற்றத்தையும் அகற்றுகிறது!

இந்த திட்டம் தற்போது தமிழ்நாடு, கேரள மாநிலங்களுக்கு மட்டுமே விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

INTERPUB/CGS/12 TAM

15 பைசா மிச்சம்!



சிந்தால் கூப்பன்

இதை உங்கள் கடைக்காரரிடம் கொடுங்கள்.


திரு/திருமதி குமாரி ....

விலாசம் ....

நான் வழக்கமாக உபயோகிப்பது .... டாய்லெட சோப்.

KMS.





இட நெருக்கடியோ!

சென்னையில் சாலையில் உள்ள மரங்கள் பலவற்றை வெட்டி வீழ்த்தியபின் காக்கைகளுக்கும் விட்டு இட நெருக்கடி ஏற்பட்டுவிட்டது போலும். சென்னையில் சில இடங்களில் டெலிபோன் கம்பங்களை அவை கூடு கட்டப் பயன்படுத்துகின்றன. திருவல்லிக்கேணி பஸ் நிலையம் அருகே கூவம் பாலம் ஓரமாக உள்ள டெலிபோன் கம்பத்திலிருந்த காக்கையின் கூடுதான் இங்கே படத்திலிருப்பது. மன்றோவின் மடி மீதும் காகம் கூடுகட்டத் தயங்கவில்லை என்பதை இன்னொரு படத்தில் பார்க்கலாம்! —கு. க. ர.

யோடு உன்னிடம் உரிமையாக ஒன்றை யாசிக்க விரும்புகிறேன். எனக்காக நீ இதைச் செய்வாயானால் என் உயிர் உள்ளளவும் இதை மறக்க மாட்டேன்.''

அந்த வார்த்தைகளில்தான் எத்தனை அந்நியம்! எத்தனை தூர பாவம்! யாரோ மூன்றாவது மனிதர்போல் ஒருவருக்கொருவர் கடமைப்பட்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம்!

''தயவுசெய்து இப்படி... இப்படியெல்லாம் பேச வேண்டாமே! என்னிடம் எதையும் நீங்கள் யாசிக்கும் அளவு கடவுள் உங்களை வைக்க வேண்டாம். நீங்கள் வாழ்க்கையின் எல்லாச் சுகங்களையும் சௌகரியங்களையும் உணர்ந்தவர். எல்லா வரப்பிரசாதமும் பெற்றவர். இனியும் கீர்த்தியும், பெருமையுமாக வாழ்வீர்கள்......'' துளசி திணறினாள்.

''ஆனால் என் அன்பு மனைவிக்கு மகத்தான துரோகம் செய்துவிட்டதையும் நான் உணர்கிறேன். உன்னை என் அகத்தில் இருத்திக் கொள்ள விரும்புகிறேன். இந்த உறுத்தலில், நான் கழித்த நாட்களையெல்லாம் நல்ல நாட்களாக்க மாட்டாயா, துளசி?''

''எனக்கு... எனக்கு இனி புதிய வாழ்வா? அதை மனமார விரும்பி வரவேற்கும் நிலையில் இருப்பதாகவே எனக்குப் படவில்லையே.''


''பார்த்தாயா? இது வேற்றுமை பாராட்டுவதுதான்! மனமார மன்னிக்கும் குணம் உனக்கு இல்லாமலா போய்விட்டது?''

இதற்குப் பதில் கூறவே துளசியின் மனத்தில் ஏதுமில்லை. நிச்சலனமாகத் தூங்கும் ஓடைபோல் கிடந்தாள் அவள்.

''எனக்காக இந்த ஒன்றையாவது செய்வாயா, துளசி? நீயும் இந்த வீட்டில் எங்களோடு வந்து இரு. உனக்குரிய சுதந்திரத்தைப் பறிக்கவோ, உன் தனிமையில் தலையிடவோ ஒரு போதும் நான் முயல மாட்டேன். உறுதி கூறுகிறேன். ஆனால் நாமிருவரும் ஒப்பி வாழ்வதாக லிஸ்ஸி உணர வேண்டும். இதற்கு உடன்படுவாயா?'' என்று மெல்லிய குரலில் ராகவன் கேட்டபோது துளசி பிரமித்தாள். ''உன்னை இதனால் உலகம் ஒரே ஒரு சொல்தான் கூற முடியும். இத்தனை வருடங்கள் விம்பாக இருந்தாள், புருஷனோடு சேர்ந்து விட்டாள் என்று கூறப் போகிறார்கள். உன்னை மணந்த கணவன் என்ற முறையில் எனக்காக இந்த ஒரு சொல்லை மட்டும் தாங்கிக்கொள்ள மாட்டாயா? சொல், துளசி! சீலியா எப்படிக் கதறி அழுதாள்? அவள் வாழ்வில் உனக்கு மட்டும் அக்கறையில்லையா?''

துளசி முகத்தைக் கைகளில் புதைத்துக்கொண்டு விம்மினாள். ''இவ்வளவு தானா?... உங்களுடன் நான் வாழ்வது போல் நடிக்க வேண்டும்.... இவ்வளவே தானா....?''

ராகவன் ஒன்றும் புரியாமல் அவளைக் கூர்ந்தார். அவள் உள்ளமெல்லாம் புண்! அவர் தந்த வாழ்க்கைப் பரிசு இதுதான். அதெல்லாம் போதாதென்று இப்போது நிர்ப்பந்தமான வேண்டுகோளை வேறு சமர்ப்பித்து அவளைச் சம்மதிக்குமாறு கட்டாயப்படுத்துகிறார்! இது கொடுமையிலும் கொடுமையல்லவா? சுயநலமில்லையா?




''இதைவிட அதிகமாக நான் எதையும் வேண்டவில்லை, துளசி. நீ இந்த வீட்டுக்குள் உன் இஷ்டம் போல், சர்வ சுதந்திரமாக இருக்கலாம். நீ இங்கு சாப்பிட வேண்டும். இங்கே தூங்க வேண்டும். இதையெல்லாம் என் நிழலுக்குக் கீழ் நீ செய்ய வேண்டும் என்று கூறவில்லை. அப்படி நீ பாவனை செய்தால் போதும். அதைத்தான் நான் உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். நீ இதை ஒப்புக் கொண்டதற்கு அடையாளமாக இன்று மதியச் சாப்பாடு 'டின்னராக' இருக்கலாமா? நாம் எல்லோரும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடலாமா?''

துளசி பொம்மையைப் போல் தலையசைத்தாள். அந்த வெறும் தலையசைப்பையே தம் மகத்தான வெற்றிக்கு அறிகுறியாக எண்ணி ராகவன் சீலியாவை அழைத்தார். குரலின் மகிழ்வு குன்றிவிடாதபடி, ''உன் பெரியம்மா இனி நம்முடன்தான் தங்கி இருப்பாள்'' என்று கூறினார். லில்லி கட்டிலை விட்டு இறங்கி ஓடி வந்தாள். துளசியின் அருகே வந்து மிகவும் உருக்கமான குரலில், ''உங்கள் அன்புக்கு மிக்க நன்றி. என் வேண்டுகோளை நிராகரிக்காமல் ஏற்றது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்'' என்றாள்.

இதற்குள் சீலியா ஒரு தட்டில் குளிர் பானக் கோப்பைகளைக் கொணர்ந்தாள். ''இந்த மகிழ்ச்சியான நேரத்துக்காகத் தயாராகும் விருந்தை நன்றாகச் சுவைத்துச் சாப்பிடுவதற்காக அதற்கு ஒரு 'அப்பிடைஸரை'ச் சாப்பிடுங்கள்'' என்றாள்.

துளசி ஒரு மென்னகையோடு அவள் கையிலிருந்த கோப்பையைப் பெற்றுப் பருகினாள். அந்த மகிழ்ச்சி மற்றவர்கள் மனத்திலும் தொற்றுநோயாகப் பரவிக் கிளர்ந்தது. பகிரங்கத் துக்கங்களெல்லாம் போலித் திரை விட்டுக்கொண்டு நாகரிகமாக நடித்தன.

சீலியாவின் உள்ளத்தைக் குடைந்து கொண்டிருந்த நினைவு மறுபடியும் சந்தர்ப்பம் பார்த்துத் தலைதூக்கியது. 'காலையில் வசந்தன் வார்டுக்கு வரவில்லையே, ஏன்? அவருக்கு உடம்பு சரியில்லையா? வீட்டில் நிகழ்ந்த ஆயாசத்திலிருந்து தப்பி மறுபடியும் வசந்தனை நினைக்க முடிந்ததே ஒரு விந்தையல்லவா? அம்மா செய்த சபதத்துக்குப் பெரியம்மா அனுசரணையாக நடந்து கொண்டிருந்தால்...? பெரியம்மாவுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்? எந்த அளவுக்கு? என்று விம்மிதம் அடைந்தாள் அவள். **(தொடரும்)**




பவன் சூர்யன்
மார்க் புகையிலை
காரைக்குடி



ஓநாய்க் கோட்டை
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
21
நெருப்பு வளையத்திலுள் ஆனந்தனுக்கும் ஓநாய்க் கூட்டப் பேராசைக் காரனுக்கும் பெரும் போர் — மூண்டது.....
மூளையைப் போலப் பதுங்கிப் பாய்கிறான் நம்ம ஆள். ஓநாய் முடிக்காக ஏங்கிக் கிடக்கும் அவன் நிச்சயம் வெற்றி பெறுவான்..
சொல்ல முடியாது. அதோ பார் ஆனந்தன் என்ன லாகவமாக நம் ஆளைக் களைப்புறச் செய்கிறான். அவன் வாள் வீச்சை நாம் அறிவோம்...
மரணத்தைக் கண்டு அஞ்சுபவனல்ல நான். ஆனால் நீசனான உன் வாளினால் இறக்க மாட்டேன். என் தோழனின் உயிரைக் காக்கவாவது நான் வென்றே தீருவேன்...
அரசகுமாரனே! ஆனையிழந்தவனே! இதோ பார், என்னிடம் உயிர்ப் பிச்சை கேட்டு மன்றாடப் போகிறாய். ஆனால் நான் மரண அடி தான் தரப் போகிறேன்.
என்று கீழே குனிந்து பதுங்கிப் பதுங்கி - ஒதுங்கியவன்...
ஒரு பிடி மண்ணை அள்ளி ஆனந்தனின் கண்களிலே வீசினான் கையாலாகாத அந்தக் கயவன்.
ஆ.. ஆஹ்.. ஆஹ்.. ஹா!
அதோ, அதோ! நம் வீரனின் வாள் வீச்சைப் பார். ஆனந்தனைத் தோற்கடித்தே அவன் குறி.
சதிகாரனைப் பார்க்க முடியாத நிலையில்... சீச்சீ! அரசகுமாரனின் வாளைத் தட்டி விட்டதோடு அவன்
ஆனந்தா! சோர்ந்து போகாதே. வாளின் விதி என்ன? உன் தகவில் போகவிடாதே...
கண்களைத் திறக்க முடியாத நிலையிலேயே தன் பலமெல்லாம் ஒன்று திரட்டித் தனது முஷ்டியிலே கொண்டு வந்து ஒரு குத்து விட்டான். ஆனந்தனின் அந்தத் தாக்குதலினால் நிலை குலைந்து போன ஓநாய்த் தலைவன் நெருப்பு வளையத்திலே போய் — விழுந்தான்......


ஓநாய்ச் சோதரனே!
என்ன..?
தொடரும்..


If paper sarees
are made in India
it is just possible
West Coast paper
might
wrap you up
nicely
WEST COAST PAPER
FOR WRITING
PRINTING
PACKAGING



அதிதி (வங்காளம்)

கருத்துச் செறிந்த சிறுகதை டாகுர் எழுதிய 'அதிதி' என்னும் அற்புதக் கதை.

தாராபத முகர்ஜி என்னும் இளைஞன் வீட்டில் தரி கொள்ளாதவன். இயற்கையின் எழிலிலும், இசையின் இன்பத்திலும் மனத்தைப் பறி கொடுப்பவன். அதோடு அன்பே உருவானவன். அந்த அன்பு பிணைக்கும் நேரத்திலே அவன் தன்னை விடுவித்துக் கொள்ளும் அழகு ஓர் அமர காவியம்.

அந்தக் காவியத்தைத் திரையோவியமாக் கித் தருகிறார் ஸ்ரீ தபன் சின்ஹா. அதுவும் எப்படி? கதா பாத்திரங்களை உயிருள்ள பாத்திரங்களாக உலாவவிட்டு.

எதிலும் எழிலைக் கண்டு களிக்கும் தாராபதனின் பேசும் விழிகள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. ஈவு இரக்கம் படைத்த அவனது குணங்கள் மனத்தை நிறைக்கின்றன. தாராபதனின் பாத்திரமேற்றிருக்கும் பார்த்தா முகர்ஜி என்னும் இளைஞன் தன் நடிப்பால் உயரவில்லை. தாராபதனாக வாழ்ந்து காட்டியே உயர்கிறான்.

தன் அன்பில் பங்கு போட்டுக்கொள்ள வந்துவிட்டவனிடம் சிறுமி சாருவுக்குத்தான் எத்தனை அருவை! ஜமீன்தாரின் மகள் என்னும் கடுமையைக் காட்டும்பொழுது அவள் குழந்தைகளின் இயல்புகளையும் அழகாகப் பிரதிபலிக்கிறாள். பாவை பானர்ஜி என்னும் சிறுமியின் நடிப்பில் உயிர்மை துள்ளுவதைக் காண்கிறோம்.

அவளுக்குத் தோழியாக வரும் சோனுமணி அறியாப் பருவத்திலேயே கைம்மை எய்தியவள் — கள்ளமில்லா உள்ளம் படைத்த இந்தப் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் சிறுமி மிதா முகர்ஜி பார்ப்பவர்களின் இதயத்தில் நிலையானதோர் இடம் பெற்றுவிடுகிறாள்!

சுருங்கச் சொன்னால் எந்த நடிகருமே தம்மைச் சோடையெனக் காட்டிக் கொள்ள வில்லை. கிராமத்துச் சூழ்நிலை, இயற்கைக் காட்சிகள் அனைத்துமே போட்டியிட்டு நடிக்கின்றன. மிக மிக உயர்ந்த வர்ணப் படங்களை யெல்லாம் மண் கவ்வ வைக்கிறது திலீப் ரஞ்சன் முகர்ஜியின் காமிராத் திறமை.

கதைக்கேற்ற இசை செவியை நிறைக்கிறது பல இடங்களிலும். இப்பொறுப்பையும் தபன்சின்ஹாவே ஏற்றிருக்கிறார்.

பாரத மண்ணின் பெருமைக்குப் பெருமை சேர்க்கும் இந்தப் படத்தைப் பார்க்கும் வாய்ப்புப் பெறுபவர்கள், நமது கலையுலகம் வளர்ந்து உலகத்துக்கே வழிகாட்டக் கூடிய ஆற்றல் பெற்றிருக்கிறது என்பதை உணர்வார்கள். அத்தகைய வித்து இடுபவர் வரிசையிலே ஸ்ரீ தபன்சின்ஹாவுக்கு ஓர் அழியாத இடம் உண்டு என்பதையும் காண்பார்கள்.



சிலையின் உயிர்

ரா. கணபதி



“நமசிவாய ஸ்தபதிதானே? உட்காரப்பா” என்றார் பரம மங்கள ஸ்வாமிகள்.

ஸ்தபதி உட்காரவில்லை. நின்றுகொண்டேதான் இருந்தார். “பெரியவர்களிடமிருந்து உத்தரவா யிருக்குன்னு தபால் வந்தது. அதுதான் உடனே புறப்பட்டு வந்தேன்” என்று ஈனஸ்வரத்தில் மரியாதையுடன் கூறினார்.

பயப்படும்படியாக ஸ்வாமிகளின் தோற்றத்திலோ, நடக்கையிலோ ஏதுமில்லை. இன்னும் சொல்லப் போனால் அவர் அபயத்தின் உருவகம். ஆயினும் ஏனோ பக்குவம் பெற்றவர்களுக்கு அங்கு ஒரு பயம் இருக்கவே செய்யும். நமசிவாய ஸ்தபதி பக்குவம் பெற்றவர்.

“ஆமாம், நான்தான் உன்னை வரச் சொன்னேன்” என்றார் ஸ்வாமிகள். தொடர்ந்து, “திருவாதிரை களைந்த நாள் என்பார்கள். ஆனால் அதுவே நான் உத்தேசித்த காரியத்துக்கு ரொம்ப நல்ல நாள். நீ அகஸ்மாத்தாக இன்று வந்தாலும், உன் மனசு விசேஷம் இன்று திருவாதிரையாயிருக்கு” என்றார்.

ஸ்தபதிக்கு ரோமாஞ்சம் உண்டாயிற்று. வாய் வார்த்தையாலேயே ஸ்வாமிகள் அவரைத் தட்டிக் கொடுத்தது போல் இருந்தது. அந்த ஸ்பரிசம் பட்டால் மயிர்கூச்செடுக்காமல் இருக்குமா ?

“என் மனசாவது, விசேஷமாவது? எல்லாம் அங்கே பெரியவங்க மனசு விசேஷம்தான்” என்றார் ஸ்தபதி தட்டுத் தடுமாறி. அந்தச் சந்நிதானத்தில் இது போன்ற வாசகங்களைச் சொல்வதே ஏதோ வேண்டாத முகஸ்துதி போல்தான் தோன்றிற்று. சத்தியமான வாசகம்கூட அங்கு சில சமயங்களில் அநாவசியமாகிவிடும். மௌனம்தான் அந்தச் சூழலின் இயல்பான மொழி.

மழை பெய்து ஓய்ந்தபின் தடாகத்தில் நீர் முட்டிக் கொண்டு நிற்கும். சலசல வென்று கால்வாய்களின் நீர் அதில் வந்து கலந்தபடி இருக்கும். கரையிலுள்ள மரங்களிலிருந்து “பொள்” “பொள்” ளென்று ஜலபிந்துக்கள் விழுந்து கொண்டிருக்கும். காற்றடித்துக் கிளைகள் ஆடும் போது பட்சி ஜாலங்கள் கூச்சல் போடும். ஆனால் இவ்வளவும் கூட ஒலியாக இராமல், நிரம்பிய தடாகத்தின் மௌனத்துக்குச் சுருதியாகவே இருக்கும். ஸ்வாமிகள் எவ்வளவுதான் பேசினாலும், அவரது பேச்சு இப்படித்தான் அந்தரங்கத் தடாகத்தின் மௌனத்துக்குச் சுருதி சேர்ப்பதாகவே இருக்கும்.

இப்போது சுருதி இழைந்தது: “என்ன சொன்னே? என் மனசு விசேஷம் என்றா? அப்படின்னா நான் ஞானியே இல்லை” என்று சிரித்தார் ஸ்வாமிகள்.

“அபசாரமுங்க. அப்படியெல்லாம் அடியேன் நினைக்கலீங்க” என்று பதற்றத்துடன் கூறினார் ஸ்தபதிகள்.

“நான் சொன்னது உனக்குப் புரியலையா? ஞானிக்கு மனசு என்பதே கிடையாது என்பார்களே, அது தெரியுமோல்லியோ ?” என்று கேட்டார் பரமமங்களர்.

ஸ்தபதி சிரித்து விட்டார்.

“ஞானிக்கு உடம்பு கூடத் தான் கிடையாது. ஆனால் அது அந்த ஞானியின் உணர்வில். மத்தவங்க கண்களில் ஞானிக்கும் உடம்பு இருக்கிறதாத் தெரியுது. அப்படியே எங்க பார்வைக்குப் பெரியவங்களுடைய மனசுன்னு ஏதோ ஒண்ணு தெரியுதே, அதைத்தான் சொன்னேன்” என்றார்.



''அதெல்லாம் எனக்குத் தெரியாது. என் மனசிலே ஒண்ணு தோணித்து. அதுக்காகத் தான் உன்னைக் கூப்பிட்டேன். சிவராத்திரி அன்னிக்கு நம்ப ஆசிரமத்திலே சிவாலயத் திருப்பணி முடிஞ்சு, கும்பாபிஷேகம் நடக்கப் போறது. கர்ப்பக்கிருகத்துக்கு எதிரே நீ பண்ணின சிற்பம்தான் இருக்க ணும். கும்பாபிஷேகத்தன்னிக்கே சிவராத் திரியா இருக்கிறதனாலே, ஈசுவரன் மார்க்கண் டேயருக்கு அனுக்கிரகம் செய்த அவசரத் தைச் செதுக்கிவிடு'' என்றார் ஸ்வாமிகள்.

'ஆக்ஞைப்படியே செய்கிறேன்' என்று ஸ்தபதி கூறவில்லை; ஸ்வாமிகளின் காலில் விழுந்து நமஸ்கரிக்கவில்லை. பேசாமலே நின்றார்.

ஸ்வாமிகளும் சிறிது நாழிகை பேசவில்லை.

மறுபடியும் மௌனத்துக்குச் சுருதி சேர்க்கிற வகையில் சொன்னார்: "உன் மனசிலே என்னென்னவோ சந்தேகமெல்லாம் கிளம்பறது. பரவாயில்லே. சிலை பண்ண ஆரம்பிச்சுடு. பண்ணப் பண்ணத்தானே சந்தேகத்தையெல்லாரும் செதுக்கிச் சேதாரத்தோடு தள்ளிடுவே" என்றார் சிரிப்பும் பேச்சொலியும் கலந்த குரலில்.

ஸ்தபதி தமக்குள் சிலிர்த்துக் கொண்டார். இது ரோமாஞ்சத்தைவிட உயர்ந்த சிலிர்ப்பு.

"இந்தா, தீர்த்தம் வாங்கிக் கொள்" என்று கூறிவிட்டு, கிண்ணத்திலிருந்து உத்தரணியில் அபிஷேக தீர்த்தம் எடுத்து ஸ்தபதியின் குழித்த கையில் வார்க்கப் போன ஸ்வாமிகள், "'அகால மிருத்யுஹரணம்'னு சொல்லவா, வேண்டாமா?" என்று கேட்டார்.

அவ்வளவுதான், ஸ்தபதி விசும்பி விசும்பி அழ ஆரம்பித்து விட்டார்! 'ஈசுவரனின் செயலில் சந்தேகப்படுவதற்குத் தமக்கு அருகதை இல்லைதான். இருந்தாலும், பாழாய்ப் போன சந்தேகம் எழுகிறதே! சந்தேகத்தைக் கண்டுபிடிக்கும் மகான் அதைத் தீர்த்து வைக்கவும் கூடாதா?' என்ற எண்ணம் ஸ்தபதியின் கண்களைக் கலங்கச் செய்தது.

"ஏன் அழுறே? சந்தேகப்பட்டது தப்புன்னுதானே? சிற்பத்தைப் பண்ணப் பண்ணத்தான் சந்தேகம் ஓடிப் போயிடும்னேனே! அப்படிச் சந்தேகம் போகாட்டா, நீதான் ஈசுவரன் பண்ணின தப்பைத் திருத்திவிடேன்..... சரி, அழுகை ஜாஸ்தியாறது. அதுவே அபிஷேக தீர்த்தத்துக்கு மேலே" என்று உத்தரணியை மீண்டும் கிண்ணத்திலேயே போட்டுவிட்டு எழுந்தார் ஸ்வாமிகள்.

அவர், 'அகாலமிருத்யுஹரணம்' சொல்லித் தீர்த்தம் தராததன் உட்பொருளை அப்போது யாரே உணர்ந்திருக்க முடியும்? ஸ்தபதி வெறுமே ஸ்தம்பித்திருந்தார்!

எதிரே உள்ள பாறாங்கல்லைவிடப் பெரிய பளு நமசிவாய ஸ்தபதியின் உள்ளத்தை அழுத்தியது. அந்தக் கல்லில் மார்க்கண்டேய அநுக்கிரகமூர்த்தியைச் செதுக்க உளி மறுத்தது. மனம் விரல்களில் ஓடாத போது உளி எப்படி வேலை செய்யும்? மனப் பற்றில்லாமல் வேலை செய்தும் சிலையை எழுப்பிவிட மற்ற சிற்பிகளால் முடியலாம். ஆயின், அப்படிச் செய்த சிலையில் எப்படி உயிர் இருக்க முடியும்? இதுவரை நமசிவாயர் உயிர் இல்லாத சிற்பத்தைச் செய்ததில்லை.

ஸ்தபதி சிரித்துக் கொண்டார். அழமாட்டாத நிலையில் வேறென்ன செய்ய இயலும்? 'மார்க்கண்டருக்குப் பரமன் உயிர் தந்ததுதான் சிலையின் பொருள். ஆனால் அந்தச் சிலைக்கு உயிர் தரத் தம் மனம் மறுக்கிறது. ஏன்?'

ஏனா? அவரது மனம் மார்க்கண்டேயருக்கு இறைவன் உயிர் தந்ததைப் பெரிதாக நினைக்கவில்லை. காலனின் உயிரை இறைவன் கவர்ந்தானே, அதுவே அவர் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது.

'ஈசுவரன் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? யமதருமன் தன் கருமத்தை, தருமத்தைச் செய்தான். மார்க்கண்டேயருக்குப் பிராயம் பதினாறுதான் என்பது விதி. 'தீர்க்காயுள்பெற்ற அசமஞ்ச புத்திரர்கள் பலரை விட, அல்பாயுள் வாய்ந்த ஒரு புத்திரனையே விரும்புகிறேன்' என்று மிருகண்டு முனிவர் முன்கூட்டி நன்கு தெரிந்துதானே, மார்க்கண்டேயரைப் பிள்ளை வரமாகப் பெற்றார்? அப்புறம் மார்க்கண்டரின் ஆயுள் முடிந்த போது தந்தையும் தனயனும் விதிக்கு மாறாக நடக்க வேண்டும் என்று ஏன் ஆசைப்பட்டனர்? இந்த ஆசையை ஆண்டவனும் ஒப்புக் கொண்டு மார்க்கண்டரைச் சிரஞ்சீவியாக்கி, காலனைக் காலால் உதைத்து உயிரிழக்கச் செய்தாரே, அது ஏன்? கரும பயன் என்று சொன்னாலும் சரி, விதி என்று சொன்னாலும் சரி — அதுவும் இறைவனின் சட்டம்தான். அந்தச் சட்டத்தை இறைவனே மீறலாமா? பதினாறு வயசுப்பிள்ளை சாகாமல் பிழைத்தான் என்று கதை கேட்டால் மனிதப் பண்பு வாய்ந்த எந்த உள்ளத்துக்கும் அது இதமாகத்தான் இருக்கிறது. ஆனால் இதமானதெல்லாம் சரியானது என்று சொல்லிவிட முடியுமா? விதியையும் மீறாமலே இதமானதைத்தான் ஆண்டவன் செய்வான்; விதியை மீறிச் செய்ய மாட்டான் என்பதால்தான் பொதுவாகவே அவனை 'அகால ம்ருத்யு ஹரண'னாகச் சொல்லித் தீர்த்தம் தருவார்கள். கருமத்தின்படி, விதியின்படி வாய்க்கும் 'கால ம்ருத்யு'வை அவன் விலக்குவதாகச் சொல்வதில்லை. மார்க்கண்டேயர் விஷயத்தில் ஏன் விதிவிலக்குத் தந்தான்? ஏன் கால ம்ருத்யுவுக்கே எதிராகச் சென்றான்?

'இதை விட்டு விடலாம். பாலன் ஒருவனை அவன் பாலனம் செய்திருக்கட்டும். ஏதோ கருணை — காரண காரியம் பார்க்காத கருணை என்று இச்செயலைப் போற்றலாம். கடமையைச் செய்த காலனை அவர் ஏன் சம்ஹாரம் செய்ய வேண்டும்?' — ஸ்தபதியின் சிந்தனையோட்டத்தை ஸ்வாமிகளின் குரல் க்ஷணகாலத்துக்கு நிறுத்தி வைத்தது. "நீதான் ஈசுவரன் பண்ணின தப்பைத் திருத்திவிடேன்!"

'ஆனப்பட்ட பரமேசுவரன் செய்த தப்பைப் போயும் போயும் நான் திருத்துவதாவது? ஸ்வாமிகளே, என்னை ஏன் சோதிக்கிறீர்கள்! என்னைத்தான் நீங்கள் திருத்த வேண்டும்' என்று பிரார்த்தித்துக் கொண்டார் ஸ்தபதி.

ஸ்வாமிகளோ அவர் மனக் கண் முன் தோன்றி, மீண்டும் மீண்டும் 'சிற்பத்தைச் செதுக்கு, சிற்பத்தைச் செதுக்கு' என்றே உத்தரவிட்டபடி இருந்தார்.

ஸ்வாமிகள் அவரிடம் ஆக்ஞையிட்டு இப்போது இரண்டு வாரங்கள் ஓடிவிட்டன. சிவராத்திரிக்கு இன்னும் ஒரு மாதம் கூட இல்லை. அதற்குள் சிலையை முடித்தாக வேண்டுமே!

உளியை வணங்கிக் கையில் எடுத்துக் கொண்டு அதைப் பார்த்துப் பேசினார்

ஸ்தபதி. 'என் மனம் இயக்கும்படி, என் கை இயக்கும்படி செயல்படும் வெறும் கருவியாகவே இத்தனை நாட்களும் நீ இருந்தாய். இப்போது நீதான் என் மனத்தையும் கையையும் சரியாக இயங்கச் செய்ய வேண்டும். பாடகர் தம்புராவை மீட்டும்போது, அது எப்படி அவர் சாரீரத்தையே திருத்த உதவுகிறதோ, அப்படியே உன்னை நான் கையாளும்போது நீ என்னைத் திருத்து. முடியுமானால், அதன் மூலம் நானும் ஈசுவரன் செய்த தப்பைத் திருத்துகிறேன்' என்று உளியிடம் பிரார்த்தித்துக் கொண்டார் நமசிவாய ஸ்தபதி.

அடுத்த கணம் கருங்கல்லில் கருத்தை வைத்துப் பார்த்தார். அதில் சிவபெருமானின் ஜடா மகுடம், முக மண்டலம், திருமேனி, காலனை உதைக்கும் திருக் கால், விழுந்து கிடக்கும் காலன், பக்தி புரியும் மார்க்கண்டேயன்—இப்படித் தமக்குப் பணிக்கப்பட்ட பொருளின் ஒவ்வோர் அம்சத்தையும், அங்கத்தையும் உருவகப்படுத்திப் பார்த்தார்.

'என்ன ஆச்சரியம்! அப்படி உருவாக்கி அங்கம் அங்கமாகப் பார்க்கும்போதே அவரது சந்தேகங்கள் சிறிது சிறிதாக விலகத் தொடங்கின. மகான் வாக்கு பலிக்காது போகுமா?'

பரமனின் ஜடா மண்டலத்தை நினைக்கும் போதே ஸ்தபதியின் மனம் சிறிது தெளியத் தொடங்கியது. காலகால அவசரத்தில் அந்த ஜடா மண்டலத்தை ஏதோ விரித்த செஞ்சடையாகப் பாவிக்க முடியவில்லை. ஆடுகின்ற கோலத்தில் ஜடை விரித்திருக்கும். ஆருச் சினத்தில் செயல்படும்போது தலைவிரி கோலமாகத்தான் இருக்கும். ஆனால் காலனை மாய்க்கும்போது இறைவனின் திருமுடியை இப்படி விரித்து உருவாக்க முடியவில்லை. அம்முடி கூம்பியிருப்பதாகவே பாவிக்க முடிந்தது. ஏன் அப்படி என்று அவருக்கே தெரியவில்லை. காரணம் எதுவாயினும், குவிந்து கூம்பிக் கிடக்கும் அம்முடி மனத்திலும் ஒரு குவிப்பை, மௌனத்தை உண்டாக்கிற்று.

அப்புறம் நெற்றி. தெய்வத் திருமேனிகளின் நெற்றியைச் செதுக்கும்போது உண்டாகும் நிம்மதி ஸ்தபதிக்கு வேறெப்போதுமே உண்டானதில்லை. மேடு பள்ளமின்றிச் சமமான பரந்த நுதலைச் செதுக்கும்போது மனமும் சமப்படும். அந்த நெற்றியின் நடுவே ஒரு நயனம். அந்த நயனமும் மூடித்தான் இருக்க வேண்டும். ஸ்தபதியின் சந்தேகம் மேலும் பிசுபிசுக்கத் தொடங்கியது. ஆம், முக்கண்ணன் காலனை மாய்க்கத் தன் நெற்றிக் கண்ணைத் திறக்கவில்லை. காமனை வதைக்கத்தான் அந்தக் கண் வேண்டியிருந்தது. காலனுக்கு அவனது கால்தான் தேவைப்பட்டதேயன்றி, நெற்றிக் கண் தேவைப்படவில்லை. அது குவிந்திருந்து



"உங்க மாமா கல்யாணப் பத்திரிகை அனுப்பிச்சிருக்கார். மருமகன் கொஞ்சம் முன்னாடியே கல்யாணத்தை வெச்சிண்டிருக்கப்படாதோ? வாழ்த்துத் தந்திக் கட்டணம் மிச்சமாயிருந்திருக்குமே! ... கல்யாணத்தை வெச்சிண்டிருக்கார்!"

மூடித்த குழல் தந்த சாந்தியை அதிகமாக்கவே செய்தது.

உடனே ஸ்தபதியின் அகக் கண் காலனைக் கடிவதற்காகப் பரமன் பயன்படுத்திய அவனது காலின் போக்கில் சென்றது. 'அவனது காலா? இல்லை இல்லை. இடது காலால் அன்றோ அவன் யமதருமனை உதைத்தான்? அது அவனது கால் இல்லை; அவனது வாம பாகத்தில் உறையும் அவனது கால். தேவியின் திருப்பாதம் தான் யமதருமனின் மார்பில் பதிந்தது!'

அவ்வளவுதான்! ஸ்தபதியின் சந்தேகம் மேலும் வெலவெலத்தது:

'உன் பாதத்தை எங்கள் உரத்தில் சூட்டு' என்று கோபியர் கண்ணனிடம் பிரார்த்தித்துக் கொண்டதை எண்ணி உருகினார்.

'உன் காலை என் மார்பில் வைத்துப் பிடித்துக்கொண்டு, அதன் வழியே பிரம்மாதி தேவரும் அறியா ஆனந்தத்தை என்றைக்கு நான் அனுபவிப்பேன்?' என்று ஆதிசங்கரர் மல்லிகார்ஜுன மகாலிங்கத்திடம் அரற்றியதை நினைந்து அகம் கரைந்தார் ஸ்தபதி.

வைத்திடும் காலைப் பிடித்துக் கண்ணில் மார்பில்
வைத்தணைத்துக் கொண்டிகையால் வளைத்துக் கட்டி
சித்தமிசை புக இருத்திப் பிடித்துக் கொண்டு
இயக்கமற இன்பசுகஞ் சேர்வதென்றோ?

என்று தாயுமான சுவாமிகள் கண்ணும் கண்ணீருமாக வேண்டியதை எண்ணி நெகிழ்ந்தார் ஸ்தபதி.

'சிற்பத்தைப் பண்ணப் பண்ணச் சந்தேகம் தீரும்' என்றார் மகான். அவரது அநுக்கிரக விசேஷத்தில் கல்லில் மானசிகமாகச் சிலையைப் பண்ணிப் பார்க்கும்போதே ஐயங்கள் அகலத் தொடங்கி விட்டன!

தேவியின் பாதமாகிய இடது காலைப் பற்றிக்கொள்ளும் உணர்வோடு உளியைப் பற்றிக் கல் மீது வைத்தார் நமசிவாய ஸ்தபதி.

தேவியுடைய பாதச் சிலம்பின் மாணிக்கப் பரல்கள் போல், உளி 'இலுங்' இலுங்' என்று நடமிடத் தொடங்கியது.

எங்கோ மழை பெய்யும்போது குளிர்ந்த காற்று வீசுமல்லவா? இந்தக் குளிர்ந்த காற்றிலேயே நமசிவாய ஸ்தபதியின் சந்தேகம் நலியத் தொடங்கியது. வேலை மேலே நடக்க, நடக்க, கார்மேகம் அவரிடமே வந்து மழையைக் கொட்டியது போல் சந்தேகங்களைக் கரைத்தது. சந்தேகத்தின் தீர்வு மனத்தின் மொழியில் நடந்த ஓர் அற்புதமாகையால் அதை வார்த்தைகளில் விளக்க முடியாது. ஸ்தபதியாலேயே அவ்விதம் வாய் மொழியில் விளக்கியிருக்க முடியாது. ஆனாலும் ஏதோ ஒரு மழை பெய்வதையும் அதில் தமது ஐயங்கள் உருகுவதையும் அவர் உணர்ந்தார். அது மட்டும் அவருக்குப் போதவில்லை. ஐயத்தோடு தாமுமே உருகி

விடவேண்டும் என்று அவர் தவித்தார். சிற்பத்தைச் செதுக்கும்போது, சந்தேகத்தை அதனுடன் செதுக்கி எறிவது மட்டுமின்றி, தம்மையே செதுக்கி எறிந்து கொள்ளத் துடித்தார். தம் மீது பெய்த அந்த அதிசய மழையின் பேரிடிகளும் தம் மீதே விழவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதன் கொடி மின்னல்கள் தமக்குள்ளேயே பாய்ந்து தம்மைப் பிளக்க வேண்டும் என்று அவாவினார். ஆம், அந்தச் சிற்பத்தில் பரிபூரண ஜீவன் உண்டாக வேண்டுமாயின் தம் ஜீவனையே அதற்குள் புகுத்தி உறைச் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் அவரை வெறியாகப் பற்றிக் கொண்டது. 'கால சம்ஹாரம்' என்று சொல்லப்படும் அந்தக் காட்சியின் உண்மையான உட்பொருளை அவர் இதயம் கொள்ளாமல் வாங்கி வழிந்து கொண்டிருந்தார் அல்லவா? அந்த இதய உணர்வுகளை வெறுமே விரல் மூலம் மட்டும் சிலைக்குள் பொதிந்துவிட முடியாது; தமது இதயமே கழன்று போய் அந்தச் சிலைக்குள் இதய ஸ்தானமாக அமைந்து, அதற்குள் ஜீவன் என்கிற ரத்த ஓட்டத்தை ஊட்ட வேண்டும் என்று ஆவேசம் கொண்டார் ஸ்தபதி. உளியின் ஒவ்வோர் அடியிலும் அசைவிலும் தமது அகத்தையே இழைத்துப் பாய்ச்சினார். இரவு பகல் நாட் கணக்கில் இந்த வெறியிலேயே மூழ்கிவிட்டார். எந்தச் சிற்ப வேலை தொடங்கவே முதலில் தயங்கினாரோ, அதே சிற்ப வேலையை நிறுத்த மாட்டாமல், மேலும் மேலும் தம் உயிரைக் கலந்து அதற்குப் பூரணத்துவ மெருகு இட்டுக் கொண்டே இருந்தார் ஸ்தபதி. அன்ன ஆகாரமின்றி, நித்திரையின்றி இதே தவமாக அமர்ந்து விட்டார். சிற்பத்துக்குள் தம்மைப் பூரணமாக இழந்து கொள்ளும் வரையில் எழுந்திருப்பதில்லை என்று அவர் பிரதிக்ஞை செய்தாற் போலிருந்தது.



"ஒரு வெள்ளி டம்ளர் செய்யணும். இந்தக் கால் மெட்டியை அழிச்சு! மலைக்காதீங்கோ! கல்யாணப் பரிசுக்குத்தான்!

உடல் நலிந்தது. ஆனால் உள்ளம் பொலிந்தது. உளியைப் பிடிக்க மாட்டாமல் பிடித்து நகாசு செய்து கொண்டிருந்தார் ஸ்தபதி. உளியின் அடி வேகம் குறைந்தது. இங்கே இதயத்தின் வேகமும் குறைந்தது. அப்போது புதிதாக ஒரு பயம் பிறந்தது.

'அடாடா, உயிரைக் கொடுத்து இந்தச் சிலைக்கு உயிர் தருவது பாக்கியம்தான். ஆனால் சிலை உயிர் பெறு முன்பே, இந்தப் பாழும் உயிர் போய்விடப்போகிறதே! மார்க்கண்டன் சாகா வரம் பெற்றதன் முழு தாத்பரியத்தையும் நாம் சிலையில் கொண்டு வரு முன் தம்மைச் சாவு தீண்டிவிடப் போகிறதே. அது கூடாது. மகாதேவ சம்போ! அப்படிச் செய்து விடாதே. அடி நாளில் எனக்கு இருந்த ஐயப்பாடு என்கிற அபசாரத்துக்காகத் தண்டித்துவிடாதே. சிலையை முடிக்கும் வரை உயிர் தா. ஆனால் முடித்த பின் ஒரு விநாடியும் உயிருடன் இருக்கச் செய்யாதே" என்று புலம்பினார் ஸ்தபதி.

ஆம், அது விசித்திரப் புலம்பல்தான். சிலையை முடிக்கும் வரையில் தமது உயிர் போகக் கூடாது என்று அவர் எவ்வளவு தவித்தாரோ, அதேபோல் சிலை முடிந்ததுடன் தமது ஆயுள் முடிந்து விட வேண்டும் என்றும் தவித்தார்.

வெள்ளரிக் கொடி தரையில் படரும். வெள்ளரி கனிந்த பின் கொடி அதைத் தன்னுடன் வைத்துக் கொள்ளாமல் இற்றுப் போகச் செய்யும்; இற்ற கனியை விட்டு விலகிய கொடி பூமியில் மேலும் படரும். இற்ற கனி அப்படியே கிடந்தால் அழுக வேண்டியதுதான். ஆனால் கனியை விட்ட கொடி மேலும் புது வெள்ளரிகளைக் காய்த்துக் கொண்டிருக்கும். ஆனால் கலைக் கனியின் விஷயம் இப்படியல்ல. அது அழுகவே அழுகாது. மாறாக, பூரணமான கலைக் கனியைத் தந்த கொடியே அதன் பின் மடிந்து போக விரும்பும். நம சிவாய ஸ்தபதி அப்படித்தான் விரும்பினார்.

ஆனால் அவர் விரும்பியதற்கு முன்னதாகவே முடிவு வந்துவிடும் போலிருந்தது. முழுமையான கனியை அவர் படைக்கு முன்பே உடலியக்கம் மிகவும் நலிந்தது. மனத்தின் சமநிலையும் நெகிழ்ந்தது. கையும் காலும் ஓய்ந்தன. கண் பார்வை மங்கிற்று. பிடிவாதத்துடன் அவர் உளியை இயக்கிக்கொண்டிருந்தார். உடல் அற்று விழும்வரை, உணர்வு இற்று விழும் வரை உழைத்து விடுவது என்ற ஆவேசத்தில் இருந்தார்.

நலிவு அதிகரித்தது. கண்கள் பஞ்சடைந்தன. காதில் விடாமல் அலை ஓசை கேட்டது. அடிவயிற்றிலிருந்து அலைகள் புரண்டு புரண்டு வந்து நெஞ்சில் முட்டி நின்றன. அப்படியும் உளியைக் கீழே போடவில்லை ஸ்தபதி. அவரது உயிரில் ஒட்டிக் கொண்டிருக்கும் அம்சத்துக்கும், சிலையில் எஞ்சியிருக்கும் அம்சத்துக்கும் போட்டா போட்டி நடந்தது.

அச்சு. இங்கும் அங்குமாக ஒரு பத்துத் தட்டு தட்டி விட்டால் சிலை பூர்த்தியாகிவிடும்.

க்ளிங், க்ளிங், க்ளிங் மெதுவாகச் செயல்பட்டது உளி.

இதயமும் அதே கதியில் மெதுவாக அடித்துக் கொண்டது. பட், பட், பட் ...

உளியை இன்னும் ஒரு திருப்பு — ஒரே ஒரு திருப்பு — திருப்பி விட்டால் போதும்.. அதோடு இதயத் துடிப்பும் நின்றுவிட வேண்டியதுதான்.

ஓர் இதயத் துடிப்புக்கான நுண்ணிய இடைவெளியும், உணர்வில் ஒரு யுகமுமாக இருக்கும் நிலை அது. அந்நிலையில் சிலையைப் பார்த்து, அப்படியே அவன் அழகவ்வளவையும் பருகிவிட்டார் ஸ்தபதி. மங்கிய அவரது கண்களுக்கு அவ்வளவு பிரகாசமான பார்வையும், ஓய்ந்திருந்த அவரது மனத்துக்கு அவ்வளவு ஆனந்தானுபவமும் அந்த ஒரு

காலைப் புத்துணர்ச்சியை மாலை வரை நீடிக்கச் செய்யுங்கள்!

காலையில் குளித்தபின் பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்கை உடலில் தூவிக் கொண்டால் புத்துணர்ச்சி மணிக்கணக்கில் நீடித்திருக்கும். வியர்வையை விரைவில் உறிஞ்சும் தன்மையுடைய பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க் கடுங்கோடையில் கூட உங்களை இதமான உணர்ச்சியுடனும் உல்லாசத்துடனும் இருக்கச்செய்யும். உங்கள் உடலைத்தழுவி நிற்கும் ட்ரீம்ஃப்ளவர் நறுமணம் உங்களைச் சூழ்ந்துள்ளவர்களை மகிழ வைக்கும். எல்லா காலநிலைகளுக்கும் ஏற்றதாகையால் வருடம் பூராவும் தினமும் உபயோகிக்கச் சிறந்தது பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் டால்க்!



பாண்ட்ஸ்

ட்ரீம்ஃப்ளவர் டால்க்—
மென்மை மிக்க மகோன்னத டால்க்!

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேட்டட
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

P.4786

கதவு!

:: வாழ்க்கைச் சித்திரம்-7



இதயக் கதவினைத் தட்டுங்கள்:- அங்கே
எழுச்சிக் குரலொன்று துள்ளிடும்!
உதயக் கதவினைத் தட்டுங்கள்:- அங்கே
உலகப் புத்துணர்(வு) அள்ளிடும்!

அறிவின் கதவினைத் தட்டுங்கள்:- அங்கே
ஆன்ற மெய்ஞ் ஞானங்கள் விம்மிடும்!
இறைவன் கதவினைத் தட்டுங்கள்:-அங்கே
இன்பமெல் லாம்வரும், நம்மிடம்!

— தமிழழகன்



விநாடியின் சதாம்சத்தில் எப்படித்தான் கிட்டினவோ?

அந்த அதி நுண்ணியப் பொழுதுப் பொடிக்குள் அவர் தாம் சமைத்த சிற்பத்தை மட்டும் பார்க்கவில்லை. இறைவன் மார்க்கண்டனுக்கு அருள்புரிந்த தலமாகிய திருக்கடவூரில் நூறு நூறு ஆண்டுகளாக வழிபடப் பெறும் கால சம்ஹாரத் திருமேனியையும் அவர் தரிசித்தார். கால சம்ஹாரமல்ல அது: கால சம்ரட்சணம்தான்! அந்த முகத்தில் வழிந்த சாந்தத்தை இங்கு தமது சிற்பத்திலும் கண்டவுடன் ஸ்தபதியின் அகம் நிறைந்தது. தாம் பட்ட ஐயத்துக்கெல்லாம் விடையை முன்பே அந்தத் திருக்கடவூர்ச் சிற்பி அளித்துவிட்டுத்தான் போயிருக்கிறான். வழுவூர் கஜசம்ஹார மூர்த்தியின் முகத்திலும், தஞ்சைபுரியில் சித்திரமாக இலங்கும் திரிபுர சம்ஹார மூர்த்தியின் முகத்திலும் கொந்தளிக்கும் ரௌத்திரத்தைக் காட்டினர் நம் கலைஞர்கள். ஆனால் அந்த ருத்திரனையே சாந்த மூர்த்தியாக அல்லவா காட்டிவிட்டான் திருக்கடவூர் சிற்பி? மற்ற சம்ஹாரத் திரு உருவங்களில் போல், இத் திருமூர்த்தியின் புருவங்கள் நெரியவில்லை. விழிகள் உருண்டு திரண்டு நெருப்பை உமிழவில்லை; இதழ்க்கடைகளில் விறைப்பு இல்லை; உடலில் பிகு இல்லை. நேரில் கண்டபோதெல்லாம் இதைப் புரிந்து கொள்ளாத தமக்கு இப்போது மானசிகக் காட்சியில் இந்த சூட்சுமம் புரிந்ததே! ஆஹா, அதில்தான் எத்தனை திருப்தி! என் கற் சிற்பத்தின் கம்பீர ஜடா முடியும், சாந்த முக மண்டலமும், குழைந்த உடலும், புராதனச் செப்புத் திருமேனி செப்பிய சத்தியத்தைத்தான் மீண்டும் வெளிப்படுத்தியுள்ளது. இந்த நாட்டின் பண்டைய ஆசாரத்திலிருந்து நான் இம்மியும் பிறழவில்லை. வெறும் பாறாங்கல்லில் சிற்பத்தைப் பாவிக்கும்போதே புராதனச் சிற்பி எனக்குக் கைகொடுத்துவிட்டான். இதைவிட ஒருவருக்கு என்ன பெருமை வேண்டும்!'

அணுவளவு காலத் துகளுக்குள் இவ்வளவும் எண்ணி நிறைந்த சிற்பி, கடைசி கடைசி முறையாக அம்பாளின் பாதமாகிய காலனை உதைக்கும் இடதுகாலில் உளியை வைத்தார்.

அந்தக் 'கிணுங்' ஒடுங்கும்போது, அவரது இதயத் துடிப்பும் ஒடுங்கியது.

தேவியின் பாதத்தைப் பற்றிய நிலையில் தேகத்தை விடுவது எளிதில் கிடைக்கும் பாக்கியமா?

"ஸ்வாமிகள் அன்று ஸ்தபதிக்கு 'அகால மிருத்யு ஹரணம்' சொல்லித் தீர்த்தம் தராததன் அர்த்தம் இப்போதுதான் விளங்குகிறது" என்று ஆசிரமத்தில் பேசிக் கொண்டார்கள்.

ஸ்வாமிகளோ அந்தச் சிற்பத்திலேயே ஆழ்ந்திருந்தார்.

சிவராத்திரியன்று புதிதாகக் கும்பாபிஷேகம் செய்த சிவாலயத்திலே, மூல மூர்த்திக்குப் பூஜை செய்யாமல், நமசிவாய ஸ்தபதி செய்த சிற்பத்துக்குத்தான் நாலு யாமமும் ஸ்வாமிகள் வழிபாடு நடத்தினார்.

"ஈசுவரன் மட்டுமல்லாமல், அவனது அநுக்கிரகத்தை வாங்கிக் கொண்ட மார்க்கண்டேயரும் இந்தச் சிற்பத்தில் இருப்பதால் தான் இதற்கு ஸ்வாமிகள் இவ்வளவு முக்கியத்துவம் தந்திருக்கிறார்" என்று ஒரு பக்தர் கூறினார்.

ஸ்வாமிகள் சிரித்தார்.

"இல்லை, இல்லை. ஈசுவரனுடைய அநுக்கிரகத்தை வாங்கிக் கொண்ட காலனும் இந்தச் சிற்பத்தில் இருப்பதால்தான் இதற்கு விசேஷம்" என்றார்.

"காலனுக்கு அநுக்கிரகமா?" என்று பலர் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

"ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்?" என்று கேட்டார் ஸ்வாமிகள். பின், தொடர்ந்தார்: "காலனுக்கு அநுக்கிரகம் செய்யாததுதான் நமசிவாய ஸ்தபதிக்கு ஆச்சரியமாக இருந்தது. தன் கடமையை இம்மியும் பிறழாமல் செய்தவன் காலன். தன் தருமப்படி மார்க்கண்டரின் உயிரை எடுப்பதற்காகச் சிவாபராதம் செய்தாலும் பாதகமில்லை என்ற கருத்துடன் லிங்கத்துக்கும் சேர்த்துக் காலபாசம் வீசினவன் அவன். அவனை ஏன் ஸ்வாமி உதைச்சுக் கொன்னார்னு ஸ்தபதிக்கு உளைச்சல். ஸ்வாமியின் மீதே கோபம்னு கூடச் சொல்லலாம். அப்புறம் இந்தச் சிற்பத்தைப் பண்ணப் பண்ணத்தான் ஸ்வாமி யமனுக்கு அநுக்கிரகமே பண்ணினார்னு அவருக்குப் புரிஞ்சுது."

''அவருக்குப் புரிஞ்சுது. ஆனால் எங்களுக்குத் தாங்கள்தான் புரிய வைக்கணும்'' என்றார் ஒரு பக்தர்.

சிறிதுபோது மௌனச் சிரிப்பாக இருந்த ஸ்வாமிகள், மௌனத்துக்குச் சுருதி சேர்ப்பது போல் பேசலானார்:

''ஸம்ஹார மூர்த்தியான பரமேச்வரன் தான் ரொம்பப் பெரிய கருணாமூர்த்தி. ஜீவராசிகளுக்கெல்லாம் ரொம்பத் தேவையாயிருக்கிற ஓய்வை, அமைதியை, சாந்தியைத் தருகிறவன் அவன்தான். ஒருத்தன் பாபியா, புண்ணியசாலியா — ஞானியா, அஞ்ஞானியா —இப்படியெல்லாம் வித்தியாசம் பாராட்டாமல், 'ஸம்ஹாரம்' என்ற பேரில் எல்லா ஜீவராசிகளையும் தனக்குள்ளே ஒடுக்கி வைச்சுண்டு ஓய்வு தறவன் அவன்தான். பிரளயத்தின்போது இப்படித் தாரதம்மியம் பார்க்காம எல்லா உயிர்களையும் தன்னோடே அணைச்சுக்கிறான். மறு ஸ்ருஷ்டியில் அஞ்ஞானிகள் பிறப்பு எடுக்கறா. ஞானிகளோ அவனிடம் ஒடுங்கினது ஒடுங்கினதுதான். காலன் மகா ஞானி. எத்தனை தெய்வங்கள் இருந்தபோதிலும், 'தர்ம தேவதை', 'தர்ம ராஜன்' என்கிற பெயர் அவனுக்குத்தான் உண்டு. ஏன்னா அனுவும் ஸ்வதர்மத்தை விடாமல், தன் கடமையை விடாமல் செய்யறவன் அவன். பிரளயத்தின்போது மட்டும்தான் அவனுக்கு ஓய்வு. அவன் பாபம் பண்ணிவிட்டாலும் கூட, மறு ஸ்ருஷ்டியிலே மறுபடியும் பிறக்க வேண்டியதாகிறது. பிரபஞ்சம் மறுபடியும் உண்டான உடனேயே காலனும் உண்டாகத்தானே வேணும்? இதனாலே, காலன் நிரந்தர மோட்சத்துக்குப் பாத்திரமாயிருந்தும்கூட, பகவானுக்குள்ளே சாசுவதமா அடங்கி விடாமல் மறுபடியும் பிரபஞ்சத்துக் காரியத்தைச் செய்ய வேண்டியிருக்கு. இப்படி ஓயாமல் அவன் உழைக்கிறதுக்கு ஈடாக, அவனுக்கு ஒரு சலுகை தரணும்னு ஈசுவரனுக்கு ஆசை. அதாவது மற்ற ஜீவராசிகள் எல்லாரும் தன்கிட்ட ஒடுங்காத ஒரு சமயத்திலே, காலனை மட்டும் கொஞ்ச காலம் தன்கிட்ட ஒடுக்கிக்கணும்னு கிருபாசமுத்திரமான ஆண்டவனுக்கு ஆசை. 'ஓய்வு தரேன், என்னிடம் வா' என்று ஈசுவரன் சொன்னாலும் யமதருமன் கேக்க மாட்டான். அவ்வளவு கடமை உணர்ச்சி அவனுக்கு. அதனாலே வெளிப் பார்வைக்கு விரோதமாக எதையாவது பண்ணித்தான் இவனுக்குக் கொஞ்ச காலம் மோட்ச ஆனந்தம் தர முடியும் என்று ஈசுவரன் எண்ணினான். மார்க்கண்டேயரும் மகா ஞானியல்லவா? அவருக்கு இது தெரிஞ்சுது. தமக்கு உயிர் மேல் ஆசை இருப்பதாக நடிச்சு, லிங்கத்தைக் கட்டிண்டு, ஒரு பெரிய நாடகத்தையே உண்டாக்கிச் கடைசியிலே பரமசிவன் காலை யமன் மேலே படப் பண்ணினார் அவர். அது அநுக்கிரக பாதம். நடராஜாவுடைய தூக்கிய இடது கால்தான் அநுக்கிரக பாதம். வலது கால் அபஸ்மாரத்தை மிதிக்கிறது. அபஸ்மாரத்தை மிதிச்ச காலால் யமனை உதைக்காமல் அநுக்கிரக பாதத்தாலேயே உதைச்சதுலேதான் விசேஷம் இருக்கு. அந்தக் கால் மேலே பட்டவுடன் யமனுக்கு மோட்ச ஆனந்தம் கெடச்சுது. அப்புறம் தேவர்கள் பிரார்த்தனை பண்ணினதால் சிறிது காலத்துக்கப்புறம் யமனுக்கு மறுபடி உயிர் தந்தார் ஸ்வாமி. உண்மையில் உயிர் தந்ததைவிட இந்த ஸம்ஹாரம்தான் யமனுக்கு அநுக்கிரகம். அதனால்தான் சாந்த மூர்த்தியா இதைப் பண்ணியிருக்கார் ஸ்தபதி'' என்று முடிக்கும்போது வைராக்கிய சீலராகிய ஸ்வாமிகளுக்கே நாத் தழுதழுத்தது.

''உயிரைக் கொடுத்துச் செய்தது என்றால் இந்தச் சிற்பத்தைத்தான் சொல்லணும்'' என்றார் ஒருவர்.

ஸ்வாமிகள் இலேசான குரலில், ''ஈசுவரன் செஞ்ச தப்பைத் திருத்தறதுன்னா சாமானியமா? உயிரையே கொடுத்துத்தான் அதைச் சாதிக்க முடியும்'' என்று மொழிந்தார்.

''ஈசுவரன் தப்பு செஞ்சானாவது? அதை ஸ்தபதி திருத்தினாராவது? ஒண்ணுமே புரியல்லியே'' என்றார் ஸ்வாமிகளிடம் சுவாதீனமாகப் பழகும் ஒருவர்.

''ஆமாம், 'தப்பு — சரி'ங்கறது புத்திக்குள்ளே வர காரியம். இருதயத்தாலே காரியம் செய்ய ஆரம்பிச்சா அது புத்திக்கு அடங்காது. ஈசுவரன் இருதயத்தாலே காரியம் செஞ்சான் — கருணை காட்டினான். மிருகண்டு முனிவர் புத்திர சோகப்படக் கூடாதுன்னு ஈசுவரன் கருணை கொண்டு மார்க்கண்டேயருக்கு விதிச்சிருந்த ஆயுசுக்கு மாறா அவரைச் சிரஞ்சீவியாக்கினான். புத்தி பூர்வமாக மட்டும் பார்த்தால் ஈசுவரன் சட்டத்தை மீறித்தான் விட்டான். அப்போது மார்க்கண்டேயனுடைய கால மிருத்யுவை ஈசுவரன் ரத்துப் பண்ணினதுக்கு நஷ்ட ஈடாகத்தான் நமசிவாய ஸ்தபதி தமக்கு விதிச்சிருந்ததுக்கு முன்னாடி அகாலத்திலேயே தன்னை அவன் எடுத்துக்கும்படி பிடிவாதம் பண்ணினார். அதில் ஜயிச்சும் விட்டார். அதாவது ஈசுவரன் பண்ணின தப்பைச் சரி செஞ்சுட்டார்'' என்றார் ஸ்வாமிகள் — அவர் வேடிக்கையாகப் பேசுகிறாரா, தீவிரமாகப் பேசுகிறாரா என்றே தெரியாதபடி ஒரு மழுமழுப்பும் குறும்புச் சிரிப்பும் அவரது குரலில் நிலவியது.

எறும்புக்கும் உண்டு ஆசை!

சில எறும்புகள் சாதாரணமாக உணவுப் பொருள்களைத்தான் தங்கள் புற்றுக்கு எடுத்துச் சென்று சேர்த்து வைக்கும். ஆனால் அவற்றுக்கும் ஆசை இருக்கிறது! பளபளப்பான வஸ்துக்கள் அவற்றை ஈர்க்கின்றன. ரஷ்யாவில் ஒருவர் சோதனை செய்தார். 'ப்ரூச்' ஒன்றை எறும்புப் புற்று அருகில் வைத்தார். எறும்புகள் கூட்டமாக வந்து அதில் உறுதியாகப் பதிக்கப்பெற்றிருந்த மூன்று விலையுயர்ந்த ரத்தினக் கற்களை எப்படியோ பெயர்த்து எடுத்துக் கொண்டு புற்றுக்குள் போய்விட்டன!



ஆதாரம்: சோவியத் யூனியன்
தகவல்: ச. ஸ்ரீதரன்

லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட டீ





தரத் தேயிலைத் தூள்களிலே தனிப்பெருமை வாய்ந்தது

மணமும் சுவையும் நிறைந்த பொன்னிறமுள்ள டீ யை வெகு சீக்கிரத்தில இந்தத் தேயிலையைக் கொண்டு அதிகமான கப்புகளைப் பெறுவீர்கள் இந்த ஒப்புயர்வற்ற டீ யை நீங்களே பருகிப் பாருங்கள் - உங்கள் விருந்தினர்களுக்கும் கொடுங்கள நிச்சயமாக இதை ரசித்து நீங்கள் மகிழ்வீர்கள் — ஆம்! — அப்படியே உங்கள் விருந்தினர்களும்கூட. தரத் தேயிலைத் தூள்களில் லிப்டன்ஸ் ஹிமாலயன் கோல்டன் டஸ்ட தனிப்பெருமை வாய்ந்தது. தன்னிகரற்றது என்பது உண்மை

லிப்டன்ஸ் என்றாலே
நல்ல டீ

LIPTON

MOCAS TAM

சிந்தித்து வாங்குங்கள்–சிறந்ததையே வாங்குங்கள்

பிரிட்டானியா

க்ளுகோஸ்

மில்க் பிஸ்கட்டுகள்



ப்ரோட்டீன் சேர்க்கப்பட்டு புது உறைகளில் கிடைக்கின்றன

பிரிட்டானியா க்ளுகோஸ் மில்க் பிஸ்கட்டுகளில்

மட்டுமே அதிக சக்திக்கு அவசியமான அதிகப்படி ப்ரோட்டீன்கள் உள்ளன. கோதுமை, சர்க்கரை, க்ளுகோஸ் மற்றும் பாலுடன் விட்டமின்களும் சேர்த்து இவை தயாரிக்கப்படுகின்றன.

விடுமுறை! விடுமுறை!
வெண்டைக்காய்க்கும் விடுமுறை ....
சுண்டைக்காய்க்கும் விடுமுறை!

— நமது கத்திரிக்காய் நிருபர் கவிதை

சுவையான விடுமுறை

ஜோக்கி

சென்னையில் இப்படிச் சுவையான விடுமுறைச் சர்ச்சை ஒன்று ஆரம்பமாகி யிருக்கிறது.

ஒரு சிறு சர்ச்சைகூட ஒரு கிளர்ச்சியாகத் திரும்பிப் புயல் வீசுவது இப்போதெல்லாம் வழக்கமாகி விட்டதல்லவா?

இது, கொத்தவால் சாவடி காய்கறி மார்க்கெட்டுக்கும் வந்து விட்டது! சென்னையின் பிரபல கொத்தவால்சாவடி மார்க்கெட் தோன்றி நூறு ஆண்டு ஆகிறது.



நகரில் உள்ள இதர சின்னஞ்சிறு காய்கறி மார்க்கெட்டுகளுக்கெல்லாம் இந்தக் கொத்தவால்சாவடியிலிருந்துதான் அன்றாடம் காய்கறிகள் விடியற்காலை இருட்டோடு இருட்டாகப் போய்ச் சேர்ந்து விடுகின்றன.

சுருங்கக் கூற வேண்டுமானால், கொத்தவால்சாவடி மார்க்கெட்டுதான் தாய் மார்க்கெட்டு. மற்ற மார்க்கெட்டுகளெல்லாம் இதன் குட்டிகள் என்று கூற வேண்டும்.

இப்படிப் பிரபலமாக விளங்கும் தலைமை மார்க்கெட்டுக்குள் சில சமயங்களில் — ஏன் பல சமயங்களில் — உள்ளே நுழையக்கூட முடியாமல் ஒரே குப்பைகூளக் குவியலும், அழுகிய காய்கறிகளின் வாடையும் மூக்கைத் தகர்த்து விடுவது வழக்கம்.

இது ஒரு நாள் இரு நாள் வழக்கமல்ல; நூறு வருட கால வழக்கம் என்று பேசிக் கொள்கிறார்கள். மழைக் காலத்தில் இதற்குள் நுழைவது நரகத்தில் நுழைந்து வெளிப்படுவது போலத்தான் என்ற கருத்தும் இங்கு அடிபடுவதைக் கேட்கலாம்.

கொத்தவால்சாவடிக்கு என்று அன்றாடம் நூற்றுக்கணக்கான லாரிகளில் வெளியூர்களிலிருந்து காய்கறிகள் வருகின்றன. இவை அங்கு கொட்டப்படுகின்றன. சில சமயங்களில் நடக்கும் பாதையில் கொட்டிக் கிடப்பதையும் காணலாம். குப்பைக் குவியல்களையும், அழுகு பதார்த்த மலைகளையும் இந்தக் காய்கறிகளுடன் பாதசாரிகளின் பாதங்கள் தள்ளி விடும்போது அவற்றை விலை கொடுத்து வாங்கிச் செல்லும் அப்பாவிகளை நினைத்தால் யார் மனமும் உருகாமல் இராது.



இந்த அசுத்தமான நிலைமையிலிருந்து கொத்தவால்சாவடியின் பெருமை மிக்க சரித்திரத்தின் பெயரைக் காப்பாற்ற என்ன செய்யலாம் என்று சமீபத்தில் அங்குள்ள வர்த்தக அன்பர்கள் கூட்டம் கூடி வாரம் ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விடுவதென்று தீர்மானித்தனர். அவ்வாறு விடுமுறையும் ஆரம்பமாகி யிருக்கிறது.

விடுமுறையின் நோக்கம், வர்த்தகர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஒரு நாள் ஓய்வு கொடுப்பதோடு, அன்று மார்க்கெட் முழுமையையும் கூட்டிப் பெருக்கி, குப்பை மலைகளை அகற்றிச் சுத்தம் செய்வதும் சாத்தியமாயிருக்கும் என்பதாகும். எனினும், இவ்விஷயத்தில் அங்கு வர்த்தகம் செய்பவர்களில் ஒரு பகுதியார் விடுமுறை தேவையில்லை என்ற சர்ச்சையிலும் இறங்காமலில்லை.

விடுமுறை விடாமலே மார்க்கெட்டைச் சுத்தம் செய்யலாம்; இவ்வளவு காலமாக இல்லாத வழக்கமாக இப்போது விடுமுறை வழக்கம் எதற்கு? இதனால் பொதுமக்களுக்குக் காய்கறித் தட்டுப்பாடு உண்டாகலாம், வர்த்தகர்களுக்கும் ஒரு நாள் விற்பனையாகாத காய்கறிகளால் நஷ்டம் ஏற்படலாம்; காய்கறிகளும் அழுகிவிடக்கூடும் என்றெல்லாம் கூறுகிறார்களாம்!

இதைப் பற்றி மனிதர்களிடையே கருத்துக்கள் எப்படி இருப்பினும், காய்கறிகளின் கருத்துக்களைச் சற்றுக் கேட்டுப் பார்க்கலாம்.

வெண்டைக்காய் கூறுகிறது: விடுமுறை வேண்டுமா வேண்டாமா என்பது ஒரு முடிவான விஷயமல்ல. ஒரு நாள் புத்தம் புதிதாக அப்போது பறித்த வெண்டைக்காய் இல்லாமல் சென்னை மக்களால் காலம் தள்ள முடியுமா? முடியாவிட்டால்



"நான் முட்டாள் என்று என் சித்தப்பா விடம் சொன்னுயாமே, உண்மையா ?"

"அது உண்மைதான்! ஆனுல் நான் உன் சித்தப்பாவிடம் அதை இதுவரையில் சொல்லவில்லையே !"

மோர்க் குழம்பைத் தியாகம் செய்யவாவது தயாரா யிருக்கிருர்களா என்பதைக் கேட்டறிந்துதான் முடிவு கூற வேண்டும்.

சேப்பங்கிழங்கு: என் கருத்தும் வெண்டைக்காயின் கருத்தும் ஒன்றுதான்! அது கூறுவதை வழவழப்புடன் நான் ஆதரிக்கின்றேன்.

கத்திரி: வெய்யில் நாட்களில்கூட கத்திரி வெய்யில் என்று கூறுகிருர்களே, அது எதற்காக ? விடுமுறை தேவை என்பதை நினைப் பூட்டத்தான் என்று கூறுவேன். ஒரு நாள் கத்திரியில்லா விட்டால் சமையல் எதுவும் குறைந்து விடப் போவதில்லை. வீர வைஷ்ணவர்கள் வேண்டுமானுல் அன்று (ஞாயிறு அன்று) ஸ்பெஷலாகக் கத்திரியை உபயோகிக்காமல் விட்டுக் கொடுக்கலாம். கத்த சைவர்களும் இவர்களைப் பின்தொடரலாம்.

புடலங்காய்: இது மிகவும் நீளமான சர்ச்சையில் கொண்டு போய்விடக்கூடிய விஷயமாகும். மார்க்கெட்டில் விற்பனை கிடையாதென்ருல் தெருவில் நாங்கள் அலையவும் தயார். யார் வேண்டுமானுலும் தலையில் எங்களைத் தூக்கி வைத்துக் கொண்டு புடலங்காய் புடலங்காய் என்று விற்றுக் திரியட்டும்! ஆனுல், வெயில் காலம் என்பதை மறந்துவிட வேண்டாம். வதங்கிப் போய் நாங்கள் பொரியலாகி விடாமல் குடையைப் பிடித்துக் கொண்டு எங்களை விற்றுத் திரியட்டும்.

பாகற்காய்: இந்த விடுமுறைச் சர்ச்சை, காய்கறிகள் உபயோகிப்போரிடையே வீண் மனக் கசப்பைத்தான் உண்டாக்கியிருக்கிறது. அமோனியம் சல்பேட் உரம் போட்டுப் போட்டு, இப்போது நகருக்கு வரும் பாகற் காய்களிலெல்லாம் பாகற்காயின் இயற்கை குணமாகிய கசப்பு மறைந்து அதுவும் தித்திக்கத் தொடங்கிவிட்டது. (''புடலங்காய்களுக்கும் இதே கதிதான்!'' என்று அருகில் உள்ள தக்காளி கூறுகிறது.) இந்த நிலைமையில் காய்கறிகள் உபயோகிப் போர் மனத்தில் ஓர் அவசியமற்ற சர்ச்சை காரணமாகக் கசப்பை வளர்ப்பானேன் ?

வாழைக்காய்: வாழைத் தண்டு, பூ இவற்றின் சார்பாகவும் கூறுகிறேன். விடுமுறை விடுவதால் ஒன்றும் நஷ்டமாகி விடாது. யாருக்கும் கஷ்டமும் ஏற்பட்டு விடாது ! ஆனுல் நண்பர் பாகற்காய் ஒன்று சொல்ல மறந்து விட்டார். வருஷத்துக்கு ஒரு முறை திவசம் போன்ற பிதிர்க் காரியங்கள் ஞாயிற்றுக்கிழமையில் வந்தால் நாங்கள் அதில் எப்படிக் கலந்து கொள்ளாமலிருக்க முடியும் என்ற ஒரு பிரச்னைதான் !

காரெட்: விடுமுறை என்ற பேச்சு இவ்வளவு காலம் எங்கே ஒளிந்து கொண்டிருந்தது ? இப்போது இந்தப் பிரச்னை திடீரென்று வெளிச்சத்துக்கு வருவானேன் ?

பச்சை மிளகாய் : நான் வெடுக்கென்று பேசுவதாய் யாரும் நினைக்க வேண்டாம். சுற்றி வளைக்காமல் பளிச்சென்று சொல்கிறேன். விடுமுறையை நான் ஆதரிக்கிறேன்.

வெங்காயம்: வெங்காயத்துக்கு விரத நாட்களில்கூட சிலர் இப்போதெல்லாம் விடுமுறை தருவதில்லையே ! ஹோட்டல்களில் வெங்காயம் சேராத நாள் ஏதாவது உண்டா? எனவே விடுமுறையாவதுவெங்காயமாவது! பெரியார் கூறிய வெங்காய மொழிகளை நினைவு கொள்வதற்காகவாவது காய்கறி மார்க்கெட்டுகள் எப்போதும் திறந்து இருக்க வேண்டியதுதான். விடுமுறைகூடாது. அப்படியே விடுவதானுல் ஓர் அமாவாசை நாளாகப் பார்த்து விட்டு விட்டுப் போகட்டும் !

சேனை: நான் விடுமுறையை ஆதரிக்கிறேன் !

கருணை: விடுமுறை வேண்டாம் !


தக்காளி: விடுமுறை விட்டாலும் சரி, விடாமற்போனுலும் சரி, இதில் நான் தலையிட்டு நசுங்கத் தயாராயில்லை.


பூசணி: ஏன்? இவ்விஷயமாகக் காய்கறிகளிடையே 'ஓட்டு' எடுத்துப் பார்க்கலாமே !

பூசணியின் யோசனையின் மீது காய்கறிகளிடையே வோட்டு எடுக்கும் பொறுப்பைப் பறங்கி ஏற்றுக் கொண்டது. விடுமுறைக்கு அதிக ஆதரவு இருப்பதாக வோட்டுக்களை எடை போட்டுப் பார்த்ததில் வெளியாகியிருக்கிறதென்று பறங்கி முடிவை அறிவித்தது. இந்த முடிவை ஆட்சேபித்து உடனே ஒரு சிறு சலசலப்பு. ''வோட்டுக்களைத் தராசில் எடை போட்டிருக்கக் கூடாது. எண்ணிப் பார்த்திருக்க வேண்டும் !'' என்று பீட்ரூட், கொத்தவரை இவை குதித்தன. உடனே முருங்கைக் காயைச் சுழற்றிக் கொண்டு குடை மிளகாய்ப் போலீசார் வந்து சேரவே, அமைதி நிலவிற்று. கொத்தவால்சாவடியின் சரித்திரத்திலேயே சென்ற நூறு ஆண்டுகளில் முதல் தடவையாக இப்போதுதான் முருங்கைக் காய் ஏந்திய போலீஸார் அமைதிக்காகத் தருவிக்கப்பட்டனர் என்று பழுத்த பறங்கிக்காய் ஒன்று நமது கத்திரி நிருபரிடம் கூறிற்று !

சிறிய மாதத் தவணைகளில் சேமித்து பெரிய பொருள்களை வாங்கிக் கொள்ளுங்கள்

-பாங்க் ஆ..ப் பரோடாவின் ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்தில் சேருங்கள்!





மாதம் ரூ. 5/-வீதம் செலுத்திவந்தால் 24 மாதங்களில் ரூ.127.50 கிடைக்கும்—ஒரு டேபிள் ஃபேன் வாங்கிக் கொள்ளலாம்! மாதம் ரூ. 10/-வீதம் 36 மாதங்களில் ரூ.395/-சேரும்—இது நல்லதொரு சைக்கிள் வாங்கப் போதுமானது.

எனவே, விலையுயர்ந்த பெரிய பொருள்களை வாங்கிக்கொள்ள, பாங்க் ஆ..ப் பரோடாவின் ரெக்கரிங் டெபாஸிட் திட்டத்தில் சேருங்கள். சுலபமான மாதத் தவணைகளில் பணத்தைக் கட்டி, சேமித்துக்கொண்டே கணிசமான வட்டியையும் சம்பாதிக்கலாம்!

ஏற்றுக்கொள்ளப்படும் மாதத் தவணைகளின் தொகை: ரூ.5, ரூ.10, ரூ.20...ரூ.100 வரை. 2, 3, 4 முதல் 9 வருடங்கள் வரை.

மாதத் தவணை	2-வருடக் கணக்கு	3-வருடக் கணக்கு	4-வருடக் கணக்கு	5-வருடக் கணக்கு	7-வருடக் கணக்கு	9-வருடக் கணக்கு
ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	ரூ.
5	127.50	197.50	271.50	354.50	536	750
10	255	395	543	709	1,072	1,500
20	510	790	1,086	1,418	2,144	3,000
30	765	1,185	1,629	2,127	3,216	4,500
40	1,020	1,580	2,172	2,836	4,288	6,000
50	1,275	1,975	2,715	3,545	5,360	7,500
60	1,530	2,370	3,258	4,254	6,432	9,000
70	1,785	2,765	3,801	4,963	7,504	10,500
80	2,040	3,160	4,344	5,672	8,576	12,000
90	2,295	3,555	4,887	6,381	9,648	13,500
100	2,550	3,950	5,430	7,090	10,720	15,000
	வருடம் 5¼%	வருடம் 6%	வருடம் 6%	வருடம் 6¼%	வருடம் 6½%	வருடம் 7%

(ஆறு மாதங்களுக்கொரு முறை கூட்டுவட்டி கணக்கிடப்படுகிறது)

என்றென்றும் வளமையுடன் வாழ உங்களுக்கு உதவுகிறது—

தி பாங்க் ஆஃப் பரோடா லிமிடெட்

நிறுவனம்: (1908) ரெஜிஸ்டர்ட் ஆபீஸ்: மாண்ட்வி, பரோடா
இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் 300க்கு மேற்பட்ட கிளைகள் உள்ளன

உங்களுக்கு அருகாமையிலுள்ள கிளையிலிருந்தோ, எழுதிக்கேட்டோ, எமது ரெக்கரிங் டெபாஸிட் திட்டம் பற்றிய பிரசுரத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

லோமா

இன்று கமகமவென்ற
புது மணத்தோடு
வருகிறது.



உங்களேயும் ஆயிரமாயிரம்
வெளிநாட்டினரையும் கவர்ந்-
துள்ள கேசக் கருமைச்
சாதனமாகிற லோமா, இப்-
போது இணைபிரியாத புதுமணம்
கமழ்ந்து வருகிறது. என்றையும்
விட இன்று அதிக இன்பம்
காண, அன்றாடக் கேச
அலங்கரிப்புச் சாதனமாக
லோமா உபயோகியுங்கள்.

பெரிய, நடுத்தர,
சிறிய புட்டிகளாகவும்
தவிர, டியூப்களிலே
போமேடாகவும்
கிடைக்கிறது.

★ இந்தியாவிலிருந்து ஏற்று-
மதியாகும் மொத்தக் கேசத்
தைலங்களின் அளவில் சுமார்
16% லோமாவையே சாரும்.

WT

ஏகபோக ஏஜண்டுகள் &
ஏற்றுமதியாளர்கள்: எம். எம். கம்பாட்வாலா அகமதாபாத் (இந்தியா)




1940ம் ஆண்டு டிசம்பர் 30ந் தேதி சென்னை ராயல் தியேட்டர் நிரம்பி வழிகிறது. தேசபக்தர் விசுவநாத தாஸ் 'வள்ளி நாடகம்' அன்று நடைபெறவிருக்கிறது.

எந்த வேஷம் போட்டாலும்-கோவலனோ, ஹரிச்சந்திரனோ, முருகனோ-தேசியப் பாடல்கள் அதுவும் கனல் தெறிக்கும் பாடல்களை அவர் பாடாமலிருப்பதில்லை. அப்பாட்டுக்களைக் கேட்கவே அவ்வளவு கூட்டம். பொது மக்களைத் தவிர இவர் இப்பாட்டுக்களை எப்போது பாடப்போகிறார் என்று ஆவலாக இருந்தவர்கள் போலீஸார். ஒரு சமயம் வேடத்தைக் கலைக்கக்கூடப் போலீசார் விடவில்லை; 'கோவலனையே' கைது செய்தனர்.

மகாத்மா காந்தி தமிழகத்துக்கு முதன் முதலில் வந்தபோது தூத்துக்குடியில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் இவரைச் சந்தித்து இவர் பாடியதைக் கேட்டு ஆனந்தித்து முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அந்த டிசம்பர் 30ந் தேதியும் அவர் தேசியப் பாடல்களை முருகனாகவே தோன்றிப் பாடினார். போலீஸ்காரர்களும் அவரைக் கைது செய்யக் காத்திருந்தனர். கடைசிக் காட்சி, முருகன் மயில்மீது அமர்ந்து தரிசனம் தருவது. 'மாய உலகை நம்பாதே' என்று பாடிய தாஸின் தலை தொங்கி விட்டது. அருகில் ஹார்மோனியம் வாசித்துக் கொண்டிருந்த சகோதரர் ஷண்முகதாஸ் அவரைத் தாங்கிப்பிடித்தார். மயில்மீது அமர்ந்த நிலையிலேயே விசுவநாத தாஸ் அமரரானார். அன்றைக்குப் போலீஸார் ஏமாந்தனர். ●




1942ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9-ம் தேதி இந்நாட்டில் மாபெரும் புரட்சி நடைபெற்றது. ''செயலில் இறங்குவோம் அல்லது செத்து மடிவோம், இனி அடிமைகளாக வாழ மாட்டோம்!'' — இவையே மக்களின் கோஷம். பம்பாயில் எங்கு பார்த்தாலும் உற்சாகம். திரளான கூட்டம்.

ஆகஸ்டு 7, 8 தேதிகளில் கூடிய காங்கிரஸ் கூட்டத்துக்கு மகாத்மா இரு நாட்களிலும் வந்திருந்தார். அவர் பேச்சில் குழைவும் உருக்கமும் காணப்பட்டன. 8ந் தேதி கூட்டம் முடிய இரவு வெகு நேரமாகி விட்டது. மறுநாள் காலை காந்திஜி உட்பட அவ்வளவு தலைவர்களையும் அரசாங்கம் கைது செய்தது. மக்களுக்கு வழி காட்ட ஒரு தலைவரைக்கூட வெளியில் விட்டுவைக்கவில்லை.

பம்பாயில் ஏக அமளி. கண்ணீர் வெடி, துப்பாக்கி வெடி, அடிதடி எல்லாம் நடைபெற்றன. நாள்கணக்கில் கடைகள் திறக்கப் படவில்லை. எது கேட்டாலும் ''பந்த்'' என்ற பதிலே கிடைத்தது.

காந்திஜி செய்த பிரசங்கம் முழுவதையும் ஒரு வரி விடாமல் பிரசுரிக்கப் பாரத தேவி ஆசிரியர் குழாம் அன்று அரும்பாடு பட்டது. மணி இரண்டு இருக்கும்போது இப்பிரசங்கத்தைப் பிரசுரிக்கக் கூடாது என்று அரசாங்கத் தணிக்கை உத்தரவு வந்தது. அப்போது ஆசிரியராக இருந்த என். ராமரத்தினம், வந்தது வரட்டும் என்று காந்திஜியின் முழு உரையையும் பிரசுரித்து விட்டார். 9ந் தேதி காலை வெளி வந்த தினசரிகளில் காந்திஜியின் பிரசங்கம் முழுதும் தாங்கி வந்த பத்திரிகை "பாரததேவி" தான்.

ஃபாஸ்ஃபோமின்



சக்தியை அதிகரிக்கிறது. பசியைத் தூண்டுகிறது. வலிவைப் பெருக்குகிறது. நோய்களை எதிர்க்கும் சக்தியை கூட்டுகிறது.





சுருங்கச் சொன்னால்—
குடும்பத்தில் அனைவரும் திட
ஆரோக்கியத்துடன் திகழ
உதவுகிறது ஃபாஸ்ஃபோமின்

ஃபாஸ்ஃபோமின்... 'பி' காம்ப்ளெக்ஸ் வைட்டமின்களும்,
பலவகை கிளிஸரோஃபாஸ்பேட்டுகளும் அடங்கிய,
பழரஸ மணம் கமழும் பச்சைநிற டானிக்.



SQUIBB® TTT® ® இ. ஆர். ஸ்க்விப் அண்டு ஸன்ஸ் இன்கார்பொரேடெட்டின் ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்காகும். கரம்சந்த் ப்ரேம்சந்த் ப்ரைவேட் லிமிடெட் இதை உபயோகிக்க உரிமை பெற்றவர்கள்.

SARABHAI CHEMICALS

Shilpi SC 50 A /67 Tam

உருவ விஞ்ஞானி

நோபல் பரிசுபெற்ற பேராசிரியர் லினஸ் பாலிங் என்ற பௌதிக நிபுணர் புரதத்தின் அமைப்பைப்பற்றி 1951ல் ஒரு புதுக்கருத்தை வெளியிட்டார். தேகத்தின் சருமத்திலும், எலும்பிலும், தசைநார்களிலும், டிஷ்யூக்களிலும் காணப்படும் 'கல்லாஜென்' (Collagen) என்ற புரதத்தின் அமைப்பு அந்தப் பேராசிரியர் பாலிங்கின் கூற்றை அங்கீகரிக்க முடியாமல் செய்து வந்தது. அந்தப் புரதத்தின் கல்லாஜென்னின் அமைப்புரகசியத்தை முதன் முதலில் 1954ல் கண்டுபிடித்தது டாக்டர் ஜி. என். ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் இயங்கி வந்த ஆராய்ச்சிக் குழுதான். முக்கியமாக இப்பெருமை டாக்டர் ஜி. என். ராமச்சந்திரன் அவர்களையே சேரும். பௌதிக சாஸ்திர விஞ்ஞானத்தில் இது மிக முக்கியமான கண்டுபிடிப்பாதலினால் திரு ஜி. என். ராமச்சந்திரன் உலக விஞ்ஞானிகளில் ஒருவராக இன்று பெரிதும் மதிக்கப்படுகிறார்!

டாக்டர் ராமச்சந்திரன் 1922ம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி எர்ணாகுளத்தில் பிறந்தார். தந்தையின் பெயர் கோபாலசமுத்திரம் நாராயணய்யர். இண்டர் பரீட்சையில் சர்வகலாசாலையின் முதல் மாணவராகத் தேறினார். ஹானர்ஸ், பரீட்சையிலும் அப்படியே! பின்னர் டாக்டர் ஸி. வி. ராமன் ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்து ஒரு டாக்டர் பட்டமும், இங்கிலாந்து — கேம்பிரிட்ஜில் ஒரு டாக்டர் பட்டமும் பெற்றிருக்கிறார்.

டாக்டர் ஜி. என். ராமச்சந்திரன் தற்சமயம் சென்னை கிண்டியில் உள்ள அழகப்பா காலேஜ் ஆஃப் டெக்னாலஜியில் பணியாற்றி வருகிறார். சென்னை சர்வகலாசாலையின் 'பயோ பிஸிக்ஸ்' ஆராய்ச்சித் துறைக்கு டைரக்டராக இருந்து விஞ்ஞான ஆராய்ச்சிகளில் ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கு வழிகாட்டி வருகிறார்.

டாக்டர் ராமச்சந்திரன் அவர்கள் கல்லாஜென் புரதத்தின் அமைப்புப் பற்றிக் கண்டுபிடித்துச் சொன்னதற்கு ஞாபகார்த்தமாக கேம்பிரிட்ஜில் உள்ள ஒரு நண்பர் அந்த அமைப்பைப் போலவே ஒரு மாதிரி (மாடல்) செய்து பரிசளித்திருக்கிறார். நீலம், சிவப்பு, கறுப்பு, வெள்ளை நிறப் பந்துகள் கோத்த அந்த அமைப்பு கிறிஸ்துமஸ் செடி போல் காண்கிறது. இந்த அழகிய மாடலைப் பார்த்ததும், புரத அமைப்பு என்று விஞ்ஞானிகள் இதுகாறும் கூறி வந்ததை விட்டு, புரத கலைச் சிற்பம் (புரோட்டீ ஆர்கிடெக்ட்யூர்) என்று இப்பொழுது கூறி வருவதன் பொருள் விளங்குகிறதாம்! ஒரு புரத யூனிட்டுக்குள் முந்நூறு அணுக்களுக்கு மேல் இம்மாதிரி அழகிய அமைப்போடு காணப்படுவதை உலகுக்கு முதன் முதல் எடுத்து இயம்பியவர்கள் விஞ்ஞான உலகில், ''மெட்ராஸ் குரூப்'' என்று அழைக்கப்படும் டாக்டர் ஜி. என். ராமச்சந்திரன் கீழ் ஆராய்ச்சி புரியும் விஞ்ஞானிகள்!

அவர் வெறும் பௌதிக ஆராய்ச்சியாளராகத்தான் (Pure Physics) தமது ஆராய்ச்சி வாழ்வைத் தொடங்கினார். ஆனால் அவரது ஆராய்ச்சி முடிவுகள் பயோபிஸிக்ஸ், பயோ கெமிஸ்டிரி, உடற்கூறு சாஸ்திர ஆராய்ச்சி, வைத்தியப் பரிசோதனை ஆகிய அத்தனை ஆராய்ச்சித் துறைகளிலும் பயனாகி வருகின்றன.



டாக்டர் ஜி. என். ராமச்சந்திரன்

உப்புக்கு ஓர் உருவம், படிகத்துக்கு ஓர் உருவம், கற்கண்டுக்கு ஓர் உருவம், வைரம், கோமேதகம் — இப்படி எந்தப் பொருளை எடுத்தாலும் ஓர் உருவ அமைப்பு ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இது எப்படி ஏற்படுகிறது, ஏன் ஏற்படுகிறது, அதன் விளைவுகள் என்ன என்று ஆராய்வதுதான் 'கிறிஸ்டலோ கிராபி' என்பது. இதில் பேர் ஆர்வம் காட்டி உழைத்து வருபவர் டாக்டர் ஸி. வி. ராமன். அவரது ஆராய்ச்சிக் கூடத்துக்குப் போனால் ரகம் ரகமான கற்களை அவர் கண்ணாடி பீரோக்களில் வைத்திருப்பதைக் காணலாம். சாதாரண பாமர மக்களுக்கு இது என்ன தெருவில் கிடக்கிற கற்களையெல்லாம் பொறுக்கி வந்து அடுக்கி வைத்திருக்கிறாரே என்று தோன்றும். அவையெல்லாம் ஸர் ஸி. வி. ராமனிடம் கவிதை பேசும். அவற்றின் அமைப்பைப் பார்த்து அவர் ரஸிக்கும் விதத்தையும், விளக்குவதையும் பார்க்கும் போது ரஸிகமணி டி. கே. ஸி. கம்பன் பாடலை எடுத்து வைத்துக் கொண்டு, எதுகையையும், மோனையையும் இரண்டாவது அடியின் அமைப்பையும் நாலாவது அடியில் முத்தாய்ப்பாக விழுந்துள்ள சொல்லின் அழகையும் ரஸிப்பதையே நினைவூட்டும். அப்படி கிறிஸ்டலோகிராபியில் பேர் ஆர்வத்துடன் பணியாற்றிவரும் டாக்டர் ஸி. வி. ராமனின் சீடர் தான் டாக்டர் ஜி. என். ராமச்சந்திரன்!

உலகப் புகழ் பெற்றுள்ள டாக்டர் ராமச்சந்திரன் அவர்களுக்குத் துப்பறியும் கதைகள் படிப்பதிலும் கர்நாடக சங்கீதம் கேட்பதிலும் பற்று உண்டு.

ஆதாரம்: 'ஹிந்து'

பொன்னிவனத்துப் பூங்குயில்

கொத்தமங்கலம் சுப்பு

அத்தியாயம் 23

"அன்னைக் குலத்தின் அணிகலன்"

மனிதனுக்கு ஏழைமையே கொடுமை. அதில் இரக்க சித்தமும் இருந்துவிட்டால் அது ஆற்றொணாக் கொடுமை. குயிலி அதில் சிக்கித் தவித்தாள். இப்ப எந்த வைத்தியனைப் போய்த் தேடுறது? எவன் காசில்லாமல் மருந்து குடுப்பான்? இலட்சுமணப் பண்டிதர் இருக்கிறாரு. அவரு குழந்தை வைத்தியம் தானே செய்வாரு? இந்தப் பயலுக்கு அவரு மருந்து குடுத்தா இவன் ஊரெல்லாம் மருந்து பலிக்கலேன்னு டமாரம் அடிச்சுடுவானே. குழந்தையா இருந்தாச் சொல்லாது.


நத்தர் சாயபு தரும வைத்தியம் செய்வாரு. ஆனா அவரு உண்டியலிலே பணம் போடச் சொல்லுவாரே? என்ன செய்யறது? நான் எங்கே போய்க் காசைத் தேடறது? அதுக்குள்ளே இந்த முந்திரிக்கொட்டைக்கு ஏதாவது ஆயிட்டா? இப்படி எண்ணிக்கொண்டே நாணயக்காரர் செட்டித் தெருவில் உள்ள அரண்மனைவைத்தியம் அண்ணாசாமிராவ் வீட்டுக்கு ஓடினாள் குயிலி.

அங்கு நோயினால் தாக்கப்பட்ட கூட்டம் ஒன்று வாசலில் நின்றுகொண்டிருந்தது. ஒரு வேலைக்காரன் அவர்களை விலக்கியபடி பின்வருமாறு சத்தம் போட்டுக்கொண்டிருந்தான். ''ஏழை பயலுங்க ஏன்டா இருக்க ஆசைப்படுறீங்க? செலவில்லாமல் கொள்ளி கிடைச்சா விழுந்து சாவீங்களா? ஏன் இங்க வந்து தொந்தரவு பண்ணுறீங்க?'' என்று கேட்டு ஆட்களை வெளியே தள்ளிக் கொண்டிருந்தான்.

இதைப் பார்த்த குயிலி ''இவன் நம்மை உள்ளே விடமாட்டான். இவன் விட்டாலும் வைத்தியர்



வரமாட்டார். என்ன செய்யலாம்? இந்த வைத்தியரை யார் கூப்பிட்டால் உடனே வருவார்? பணம் கூப்பிட்டால் வருவார்; அல்லது பதவி உத்தரவிட்டால் வருவார். அதுக்கு எங்கே போவது? வீட்டுக்குப் போய்க் கிழவியிடம் கேட்டால் என்ன? அடியம்மா! வீடா அது? புலிக்கூடு. அங்கு நுழைந்தால் பஞ்சவர்ணம் கையில் மாட்டிக் கொள்வோம். சே, ஓர் உயிரைக் காப்பாற்ற நம்மால் முடியவில்லையே!'' என்று அவன் வருந்திக் கொண்டே தலையைக் குனிந்தபடி திரும்பி வரும் பொழுது, ''ஏஹூம்! ஏஹூம்!'' என்று பல்லக்குப் போயிகளின் குரல் கேட்டது. குயிலி நிமிர்ந்து பார்த்தான். ஓர் அழகிய மூடுபல்லக்கின் தங்கத் தண்டிகைகளை நன்கு உடை தரித்த நான்கு போயிகள் சுமந்து கொண்டு காளியம்மன் கோயில் சந்தில் திரும்புவதைப் பார்த்தான்.



பல்லக்கு ஒரு வீட்டு வாசலில் போனவுடன் பல்லக்குக்குள்ளிருந்து ஒரு பொன் மணி முழங்கியது. 'நில்' என்ற ஒரு கரகரப்பான பெண் குரல் கேட்டது. போயிகள் பல்லக்கைக் கீழே வைத்தார்கள். கோஷா ஸ்திரீகளைப் பார்க்கக் கூடாது என்பதற்காகப் பணிவுடன் தரையைப் பார்த்த வண்ணம் நின்றார்கள். பல்லக்கிலிருந்து இளைய ராணி சுஜனாபாயின் தோழி ஒருத்தி இறங்கித் தன் உடலைப் பட்டால் போர்த்திக் கொண்டு ஒரு சோசியர் வீட்டுக்குள் நுழைவதைக் கண்டான் குயிலி. அவன் மூளை வெகு வேகமாக வேலை செய்தது. ''ஒரு உயிரைக் காப்பாத்த நினைத்தால் கூட உயர்ந்த பதவி கிடைக்கும்போல் இருக்கிறதே'' என்று எண்ணினான்.

போயிகள் நால்வரும் ஏதோ தெலுங்கில் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது மறுபடியும் மணிச் சத்தம் பல்லக்கின் உள்ளிருந்து கேட்கவே ''அதுக்குள்ளேயா வந்துட்டாங்க!'' என்று அவர்கள் சொல்லிக் கொண்டே ஓடி வந்து பல்லக்கருகில் நின்றனர்.

''அரண்மனை வைத்தியம் அண்ணு சாமி ராவ் ஜாவ்!'' என்று உத்தர விட்டது அதே கரகரத்த குரல்.

பல்லக்கு ஐந்தே நிமிடங்களில் அரண்மனை வைத்தியர் வீட்டு வாசலில் நின்றது. வாசலில் காத்திருந்த கூட்டத்தினர் தங்கள் புண்களையும் மறந்து விட்டுப் பல்லக்கில் வரும் பெண்ணைப் பார்க்க ஆவலோடு திரும்பினர்கள்.

''ஏய் போயி! ஏன் நிக்கறே? கூப்பிடு வைத்தியர்!'' என்று உடைந்த தமிழில் உத்தரவிட்டது குரல்.

போயிகளில் ஒருவன் ஓடினான் உள்ளே. அடுத்த கணமே அண்ணுசாமி ராவ் அங்கு வந்து மண்ணைத் தொட்டு வணங்கினர்.

'சிவகங்கை தோட்டம் வாசல் ஆல மரத்தடி முந்திரிக்கொட்டை, ஒரு ஏழைப் பையன், பீமார் ஜால்!' என்றது கம்பீரக் குரல்.

வைத்தியர் தம் மருந்துப் பையுடன் தோட்டத்தை நோக்கி ஓடினர்.

இதே சமயத்தில் சோசியர் வீட்டில் சுஜானுபாய் சாகிபாவின் சகி, சோசியரிடம், ''முதலில் பல்லக்கு எங்கே போச்சு, அதைக் கண்டுபிடியுங்க? அதுக்குப் பிறகு தீ வைத்தவன் யார் என்று கண்டுபிடிக்கலாம்'' என்ருள். சோசியர் சகியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே சோழிகளை எண்ணினர். ஆருடம் சரியாக வரவில்லை. அவர் சோழிகளைத் தான் எண்ணினரோ? அல்லது வேறு எதைத்தான் எண்ணினரோ?

''மகாராஜா என்ருல் நம்ம மகா ராஜா தான் மகாராஜா! ஏழைபாழைகளைத் தேடி வந்து வைத்தியம் செய்யருங்களே!'' என்ருன் சின்னத்தம்பி.

''மகாராஜா அனுப்பவில்லே. சுஜானு பாய் சாகிபாவின் ஏற்பாடு. அவங்க சகி பல்லக்கிலே 'ஏஹூம்' 'ஏஹூம்'னு வந்து ஹூக்கும் குடுத்தாங்க'' என்று பணிவுடன் சொல்லி விட்டு, ''இந்தா, இப்ப செந்தூரம் குடுத்திருக்கேன். நல்லா கபகபன்னு பசி எடுக்கும். சுடச் சுடப் பசும் பாலில் சர்க்கரையைப் போட்டுக் குடுத்துக்கிட்டே இரு. இல்லாட்டி மருந்து குடலைத் தின்னுடும்'' என்ருர் வைத்தியர்.

அவர் நாலடி எடுத்து வைத்தவுடனே, ''அடப்பாவி! ஏழைக்கு எவனாவது பசி எடுக்கிற மருந்தைக் குடுப்பாங்களா? இந்தக் குயிலி எங்கே?'' என்ருன் சின்னத் தம்பி.

ஆனல் குயிலியோ, பல்லக்குக்குள் அகப்பட்டுக் கொண்டு ''எப்படி இறங்குவது?'' என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தாள்.

பல்லக்கு அரண்மனையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை அறிந்தவுடன் அவளுக்குக் குபீர் என்று வியர்த்தது. தலை சுற்றியது. இனி ஒரு கணம் பல்லக்கில் இருந்தாலும் மயக்கம் போட்டுவிடும் போல் தோன்றியது. பல்லக்கை அரண்மனைக்குள்ளே கொண்டு போவார்கள். அப்போதாவது கீழே இறங்கித்தான் ஆக வேண்டும். எவன் கண்ணில் அகப்படுவேனே? என்ன செய்வானே?'' என்ற பயம் வந்தவுடன் பொத்தென்று கீழே குதித்துவிட முடிவு செய்தாள். 'குதிக்காதே! குதித்தால் போயிகள் பிடித்துக் கொள்வார்கள். உன்னைப் பிடித்துக் கொண்டு போய் அரண்மனைக்குள் தான் விசாரிப்பார்கள்' என்று அவள் மனம் கூறவே, 'ஐயோ, துள்ளிய மீன் வலையில் சிக்கிக் கொள்வதுபோல் நாமே வலையில் வந்து மாட்டிக் கொண்டோமே. ஆணுகப் பிறந்திருந்தால் அத்தனைபேருக்கும் பதில் சொல்வேன், தெய்வமே! ஏன் என்னைப் பெண்ணுப் படைச்சே?' என்று அவள் கடவுளை நொந்து கொண்டபோது, 'ஏன், ஏன், ஏன்?' என்று கேட்பதுபோல 'டாண், டாண், டாண்' என்ற மணி ஓசை எல்லையம்மன் கோயிலிலிருந்து கேட்டது. அந்த ஒலியிலே அவள் நெஞ்சில் ஓர் ஒளி தோன்றியது.

கோயில் வாசல் வந்தவுடனே 'டேரோ' என்ருள் குயிலி. பல்லக்கு நின்றது. போயிகள் மரியாதையாகத் தரையைப் பார்த்தபடி நின்ருர்கள். குயிலி பல்லக்குக்குள் விரித்திருந்த பட்டை எடுத்துப் போர்த்திக் கொண்டு கோஷா போல் பரபரவென்று கோயிலுக்குள் நுழைந்தாள். ஆஹா ஒரு பிரதக்ஷிணம் செய்தவுடன் என்ன ஆச்சரியம்! குயிலியாக மாறினுள். சிரித்துக் கொண்டே வெளியே வந்து போயிகளிடம், ''ஏமி போயி, பல்லக்கிலே எவரு வந்தாங்க?'' என்று தன் சொந்தக் குரலில் அவர்களைக் கேட்டாள்.

''எவுரு? உங்க பாட்டி வந்தாங்க! போ, போ!'' என்ருன் ஒருவன்.

''ஏமி! பாட்டியில்லே, பேத்தி வந்தாங்க! போ, போ!'' என்று அவனுக்கு முகத்தைக் கோணிக் காட்டி விட்டு ஓடினுள் குயிலி.

''அடே! பொட்டைக்குட்டி எப்படி ஓடுது பாரு. காலம் கெட்டுப் போச்சுடா!'' என்ருன் ஒரு போயி.

இரைக்க இரைக்க வந்த குயிலி முந்திரிக் கொட்டையின் சிரித்த முகத்தைக் கண்டதும், 'அம்மாடி' என்ருள்.

ஸ்ரீ பிரஸன்ன வேங்கடாசலபதி ஸ்வாமி கோவில்

திருப்பணிக் குழு, குணசீலம் (திருச்சி ஜில்லா)

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ பிரஸன்ன வேங்கடேச பெருமாளுடைய பெருமையை அறியாதார் யார்? அந்தப் பெருமானின் திருவருளால் தீராத வினைகளெல்லாம் தீருகின்றன. ஆலயத் திருப்பணி வேலைகள் செய்ய தொடங்கியாகி விட்டது. பக்தர்களின் ஆதரவு வேண்டுகிறோம்.

இப்படிக்கு

டாக்டர் **வி. கே. ரெங்கநாதன்,** M. B. B. S., D. M. R. தலைவர்

மணியார்டர், செக் அனுப்ப விரும்புவோர்:

திரு எஸ். வேங்கடராமன், பி. ஏ. பி. எல்., பொருளாளர்

குணசீலப் பெருமாள் திருப்பணிக் குழு, இரட்டை மால் தெரு, திருச்சி-2 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

ஆலயத் திருப்பணி நிதிக்காக சொல்லின் செல்வி திருமதி **சிவானந்த விஜயலக்ஷ்மி** அவர்களால் பஹுஸ்வேணி ராமாயணம் 23-5-68 முதல் 9-6-68 வரை திருச்சி ஆண்டார் வீதி, நேஷனல் ஹைஸ்கூல் மைதானத்தில் இரவு 7 மணி முதல் 10 மணி வரை நடைபெறும்.

காரியதரிசிகள்

கே. வி. ரங்கநாதன்

ஏ. முத்துகுமரன்

தாகம் தணிய, களைப்பு நீங்க

இனிய பானம்

ஜீலா-கோலா



வின்ஸென்டின்

நவீன பானம்

ஜில்லிட்டு அருந்துங்கள்

VC-104*A

ஆனால் அவன், ''குயிலி, பசிக்குது'' என்றவுடனே, ''ஐயோடி!'' என்றான்.

''அடே! ஆபத்திலே சிக்கினவங்களுக்கு எல்லாம் அரண்மனையிலே கஞ்சி காய்ச்சி ஊத்தறாங்களாம். அங்கே போவே!'' என்றான் சின்னத்தம்பி.

''கஞ்சியா! பாலில்லே குடிக்கச் சொன்னாரு!'' என்றான் முந்திரி.

''அடே, சீ! பாலு குடிக்க இவரு பட்டத்து ராசா மகன்'' என்று அவன் தலையில் தட்டப் போனான் சின்னத்தம்பி. அந்த அடி குயிலியின் கையில் பட்டது. ஆம். அவசரமாக அவள் அதைத் தடுத்தாள்.

''பாவம், செத்துப் புழச்சிருக்கான், பாலே குடுப்போமாடா'' என்றாள் குயிலி.

இதைப் பார்த்த முந்திரிக் கொட்டையின் கண்களில் நீர் அரும்பியது. ''குயிலி, முதலிலே நாம எல்லோரும் அரண்மனைக்குப் போயி கஞ்சியை குடிச்சிட்டுப் பிறகு பாலு குடிக்கலாம் வா, நீயும்!'' என்றான் சட்டாம்பிள்ளை.

''அரண்மனைக்குள்ள குயிலி நுழையவே நான் சம்மதிக்க மாட்டேன். அங்கே பொம்புளைங்களே போகக் கூடாது'' என்றான் சின்னத் தம்பி.

''அடே, தர்மராச்சியமடா! அப்படிச் சொல்லாதே! பெண்களே, பெத்த தாயாரா எண்ணுகிற சிவாஜி மகாராஜா மகன்களடா, நம்ம ராசாக்கள்'' என்றான் சட்டாம்பிள்ளை.

''சரிதானடா! ராசா நல்லவருதான். அங்கே இருக்கிற கூசாக்கள் என்ன செய்வாங்களோ?'' என்றான் சின்னத் தம்பி. குயிலி சிரித்தாள்.

''கூசா! இப்ப ஒரு கூசா இருந்தா அதுலே பால் வாங்கியாந்துடலாம். அரண்மனை வைத்தியரையே கொண்டாந்துட்டேன். அரைப்படி பாலா கிடைக்காது!'' என்று சொல்லிவிட்டுக் குயிலி விரைந்து நடந்தாள்.

தெருவெங்கும் கூட்டம் கூட்டமாகக் கஷ்டத்துக்கு உள்ளான மக்கள் அரண்மனையில் தரப்படுகின்ற உதவி பணங்களை அடைவதற்காகப் போய்க்கொண்டிருந்தார்கள். குயிலி அவர்களைப் பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டே ஓர் இரண்டடுக்கு மெத்தை வீட்டின் அருகில் வந்தாள். அப்போது அவள் கையை யாரோ பலமாகப் பற்றினர்.

''அடே, சே! விடு!'' என்று கத்தினாள் குயிலி.

ஆனால் பிடித்த கை விடவில்லை. ''வா, உனக்கு வேண்டிய பணம் தருகிறேன்'' என்று கையைப் பிடித்து இழுத்தார் சித்திரக்கார ரங்கமன்னார்.

குயிலி திடுக்கிட்டாள். பசியாக இருந்த முந்திரிக் கொட்டையைக் காட்டிலும் அவர் கண்களில் வேறு ஏதோ பசி அதிகம் இருந்தது. ''என்னை யாருன்னு நினைச்சுட்டீங்க? விடு ஐயா கையை!'' என்று அவரை அறியாதவள் போல் பேசி அவரது பிடியிலிருந்து திமிறினாள்.

''உன்னையா எனக்குத் தெரியாது! உன் முகம்தான் என் கண்முன்னாலே நிக்குதே! வா, உள்ளே!'' என்று விடாப்பிடியாக அவர் இழுத்தார்.

''என்ன? என் முகம் உன் கண் முன்னாலே நிக்குதா? பார்க்கிற பார்வையைப் பாரு! என் முகம் நிற்கிறது சரி. முதல்ல உன் முகத்தை ஒருவாட்டிக் கண்ணாடியிலே பார்த்துக்க. ஏனையா, வயசான காலத்திலே இந்த புத்தி?.....!'' என்று ஆவேசத்துடன் இரைந்தாள் குயிலி.


அவருடைய கண்கள் தன்னையே மேலும் மோகமாக நோட்டம் போடுவதைக் கண்ட அவளுக்கு மேலும் ஆத்திரம் ஏற்பட்டது.

''என்னை விடுகிறீங்களா? இல்லே, நான் கத்தவா?''

''கத்து, கத்தினா விட்டுவிடுவேனா? வா. உள்ளே!'' என்று அவள் கையைத் தரதரவென்று பிடித்து இழுத்தார்.

''இழு அய்யா, இழு. இந்த ஊரிலே தான் கேள்வி கேட்பார் இல்லையே! கிழவனும் ஆசைப்படறான், குமரனும் ஆசைப்படறான்'' என்று அவள் சொல்லச் சொல்ல அவர் விடாமல் அவளைத் தம் வீட்டுக்குள் இழுத்துப் போய்க்

படிக்க முடிகிறதா, பாருங்கள்!



முடியவில்லையா? புரட்டுங்கள் 75ம் பக்கத்தை!

கதவைப் படாரென்று சாத்தித் தாளிட்டார். குயிலி 'ஐயோ! ஐயோ!' என்று கதறினுள்.

''ஏய், ரகுமாயி!'' என்ருர் அவர். ஓர் அழகான பெண் வந்து நின்ருள்.

''இவள் எவ்வளவு அலறினுலும் விடாதே. இவள் தலையைச் சீவிப் புதுப் புடவை, ரவிக்கை எல்லாம் இவ அழகுக்கு ஏத்தபடி எடுத்துக் கட்டு. ஒரு தாலி தயார் செய்'' என்று படபடப்பாக மொழிந்து, பக்கத்து அறைக்குள் சென்ருர்.

''ஐயோ! தாலியா?'' என்று அலறினுள் குயிலி. ''ஐயா, உன் வயசென்ன? என் வயசென்ன? ஏன்யா உனக்குக் கடைசிக் காலத்திலே இந்த ஆசை!'' என்று அவர் போகும் திசையைப் பார்த்துக் கதறினுள். அந்தப் பெண்ணைப் பார்த்து, ''அம்மா, நீயும் பொம்பளே, நானும் பொம்பளே. நேத்து ராத்திரி என்னேப் பேய் தூக்க வந்தது. அதன் கைகள்லிருந்து தப்பினேன். இப்ப பெண்ணே பெண்ணைக் கெடுக்க வரலாமா? என்னே விட்டுவிடு!'' என்று கதறினுள்.

''அதெல்லாம் விட முடியாது. அந்த மனுசன் கண் மூடாமெ உன் நினேவாவே இருக்காரு. உன்னைத் தேடிக்கிட்டே இருக்காரு.''

''அப்படியா? நீங்க அவர் மகளா?''

''ஏன், நான் அவர் பெண்சாதி.''

''பெண்சாதியா? இதுலே பெண்சாதிகூடப் புருஷனுக்கு உடந்தையா?''

''ஏன் இருக்கக் கூடாது? அவர் புகழிலே எனக்கும் பங்கு உண்டு.''

''புகழா? இது புகழா?''

''வேறு என்ன? அவருடைய கீர்த்தி என் கீர்த்தி. அவர் சித்திரம், நான் வர்ணம். அவர் பூ, நான் மணம். இதோ பார். உன்னே ஒரு நாள்தானே அவர் பார்த்தார்? அந்த நினேவில் அவர் பட்டிருக்கும் பாட்டைப் பார்!'' என்று ஒரு திரைச் சீலையை விலக்கினுள் அந்த மங்கை. அங்கு குயிலி கண்ட காட்சி அவளைத் திடுக்கிட வைத்தது. எதிர்ச் சுவரில் பொருத்தப்பட்டிருந்த எண்ணெய்ச் சீலையின் மீது குயிலியின் மூக்கு, கண், காது, வாய், எல்லாம் தனித் தனியாக ஓவியம் வரையப்பட்டிருந்தன. அதன் நடுவே இலேசான முக ஜாடையோடு அவள் முகமும் தெரிந்தது.

''பார்த்தியா! ஒரு நாள் பார்த்த பார்வையிலே அவரை என்ன பாடு படுத்தியிருக்கே பாரு. அடி, அவர் என்னேக்கூட இப்படி அல்லும் பகலும் நினைத்துக் கொண்டிருந்ததில்லேடி!'' என்ருள் அந்த அம்மாள்.

குயிலி கடகடவென்று சிரித்தாள். ஓயாமல் சிரித்தாள். கண்களில் இருந்து நீர் வரும்வரை சிரித்தாள். ''நான் நினைத்தது ஒன்று இங்கு நடப்பது வேருக இருக்கிறதே! நான் காமப் பித்தன் என்று நினைத்தேன். இவர் கலேப் பித்தருக இருக்கிருரே?'' என்று சிரித்தாள்.

''அவர் குணமே அப்படித்தான். அவர் பொம்புளேயையும் அப்படித் தான் பார்ப்பார், புளிய மரத்தையும் அப்படித்தான் ஆராய்ந்து பார்ப்பார்'' என்று சொல்லிக் கொண்டே குயிலியைக் கிணற்றடிக்கு அழைத்துச்சென்று அவளுடைய தலையிலிருந்த சிக்குகளே யெல்லாம் நன்ருக வாரிப் பரிமளத் தைலம் ஒன்றை இட்டு நல்ல சீயக்காயையும், தஞ்சாவூர் வாசனைப் பொடியையும் கலந்து சுடச் சுட வெந்நீரில் நீராட்டினுள் அந்த மாதரசி.

அவளைத் தன் அறைக்கு அழைத்துச் சென்று பூஞ்சவுக்கத்தால் அவள் மேனியைத் துவட்டி, மெல்லிய மஞ்சள் நிறப் பட்டுச் சேலே ஒன்றைத் தன் கையாலேயே அவளுக்குக் கட்டி விட்டு அதற்கு ஏற்ற ரவிக்கை ஒன்றையும் இட்டாள்.

அவளது கருண்ட கேசங்கள் சீப்பினுல் நன்கு வாரப்பட்டவுடன் படிப் படியாக அலே வீசும் கருங்கடல் போல் கிடந்தது. அவளது கண்களுக்கு ஏற்ற நிறத்தில் அஞ்சன மை தீட்டினுள். உதட்டில் இலேசான சிவப்புச் சாயத்தைப் பூசினுள். அவளுடைய புருவத்தில் ஏதோ ஒரு வாசனைக் குழம்பைத் தடவிச் சுத்தம் செய்து புருவம் திருத்தினுள். முகத்தில் ஒரு திலகம் இட்டாள். அவளது முழங்கைக்கு மேலும் மணிக்கட்டுகளிலும் அடுக்கு மல்லிகை மலர்ப் பட்டிகளே வைத்து அழகாகக் கட்டினுள். வன தேவதை போன்ற வனப்புடன் நின்ருள் குயிலி.

திருமாங்கல்யத்தை இடப் போகும் போது, குயிலி, ''அம்மா, அது மட்டும் வேண்டாம்!'' என்ருள்.


''ஏனம்மா?''

''நாங்க அதைக் கட்டப்படாது. நாங்க கோவிலுக்குத்தான் கட்டுவோம்!''

''அப்படியானுல் நீ....நீ...'' என்று இழுத்தாள் ரகுமாயி.

''ஆமா, சின்ன மேளம் நாங்க!'' இதைச் சொல்லும்போது குயிலியின் கண்கள் நீரைக் கக்கின.

ரகுமாயி வேகமாக நடந்து பக்கத்து அறையிலிருக்கும் தன் கணவரின் காதில் கேட்கும்படி ''இந்தாங்க, அவ சின்ன மேளக்காரியாம்'' என்று கூவினுள்.


Exide
Exide

''சரி, பின்னென்ன? மேளமும் இருக்கிறது? கட்டு, கழுத்திலே!'' என்று கூறிக் கொண்டே வெளியே வந்தார் சித்திரக்காரர்.

குயிலி, ''அது மட்டும் முடியவே முடியாதுங்க!'' என்றாள்.

''சரி, பின்னே வற்புறுத்தாதே! நாமே எழுதிடுவோம்!''

''நீங்க எழுதலாமுங்க. ஆனால் எங்களைப் படைச்சவன் அப்படி எங்க தலையிலே எழுதலே'' என்று குயிலி இணைறினள். அவள் மூச்சுக் கொதித்தது. அவளைக் கணவனும் மனைவியும் சித்திரச் சாலைக்கு அழைத்துச் சென்றார்கள்.

குயிலி முன்னே நடந்தாள். அவள் சித்திரசாலையின் உள்ளே நுழைந்தவுடன் பொன்னிறமான சித்திர வேலைப்பாடு செய்த தேக்கு மரச் சட்டத்தின் இடையில் ஒரு அழகிய சித்திரம் நின்று அவளை வரவேற்றது. குயிலி அதைப் பார்த்துப் பிரமித்து நின்றாள். உலகத்தில் உள்ள அழகெல்லாம் அந்தச் சித்திரத்தின் முன் சேவை செய்யக் காத்திருந்தன. அதன் கண்கள் இரண்டும் நீலக் குமுத மலர் போல் விளங்கின. அதன் முகத்தில் முத்துப் பதித்தது போல் முறுவல் தோன்றியது. வாலிபமும், செல்விழியும் விற்புருவமும் வளர் பிறை போன்ற எழிலும் அவள் கண்களை மயக்கின. பார்த்தாள், பார்த்தாள், பார்த்தாள்.

''எத்தனை நேரம் உன் அழகை நீயே பார்த்துக் கொண்டிருப்பாய்?'' என்றார் ஓவியர்.

''என் அழகா?'' என்று அவர் பக்கம் திரும்பினாள் குயிலி. அப்போது சித்திரமும் திரும்பவே அது சித்திரமல்ல; நிலைக் கண்ணாடியில் தெரிந்த தன் நிழலே என்று அறிந்தாள் குயிலி.

''அவர் ஆண்களில் அழகனென்றால் பெண்ணில் நானும் ஒரு அழகிதான்'' என்று உள்ளத்தில் உவகை பொங்கக் கூறிக் கொண்டாள் குயிலி.

தற்புகழ்ச்சியில் உயர்ந்த ரகம்தான் கண்ணாடி பார்ப்பது. தன்னைப் புகழ ஆள் அகப்படாத ஏழைகளுக்குக் கண்ணாடியைப் போல் கண் கண்ட தெய்வம் வேறு கிடையாது.

குயிலி அன்றுதான் முதன் முறையாக நிலைக் கண்ணாடியின் முன் நின்றாள். அவள் சந்தோஷமோ நிலைகொள்ளாமல் இருந்தது.

''பெண்ணே! உன் உடல் அழகைத்தான் என்னால் வெளியே கொண்டு வர முடியும். உன் உள்ளத்தின் அழகை நீதான் கொண்டுவர வேண்டும்'' என்றார் ரங்கமன்னார்.

குயிலி அவர் பக்கம் திரும்பி ''என்ன சொல்றீங்க?'' என்றாள்.

''ஆம். நீ ஒரு படுசுட்டி. பலே திருடி. பொய் உனக்குப் புளியோதரைமாதிரி.''

''நான் திருடியா? நானு பொய் சொல்லுகிறேன்? இந்த உலகத்திலே எங்க பொய்தான் வெளியில் தெரியுது. பணக்காரன் பொய் சொன்னு பத்துப் பேர் அமாம் போடறாங்க. அது மெய்யாயிடுது. ராசா பொய் சொன்னல் அது ராஜதந்திரம் ஆயிடுது. பாடறவர் பொய் சொன்னு அது கவிதை ஆயிடுது. பட்டிக்காட்டான் பொய் சொன்னு அது முட்டாத்தனம் ஆயிடுது. ஏழைகள் பொய் சொன்னுத்தான் அது பொய்யாகுது. ஐயா! உங்க காசைத் திருடி நாங்க ஒண்ணும் மாடி வீடு கட்டல்லே. நானு ஏழைப் பையன்களுக்குச் சோறுதான் வாங்கிட்டுப் போனேன்'' என்று கோபமாக மொழிந்தாள் குயிலி.

''சரி சரி. கொஞ்சம் முகத்தை வருத்தமா வைச்சுக்க'' என்றார் அவர்.

''என்னத்துக்குங்க? ஏன் அழணும்? நல்லாச் சிரிக்க வேண்டிய நேரத்திலே அழப்படாதுங்க! எவ்வளவு அழகா இருக்கேன் நான்'' என்று சிரித்தாள்.

அப்போது அவர் மனைவி அவருக்கு ஒரு வெள்ளிப் பாத்திரத்தில் காய்ச்சிய பாலை எடுத்துக் கொண்டு வந்தாள்.

இதைக் கண்ட குயிலி, ''ஐயோ! அட்ட முந்திரிக் கொட்டை!'' என்று கூச்சலிட்டாள். வாசலுக்கு ஓடினாள். உடனே அவர் மனைவி அவளைப் பிடித்து நிறுத்தினாள். குயிலி குமுறிக் குமுறி அழுது கொண்டிருந்தாள். (தொடரும்)

> அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
> பகவன் முதற்றே உலகு
>
> ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
> வாரி வளங் குன்றிக்கால்
>
> ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
> சான்றோன் எனக் கேட்ட தாய்
>
> என்ன யோசிக்கிறீர்கள்? 71ம் பக்கத்தில் உள்ளவை திருக்குறள்தானு என்று தானே? சந்தேகமே யில்லை. திருக்குறளே தான். அவை எழுதப்பட்டுள்ள எழுத்துகளும் தமிழ் எழுத்துக்கள்தான். ஆனல் சீர்திருத்த எழுத்துக்கள். புலவர் குழந்தை அந்த எழுத்துக்களை உருவாக்கிப் புத்தகமும் போட்டிருக்கிறார். இத்தகைய எழுத்துச்சீர்திருத்தம் தேவைதானு என்பதை நீங்களே முடிவு செய்யுங்கள்.


கவலைக்கிடமற்று அழுகும் பாலவயதை [illegible] குயிலியின் சோகமான முகபாவத்தை முன் மாதிரியாகக் கொண்டு ரங்கமன்னார் [illegible] ஓவியம் தீட்டும் காட்சியை இவ்விதம் அட்டைப்படமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் திரு [illegible].

அந்த ஊருக்கு மாற்றலாகி வந்த புதிது வேறு. எது கிழக்கு, எது மேற்கு என்று புரியாத நிலையில் பாஷை வேறு புரியாத தகராறு. கடைக்குச் சாமான் வாங்கச் சென்றால் உப்பையும், புளியையும், கரியையும்கூட மாதிரிக்கு எடுத்துப் போய்க் காட்டிச் சாமான் வாங்கவேண்டிய நிலை.

இந்த நிலையில்தான் என் நண்பன் ஒருவனைப் பற்றிய செய்தி எனக்கு எட்டியது.

குணசேகர் இந்த ஊரிலேயே பெரிய புள்ளியாம்! பின்னென்ன மேலும், பெருமிதமும், மகிழ்ச்சியும் இதயத்தை நிரப்ப, ''என் குணசேகர்....அவனா.... அவனா?'' — என்கிற மலைப்பும் என்னுள் எழாமல் இல்லை.





குணசேகரின் நினைவு வந்ததும் பத்மாவின் நினைவும் கூடவே வந்தது எனக்கு.

கல்லூரியில் நானும், குணசேகரும் இணை பிரியா நண்பர்கள். ஹாஸ்டலில்கூட ஒரே அறைதான் எங்களுக்கு. 'ஒரே படுக்கையில் படுத்து, ஒரே தட்டில் உண்டு' என்பார்களே அந்த மாதிரி இணை பிரியாமல் சேர்ந்திருந்தோம் நாங்கள்.

நாங்கள் அதாவது 'குணசேகர் ட்ரூப்' என்று ஒரு கும்பல் உண்டு. ஹாஸ்டலே அரண்டுவிடும். கலாட்டாவுக்குப் பெயர் போனவர்கள் நாங்கள்!

பூரி, சப்பாத்தி என்று 'காண்டீனில்' போட்டுவிட்டால் அவ்வளவுதான். எங்களைச் சரிக்கட்டி அனுப்புவதற்குள் சமையற்காரர்கள் தவித்து விடுவார்கள்.

கூடை கூடையாய்க் குவித்து வைத்திருக்கும் பூரி எங்களுக்கு ஒரு 'ரவுண்டு'க்குத்தான் வரும்!

இந்தப் பொற்காலத்தில்தான் பத்மா எங்களிடையே திடீரெனத் தோன்றினாள். அவள் அந்தக் கல்லூரியில் சேர்ந்த அன்று கல்லூரியே தலைகீழாய் மாறி இருந்தது.

மிகத் துணிவுடன் எங்கள் கல்லூரியில் சேர்ந்த ஒரே ஒரு மாணவி அவள்தான்.

அவள் கல்லூரிக்குள் நுழையும்போதே, ''ராணி மகாராணி'' என்கிற கிண்டல் பாடல்களும், ''நிலைத் தேன் வந்தாய். நூறு வயது'' என்கிற பாடல்களும் மூலைக்கு மூலை எதிரொலிக்கும். அவள் பதற்றப்படாமல் நிதானமாய் நடந்து கொண்டதுதான் அனைவருக்கும் வியப்பு. இதில் எல்லாவற்றையும்விட இன்னுமொரு வியப்பு என்னவென்றால் குணசேகர் அடியோடு மாறியதுதான்!

அவன் கும்மாளமும், குதியாட்டமும், அட்டகாசப் பேச்சுக்களும், அடக்குமுறைத் திட்டங்களும் சட்டென எப்படியோ அடங்கிப் போய் விட்டன.

ரொம்பச் சாதுவாக, பரமசாதுவாக அவன் மாறி விட்டான். பத்மா எல்லோருடனும் சகஜமாகப் பழகினாள். திடீரென்று எக்காரணத்தாலோ தன் படிப்பை இடையில் நிறுத்திவிட்ட குணசேகர் 'டெலிபோன் எக்ஸ்சேஞ்சி'ல் வேலைக்கு அமர்ந்தான்.

பிறகு அவனைப் பற்றி ஒரு சேதியும் இல்லை. அதற்குள் எத்தனை எத்தனையோ மாறுதல்கள்.

என் படிப்பும் முடிந்தது. திருமணமும் ஆயிற்று. அதெல்லாம் பழங்கதை. இன்று....என் உயிர் நண்பன் அந்தக் குணசேகரா இந்த ஊரின் பெரிய புள்ளி?

ஆபீஸ் சென்றதும் முதல் காரியமாய் அவனுக்கு 'போன்' செய்தேன். 'போனில்' அவன் பேசவில்லை. யாரோ அவன் 'பி.ஏ.' வாம்! நான் என் பெயரைச் சொல்லி என் நண்பனிடம் நானே நேரில் பேச விரும்புவதாய்ச் சொன்னேன். ''பாஸ் பிஸியாய் இருக்கிறார் ஸார். என்னிடமே விவரம் சொல்லச் சொன்னார். என்ன விஷயம்?'' என்றான் அவன். எனக்கு வந்ததே எரிச்சல்!

பெரிய மனிதனாகி விட்டானல்லவா? 'போனிற்' பேசக்கூட முடியவில்லை! நண்பர்கள், நட்பு என்பதெல்லாம் வெறும் கட்டுக்கதை. படிக்கத்தான் இனிக்கும். நடப்பு வேறுவிதமாக அல்லவோ இருக்கிறது! அந்தஸ்து வந்ததும் அத்தனையும் மறந்து விடுகிறது!

வந்த கோபத்தில் அந்த 'பர்சனல் அஸிஸ்டென்டிடம் 'பட பட'வெனப் பொரிந்து தள்ளி விட்டேன்! குணசேகருக்கும், எனக்கும் இருந்த கல்லூரி நட்பிலிருந்து ஆரம்பித்து எங்கள் இணை பிரியாத் தோழ

மையைப் பற்றிக் கூறி, ''போய்.... உனக்குத்தான் அவன் பாஸ். எனக்கு அதே பழைய நண்பன்தான். சொல் அவனிடம்'' என்று கூறி 'ரிஸீவரை' 'பட்'டென வைத்தேன். கோபத்தில் கத்தியது மனத்துக்குச் சற்று இதமாக, பாரம் இறக்கி வைத்த நிம்மதியாக இருந்தது.

அதே பொருமலுடன்தான் வீடு திரும்பினேன். என் முகவாட்டத்தைக் கவனித்த என் மனைவி பத்மா, ''ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்?'' என்றாள்.

யாரிடமாவது சொல்லி அழுதால் தேவலை போலிருந்தது. தவிர குணசேகரைப் பற்றிப் பத்மா ஏற்கனவே கல்லூரியில் அறிந்தவள் தானே! எல்லாவற்றையும் கூறி முடித்தான்....

''பத்மா.... அவனுக்குப் பெரிய அந்தஸ்து வந்திருக்கிறதாம். அந்தஸ்து... போனில் பேசக்கூட மறுத்து விட்டான். நாளைக்கொரு காலம் வரும். அவன் வந்தால்... என்னைத் தேடி வந்தால் நான் வீட்டில் இருந்து கொண்டே பெரிய மனுஷத்தனமாய், இல்லை என்று சொல்லி அனுப்புவேன். தெரியுமா?'' என்று இரைந்தேன்.

என் நெற்றியின் வியர்வைத் துளிகளைத் தன்னுடைய புடவைத் தலைப்பால் ஒத்தி எடுத்தாள் பத்மா.

''இதற்கா இத்தனை வேதனைப்படுகிறீர்கள்? விடுங்கள்'' என்று அவள் சொல்வதற்குள் வாசலில் கார் ஹார்ன் சத்தம் பலமாக ஒலித்தது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்த பத்மா பரபரப்புடன் ''அவர்... உங்கள் நண்பர் குணசேகர்....'' என்று குழறினாள்.

என் மனம் வெறி கொண்டு ஆடியது.

ஆஹா! நல்ல சந்தர்ப்பம்...

''நான் அவனைப் பார்க்க முடியாது என்று போய்ச் சொல்'' என்று அவளுக்குக் கட்டளையிட்டேன்.

''நானா?'' — அவள் தயங்கினாள்.

''உம்...உம்'' — அவளைப் பலவந்தமாக வாசலுக்குத் துரத்தினேன்.

காரின் கதவுகள் திறந்து சாத்தப்படும் ஒலி. என் நெஞ்சு திக் திக் கென்று அடித்துக் கொண்டது. என்னைப் பற்றி அவன் என்ன நினைப்பான்?

பத்மாவின் குரல் தெளிவாக ஒலித்தது.

அவனும் ஏதோ பேசினான்.

எனக்கு உள்ளே இருப்புக் கொள்ளவில்லை. இரைந்து பேசித் தொலைத்திருக்கக் கூடாதா? ஒன்றுமே புரியவில்லையே!

சற்று நேரத்துக்கெல்லாம் கார் கிளம்பும் ஒலி கேட்டது.

பத்மா என்ன சொல்லியிருப்பாள்?

நான் அவனைப் பார்க்க முடியாது என்று சொல்லச் சொன்னதைச் சொல்ல முடியாமல் நான் வீட்டிலேயே இல்லை என்று சொல்லியிருப்பாளோ?

வீட்டின் கதவுகள் திறந்தன. பத்மாவின் கண்கள் கலங்கியிருந்தன.

''என்ன பத்மா... அவன் ஏன் போய் விட்டான்?''

அவள் அழுது கொண்டே என் மார்பில் முகம் புதைத்தாள்.

அருமை நண்பன்

விமலா ரமணி



"ஏன், ஏன்? என்னவாயிற்று?"

பத்மா கூறினாள்: "உங்களிடம் மன்னிப்புக் கேட்க வந்தாராம் உங்கள் நண்பர். ஆபீஸ் நேரத்தில் போனில் பேசவில்லையாம்."

நான் குறுக்கிட்டேன்.

"மண்ணாங்கட்டி! அந்தஸ்து வந்ததில் அறிவு மழுங்கி யிருக்கிறது. சொல், சொல்."

"அவசரப்படாதீர்கள். 'டெலிபோன் எக்ஸ்சேஞ்சில்' இராப் பகலாய் வேலை செய்ததின் விளைவாகக் காது செவிடாகி விட்டதாம்! ஏதோ தூரத்து உறவினரின் சொத்து இவருக்குத் தற்செயலாய் வரவே வியாபாரத்தில் இறங்கி யிருக்கிறார். அதிர்ஷ்டமும் இவர் பக்கம் இருக்கவே பணம் கொட்டுகிறது. ஆனால் என்ன இருந்தென்ன? காது கேட்க முடியாத நிலை! அவர் ஒரு செவிடர்! தம் குறையைப் பகிரங்கப்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே அவர் நியமித்துக் கொண்ட 'பி.ஏ' தான் 'போன் கால்களை' 'அட்டெண்ட்' செய்கிறாராம். தம் குறையைக் கூறி உங்களிடம் மன்னிப்புக் கேட்கத்தான் வந்தாராம். அவர் அன்று பேச மறுத்தது உங்களை அவமதிக்க அல்ல. தம் குறையை எடுத்த எடுப்பிலேயே விளம்பரப்படுத்திக் கொள்ள விருப்பமில்லாததினால்தான்..."

பத்மா முடித்தபோது என் கண்களும் பனித்திருந்தன. "நான் ரொம்பக் கொடியவன் பத்மா. நண்பனின் அன்பு உள்ளம் தெரியாமல் அவனைக் கொடுமைப்படுத்தி விட்டேன். இத்தனையும் கேட்டும் அவனை ஏன் திருப்பி அனுப்பினாய்? உள்ளே அழைத்து வந்திருக்கக் கூடாதா?"

அவள் என் கன்னத்தில் இலேசாகத் தட்டிவிட்டுச் சிரித்தாள். "ஆளைப் பார் ஆளை. நீங்கள் சொன்னபடியெல்லாம் ஆட வேண்டுமா? நீங்கள் வீட்டில் இல்லை என்று தான் அவரிடம் சொன்னேன் தெரியுமா?"

"கள்ளி... சரி, சரி. முதல் காரியமாக அவனிடம் போய் மன்னிப்புக் கேட்டு வருகிறேன். ஊனமுள்ளவன் அவன் அல்ல; நான் தான். இந்த உறுத்தல் என்னைப் பைத்தியமாக்கிவிடும்."

"என் ராஜா!" என்றாள் பத்மா. பிறகு என்னையே ஒரு கணம் உற்றுப் பார்த்தாள்.

"உண்மையில் உங்களை அடைந்த நான் அதிர்ஷ்டசாலி." — அவள் பேச்சு எனக்கு அதிசயமாக இருந்தது. இதென்ன புதிய பாராட்டுரை?

நண்பனை உடன் சந்திக்க வேண்டும் என்கிற அவசரத்தில் இது பற்றி யோசிக்க அவகாசமில்லை எனக்கு.

அந்தப் பிரும்மாண்டமான பங்களாவுக்குள் நுழையும்போதே கூசிக் குறுகினேன்.

என்னைவிடப் பன்மடங்கு உயர்ந்த நண்பனைப் பற்றியதோர் உயரிய கற்பனை, குசேலர் பகவான் கிருஷ்ணனைச் சந்திக்கச் சென்ற கதையின் நினைவு.... எல்லாவற்றுக்கும் மேலாக அவன் ஊனமுள்ளவன். ஆயிரம் அதிர்ஷ்டம் இருந்தாலும் இயற்கையின் படைப்பில் குறையுள்ளவன்—இப்படிப்பட்ட விசித்திரத் திருப்தி ஒன்றும் இதயத்தில் எழாமல் இல்லை.

வெளியில் யாரையும் காணவில்லை. தைரியமாக உள்ளே நுழைந்தேன்.

உள்ளே....?

குணசேகர்தான் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். என் பெயரும் அடிபடவே மனிதனுக்கே உண்டான உணர்ச்சியுடன் நான் நிதானித்தேன்.

"உண்மைதான்... அவன் என் உயிர் நண்பன்தான். யாரோ போனில் பேசுகிறார்கள் என்கிற அலட்சியத்தில்தான் நான் முதலில் பேச மறுத்தேன். ஆனால் உண்மை தெரிந்ததும் எப்படியோ விலாசம் அறிந்து அவன் வீடு தேடி ஓடினேன். அங்கே....அங்கே என் பத்மாவைச் சந்திப்பேன் என்று கனவிலும் கருதவில்லை நான்! நான் அந்த நிலைக்கு வரக் காரணமே அவள்தான்! அவளை என் உயிருக்குயிராய்க் காதலித்தேன். என் அன்பு நண்பனுக்குக் கூடச் சொல்லாமல் எங்கள் சந்திப்புக்கள் நிகழ்ந்தன. அப்போதெல்லாம் அவள் ஒன்றுதான் சொல்லுவாள். 'உங்கள் சேஷ்டைகளையும், வால்தனங்களையும் குறைத்துக்கொண்டு என்று நீங்கள் ஒழுக்கமுள்ள மாணவராக, பொறுப்புள்ள மனிதராக மாறுகிறீர்களோ அன்றுதான் பத்மாவைப் பற்றி நீங்கள் நினைக்கலாம்' என்பாள். இந்த வாக்கியங்கள் என்னை மனிதனாக்கின. கல்லூரிப் படிப்பை மேலே தொடர முடியாமல் சோதனைகள் நேர்ந்தபோதுகூட நான் கலங்கவில்லை. பெரிய மனிதனாகி, குறையற்ற முழுமையானவனாக மாறி, நான் பத்மாவைத் தேடியபோது அவளுக்கு மணமாகிவிட்டதென்றார்கள். காலப் போக்குக்கு ஈடு கொடுத்துப் பெண்களால் எத்தனை வருடங்கள் காத்திருக்க முடியும்? ஆனால்.... ஆனால் பத்மாவைச் சற்று முன் என் உயிர் நண்பனின் மனைவியாகச் சந்தித்த அதே நேரம், என்னுடைய பெரிய அந்தக் காரையும், பகட்டான என் ஆடைகளையும் கண்டு அவள் விழிகளில் பொங்கிய அந்தச் சலனம், அந்த முகத்திலே படிந்துவிட்ட இமர்க் கடுமை — என்னைச் சிந்திக்க வைத்தன. அவர்களின் அன்பு இல்லறத்தில் என்னால் புயல் எழலாமா? என் நிறைவையும், என் நண்பனின் குறைவையும் அந்தப் பெண் உள்ளம் ஒப்பிட்டுப் பார்த்துப் பெருமூச்சு விடலாமா? ஒரே நொடிக்குள் நான் முடிவு செய்தேன். என்னைச் செவிடனாக்கிக்கொண்டேன். என்னதான் பெண்கள் அழகுக்கும், ஆடம்பரத்துக்கும் அடிபணிந்தாலும் குறையுள்ளவனை, ஊனமுள்ளவனைக் கனவில்கூட எண்ணிப் பார்க்க மாட்டார்கள். என்றாவது ஒரு நாள் என் நண்பனைச் சந்திப்பேன். அப்போது எங்கள் மனப் பாரம் தீர நாங்கள் கட்டிப் புரள்வோம். அழுவோம்; சிரிப்போம் — இந்த இனிக்கும் உறவையெல்லாம் எண்ணிப் பார்க்கும்போது நான் செவிடனாகி வாழ்வது பெருங் குறையாக எனக்குத் தோன்றவில்லை..." இன்னும் குணசேகர் ஏதேதோ பேசிக் கொண்டே யிருந்தான். நான் செயலிழந்து, உணர்விழந்து, செய்யும் திறனிழந்து, நட்பின் இலக்கணத்தின் கர்ப்பக்கிருகமாய்க் கோயில் கொண்ட என் அன்பு நண்பனின் திசை நோக்கிக் கற்சிலையாய், காவல் பதுமையாய் நின்றிருந்தேன்.

"சுட்டுவிடு!"

இரவு மணி எட்டிருக்கும். படுக்கையில் வலி பொறுக்க மாட்டாமல், ''அப்பா, அம்மா!' என்று முனகிக் கொண்டிருந்தவன் குரல் கொடுத்தான்: ''தம்பி!''

''என்ன, அண்ணு? ஏதாவது வேண்டுமா?'' என்று கேட்டுக் கொண்டே அருகில் வந்தான் தம்பி.

''உன் கைத்துப்பாக்கியைத் தயாராக எடுத்து வைத்துக் கொள்!''

''எதற்காக, அண்ணு?''

''எனக்கு வைத்தியம் பார்க்கும் டாக்டர் நாளைக் காலையில் வந்தால் உள்ளே விட்டு விடக் கூடாது. மீறி அவர் உள்ளே வந்தால் சிறிதும் முன்பின் யோசியாமல் பட்டென்று சுட்டுத் தள்ளிவிட வேண்டும்!''

''என்ன அண்ணு இது? அவர் ரொம்பவும் நல்லவர் அண்ணு! அவரை எதற்காகச் சுட வேண்டும்?''

''நான் வயலில் இறங்கிக் களப்பை பிடித்து உழுதபோது காலில் கொழு ஏறிச் சீழ்பிடித்து விட்டதே, தெரியும் அல்லவா?''

''தெரியாதா? அதனால்தானே நீ ஒரு மாதமாக எழுந்து நடமாட முடியாமல் படுத்த படுக்கையாகக் கிடக்கிறாய்?''

தனக்கு எல்லாம் தெரியும் என்பதைக் காட்டிக் கொண்டான் தம்பி.

''இத்தனை மருந்து வைத்துக் கட்டியும் குணமாகாததால் புரையோடியிருக்குமோ என்று டாக்டர் சந்தேகப்படுகிறார். கணுக்கால்வரை வெட்டி எடுத்துவிட வேண்டியிருக்கும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தார். நாளைக் காலைக்குள் காயம் தானாக உடையாவிட்டால் எனக்கு ஆபரேஷன் செய்யப் போகிறாராம்!''

''எப்படியாவது குணப்படுத்தினால் நல்லது தானே? எத்தனை நாட்கள்தான் இப்படிப் படுத்த படுக்கையாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பாய்? என்னைக் கேட்டால் டாக்டர் நமக்கு நல்லதுதான் செய்கிறார் என்பேன்'' என்றான் தம்பி.

''முடமாக, ஒன்றுக்கும் உதவாதவனாக இந்த உலகத்தில் வாழ்வதைக் காட்டிலும் செத்துவிடுவதே மேல்!''

''அசட்டுப் பிசட்டு என்று பேசாதே!''

''நான் ஒன்றும் அப்படி அசட்டுக் காரியம் செய்கிறவன் அல்ல. மனிதனால் குணப்படுத்த முடியாத நோயை உண்மையான மனத்தோடு வேண்டி நின்றால் ஆண்டவன் குணப்படுத்தி விடுவான் என்று அம்மா சொல்வாளே, அதையேதான் இன்று இரவு முழுவதும் நான் செய்யப் போகிறேன். நீயும் எனக்காகப் பிரார்த்தனை செய்! அதோடு டாக்டர் ஆபரேஷனுக்கு வந்தால் யோசிக்காதே. பட்டென்று சுட்டு விடு'' என்றான் அண்ணன்.

தம்பி தன் விளையாட்டுக் கைத்துப்பாக்கியை எடுத்துக் கொண்டு அண்ணன் படுத்திருந்த அறை வாசலில் போய் அமர்ந்தான். இருவரும் இரவு முழுவதும் கண் மூடவில்லை. அப்போது அவர்களுக்கு என்ன வயது, தெரியுமா? அண்ணனுக்குப் பத்து; தம்பிக்கு எட்டு. இருவரும் ஒருமைப்பட்ட உள்ளத்துடன் ஆண்டவனது சிந்தனையாகவே உட்கார்ந்திருந்தனர்.

பொழுது விடிந்தது. குறிப்பிட்ட நேரத்துக்கு ஆபரேஷனுக்கு வேண்டிய கருவிகளுடன் டாக்டர் வந்து சேர்ந்தார்.

எதிரே டாக்டர் நின்று கொண்டிருப்பதைக் கண்ட தம்பி துப்பாக்கியை உயர்த்தி, ''உள்ளே போனீர்களானால் சுட்டுவிடுவேன் சுட்டு!'' என்று மிரட்டினான்.

''என்னடா இது?'' என்று அதட்டினார் தந்தை.

''அண்ணுவின் உத்தரவு. அவருக்கு ஆபரேஷன் வேண்டாமாம்.''

''அவன் சொல்ல யாரடா?'' என்று கேட்டுக் கொண்டே டாக்டர் உள்ளே போக முயன்றார்.

''டாக்டர்! ஓரடி முன் நகர்ந்தாலும் உங்கள் உயிர் உங்களுக்கு இல்லை!'' என்று கூறிக் குறுக்கே நின்றுவிட்டான் தம்பி.

விளையாட்டுத் துப்பாக்கியை வைத்துக் கொண்டு மிரட்டும் பையனைப் பார்த்துக் கடகடவென்று சிரித்தார் டாக்டர்.

உள்ளே படுக்கையில் படுத்திருந்த அண்ணனுக்கு உயிர் பறந்தது. தம்பி எங்கே டாக்டரைச் சுட்டுவிடுவானோ என்று! ''தம்பி! கூடாதே! நிறுத்து!'' என்று கூறிப் படுக்கையிலிருந்து ஒரே தாவாகத் தாவி அறை வாசற்படிக்கு வந்துவிட்டான்.

நேற்றுவரை எழுந்திருக்க முடியாமல் படுத்திருந்த பையன், இன்று எப்படி இவ்வளவு வேகமாக எழுந்து வந்தான்? டாக்டர் அவன் காலைப் பார்த்தார். காயம் உடைந்து சீழ் வெளியேறியிருந்ததோடு கால் வீக்கமும் சற்றுக் குறைந்திருந்தது.—ஆம், ஆண்டவன் அவன் பிரார்த்தனைக்குச் செவி சாய்த்து விட்டார். டாக்டருக்கு ஒரே ஆச்சரியம், இத்தனை நாட்களும் அவர் வைத்துக் கட்டிய மருந்துகளுக்குச் சொன்னது கேட்காத காயம் எப்படி உடைந்தது என்று!



ஐஸனேவர்

ஆண்டவன்மீது பாரத்தைப் போட்டு எந்தக் கஷ்டங்களையும் எதிர்த்து நின்று வெற்றி வாகை சூடிய அந்தப் பையன் யார், தெரியுமா? அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஐஸனேவர்தான்! — ரா. வீ.

வட்ட மேஜை





ஒரு நாள் அனுபவம்

அறிஞர் அண்ணு அவர்கள் ஸான்பிரான்ஸிஸ்கோவுக்கு விஜயம் செய்தபோது இங்குள்ள இந்தியத் தூதர் பாஜ்பாய் அவர்கள் இல்லத்தில் ஒரு வரவேற்பு உபசாரம் நடந்தது. அங்கு தமிழக முதலமைச்சரைச் சந்தித்த அமெரிக்கர், இந்தியர் அனைவரும் கூர்த்த மதியுடைய அரசியல்வாதி அவர் என்பதை நன்முக உணர்ந்து கொண்டார்கள். கேள்விகளுக்கு அவர் மிக லாகவமாக, சாமர்த்தியத்துடன் பதில் அளித்தார். இதோ சில உதாரணங்கள்:

திராவிட முன்னேற்றக் கழகம்: (சிரிப்பு) மத்தியதர வருப்பினரின் கட்சி. வரி கொடுக்கும் அளவுக்கு வருமானம் உள்ள அங்கத்தினர்கள் மிக மிகக் குறைவு.

ஜனநாயகம்: இந்தியாவில் நன்கு இயங்குகிறது. மற்ற எல்லாவற்றிலும் போல் இதிலும் முன்னேற வேண்டியதிருக்கிறது என்ருலும் உதவாக்கரையான ஒரு கட்சியை ஆட்சியிலிருந்து விலக்கி விடும் சக்தி தங்களுக்கு இருப்பதை மக்கள் நன்கு உணர்ந்திருக்கிருர்கள்.

ஐந்தாண்டுத் திட்டங்கள்: திட்ட நிர்வாகம் மத்திய சர்க்காரிடம் இருக்க வேண்டுமா அல்லது ராஜ்யங்களுக்கு அதிகமான பொறுப்பு இருக்க வேண்டுமா என்பது பற்றி ஏட்டளவில் எவ்வளவு வேண்டுமானுலும் வாதாடலாம். ஆனுல் நடைமுறையில் இந்தியாவின்ஐந்தாண்டுத் திட்டங்களைப்பற்றி முடிவெடுப்பது அமெரிக்காவே! (சிரிப்பு)

ராஜ்ய சர்க்கார் - மத்திய சர்க்கார்: எல்லா விஷயங்களுக்கும் மத்திய அரசினரைச் சார்ந்து நிற்க வேண்டிய நிலையில் ராஜ்ய சர்க்கார்கள் இருப்பதை அண்ணுதுரை கண்டித்தார். மத்திய அரசினருடன் நடக்கும் பேச்சு வார்த்தைகள் எல்லாவற்றிலும் அவர்கள் அனுதாபத்துடன் விஷயங்களைக் கேட்டுக் கொள்வது போல் காணப்படுகிருர்கள். இந்தக் கட்டத்தில் மொரார்ஜி பாய் தோன்றுகிருர். விஷயங்கள் மீண்டும் பழைய நிலைக்கே திரும்பி விடுகின்றன!

இணைப்பு மொழி: இணைப்பு மொழி இந்தியாவில் யாருக்கு வேண்டும்? சாமான்யமான மனிதனுக்கு அது தேவையில்லை. வர்த்தகர்கள் 'பண பாஷை'யைத்தான் பேசுகிருர்கள். யாத்திரிகர்கள் சமிக்ஞைகள்மூலமே சம்பாஷித்துக் கொண்டு க்ஷேத்திராடனம் போய் வந்து ஜமாய்த்து விடுகிருர்கள்.

ஹிந்தி: இறுமைதான் குறிக்கோள் என்ருல் ஹிந்தி தொடப்படுவதற்குக்கூட லாயக்கில்லை. தென்னகம் முழுவதன் கருத்தை அலட்சியமாக ஒதுக்கிவிட முடியாது. முன்பு தென்னக மக்களின் அபிப்பிராயம் மத்திய ஆட்சியினரிடம் திரித்துக் கூறப்பட்டு வந்தது. இப்போது மக்களின் உண்மை மனநிலையை டில்லிக்கு உணர்த்த வேண்டியது எனது கடமையாகி யிருக்கிறது.

ஆங்கிலம்: காலவரையறை இன்றித் தொடர வேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு: திட்டம் தமிழகத்தைப் பொறுத்த வரை பெரிய வெற்றி. இதனுல் மக்கள் சபையில் இரண்டு ஸ்தானங்களைத் தமிழகம் இழந்து விட்டது. (ஜனத்தொகை அடிப்படையில் ஸ்தானங்கள் நிர்ணயிக்கப்படுவதால்)

அமெரிக்கப் பத்திரிகைகளில் இந்தியாவுக்கு வருமாறு செய்யப்படும் விளம்பரங்களில் தென்னகத்துக்கு உரிய முக்கியத்துவம் தரப்படுவதில்லை என்ற விஷயத்தை அண்ணுவின் கவனத்துக்குக் கொணர்ந்தபோது இதுபற்றி மத்திய சர்க்காரிடம் நாம் ஏற்கனவே பேசியுள்ளதாகச் சொன்னுர். ஆனுல் மொரார்ஜி பாய் இதையெல்லாம் கூடியவிரைவில் மறந்துவிடும் சாமர்த்தியம் உள்ளவராக இருக்கிருரே!

அண்ணு ஆங்கிலத்தில் பேசினுர். 'தமிழில் பேசக்கூடாதா?' என்று தமிழ் நாட்டவர் ஒருவர் கேட்டபோது, ''இந்தியாவை விட்டுக் கிளம்பியதிலிருந்து ஆங்கிலத்திலேயே பேசி வருகிறேன். அதுவே பழக்கமாகி விட்டது. தமிழே எனக்கு மறந்துவிடுமோ?'' என்று கேட்டு எங்களைச் சிரிப்பில் ஆழ்த்தினுர்.

அண்ணு ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஒரே ஒரு நாள்தான் தங்கினுர். அந்த ஒரு நாள் அனுபவம் ஓர் ஆண்டுக்குப் போதும்!

பாலோ ஆல்டோ, **ஒய். டி. தாத்தாச்சாரி**
கலிபோர்னியா 11–5–68



பாண்டிச்சேரி பிரெஞ்சு ஆட்சியிலிருந்து விடுபட்டுப் பத்து வருடங்களுக்கு மேலாகியும், கடலூரிலிருந்து மூன்று மைல் தூரத்தில் – பாண்டி எல்லை ஆரம்பிக்கும் இடத்தில் 'பிரெஞ்சு எல்லை' என்ற எழுத்துக்களைத் தாங்கி இந்தக் கல் இன்னும் நின்று கொண்டிருக்கிறது.

பாகூர், 15-5-68
ஜெயசீலன்

Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor:, T. Sadasivam



இளமையின் எழில் ததும்பும் வதனம்
பூவிலும் மென்மையான சருமம் பெறுங்கள் !

...அதற்கு உங்கள் சருமத்தின் இயற்கையான ஈரத் தன்மை மாறாமல் பாதுகாப்பது அவசியம்

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமிலுள்ள பிரத்தியேகக் கலவை 'ஹ்யுமெக்டன்ட்' சருமத்தின் இயற்கையான ஈரத்தை உலராமல் காக்கிறது. இதனால் பருவகால மாறுதல்களாலோ, தூசு முதலியவற்றாலோ, சருமம் வறட்சியடையாமல் மிருதுவாக இருக்கிறது. துல்லிய வெண்பனி போன்ற பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள் வதனத்திற்கு இளமை எழிலையும், மென்மை சோபையையும் அளிக்கும்.

பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தனியாகப் பூசிக் கொண்டாலே உங்கள் முகம் பொலிவுடன் விளங்கும். அல்லது முகத்தில் முதலில் பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீமைத் தடவி அதன் மேல் பவுடர் போட்டுக் கொண்டால் பவுடர் ஒரே சீராகப் படிந்து முகம் மாசு மறுவில்லாமல் திகழும் !



பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—உலகத்து அழகிகளின் வதனத்தில் மிளிர்வது

சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. யில் இணைக்கப்பட்டது) P.6990

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் 40 சதம்
தபால் செலவு தனி